# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-18 Issue-3 மார்ச்-2025 ஷாபான்-ரமழான் 1446


# பைத்துல் முகத்திஸ்-ம் காஸா போரும் இப்போதைய நிலை!

## ரமழான் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை அல்குத்ஸ் தினம்

# செய்தி ஊடகங்கள்

## உண்மையின் பக்கமா? அல்லது வெறுப்பின் தளமா?




## நோன்பு ஏன் கடமையாக்கப்பட்டது.!

சகோதர சமுதாயத்தின் சகோதரியின் கருத்து...

# அன்பகம்

## இஸ்லாமியக் கல்விக்கூடம்

Sponsored by : Darul Islam Foundation Trust (Regd)



**இந்த "அன்பகங்கள்" - இஸ்லாமியக் கல்விக் கூடங்கள்.**
**எங்கள் 45 ஆண்டுகால அனுபவத்தின் அடிப்படையில் முகிழ்ந்தவை.**

2007ஆம் ஆண்டு முதலே இயங்கி வருகிறது. இன்றளவும் 2198 மாணவர்கள் பயின்று சென்றிருக்கின்றார்கள். இவர்கள் 619 குடும்பங்களைச் சார்ந்தவர்கள்.

கும்பகோணம், அன்பகம், குடும்பத்தோடு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்காக அமைக்கப் பெற்றதே. அதேநேரத்தில், தனியாக இஸ்லாத்தை ஏற்றுக்கொள்பவர்களும், அனுமதிக்கப்படுகின்றார்கள். கல்வி கற்று சான்றிதழ் பெற்றுச் செல்கின்றனர்.

- கல்விக் காலம் மூன்று மாதங்கள். சில மாணவர்கள் தேர்ச்சி பெறும்வரை தங்க வைக்கப்படுகின்றார்கள்.
- உணவு, உடை, உறையுள், மருத்துவச் செலவுகள், போக்குவரத்துச் செலவுகள், கத்னா செலவுகள், பாட நூல்கள் அனைத்தும் இலவசம்.
- கர்ப்பிணி பெண்கள் இஸ்லாத்தை ஏற்றால் அவர்களுடைய பிரசவ செலவுகள் வரை அனைத்து உதவிகளும் இலவசம்.
- இஸ்லாத்தை ஏற்றுக்கொள்பவர்கள் வழக்குகளைச் சந்தித்தால், முறையான சட்ட உதவிகள், அதில் எதிர்ப்படும் செலவினங்கள், இவற்றையும் சந்திக்கின்றோம்.
- இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பலருடைய முந்தைய வழக்குகளில், சட்ட உதவிகள் வழி வென்றிருக் கின்றோம்.
- சில பெண்கள் / ஆண்கள் - இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதையே வழக்காக மாற்றி இருக்கின்றார்கள். இஸ்லாத்தின் எதிரிகள். அவற்றில் பல சிறிய வழக்குகளிலும், பல பெரிய வழக்குகளிலும் வெற்றி பெற்றிருக் கின்றோம். அல்ஹம்துலில்லாஹ்.

இவற்றோடு தாஃவா களத்தில் எதிர்ப்படும், பிரச்சனைகளுக்கு அனைவரும் அணுகும் மையமாகவும் செயல்படுகின்றது அன்பகம்.

அஃதோர் கல்விக் கூடமாகவும் தாஃவா களத்தில் வரும் பிரச்சனைகளிலும் தீர்வு மையமாகவும் செயல்படுகின்றது.

இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் உறுதிப்பிரமாணம் அரசு கெஜட்டுகளில் பெயர் மாற்றம் ஆகியவற்றையும் செய்து தருகின்றோம், செலவுகளையும் ஏற்றுக்கொள்கின்றோம்.





**நோன்பு காலங்களில்**

நோன்பு காலங்களில் தாங்கள் வசியுமிடங்களில் நோன்பு நோற்கும் வசதிகள் இல்லாதவர்கள், அன்பகத்தில் வந்து தங்கி தங்கள் மார்க்கக் கடமையை இனிதே முடித்துச் செல்கின்றார்கள். பெருநாள் புத்தாடைகள் பெறுகின்றார்கள். இப்படிப் பொங்கிப் பெருகும் பெருநாள் மகிழ்ச்சியில் மூழ்க வைக்கின்றோம்.

அல்ஹம்துலில்லாஹ்.

### திருப்பூர்:

**பெண்களுக்கான அன்பகம்**
8/34, அக்ரஹார புதூர்,
திருப்பூர்-641 663,
பேசி-9655135154

### மேட்டுப்பாளையம்:

**ஆண்களுக்கான அன்பகம்**
51/13A-31, மதீனா நகர்,
சிறுமுகை ரோடு,
மேட்டுப்பாளையம்-641 301
பேசி-8220677041

### கும்பகோணம் :

ONLINE DAWAH பேசி-8870960662

**எங்கள் தாஃவா பணிகளுக்கும் இதரப் பணிகளுக்கும் தாராளமாக நிதி உதவியைத் தாருங்கள், அல்லாஹ்விடம் அளவிலா நற்கூலிகளைப் பெறுங்கள்...**

செக், டி.டி.அனுப்புவோர் : DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயருக்கு எடுத்து பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்

**தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்**
52/1, மண்ணடி தெரு, 4-வது மாடி, அறை எண்.7, மண்ணடி, சென்னை - 600 001.

Please Draw your Cheques / DD in Favour of DARUL ISLAM FOUNDATION TRUST
and send to : 52/1, Mannadi Street, 4th Floor, Room No.7, Mannadi, Chennai - 600 001.

VAIGARAI VELICHAM
62889509

கனரா வங்கி கிளைகளில் எங்கிருந்து வேண்டுமானாலும் நமது டிரஸ்ட் அக்கவுண்டில் நேரடியாக தங்களது நிதி உதவிகளை செலுத்தலாம்.

G Pay 81481 29887

CANARA BANK, ST.MARY'S ROAD BRANCH, CHENNAI
SB. A/C. 1287101017301 IFSC CODE : CNRB0001287

# வைகறை வெளிச்சம்

மார்ச்-2025 ■ ஷாபான்-ரமழான் 1446

■ தனிஇதழ் - ரூ. 40
■ ஆண்டுச் சந்தா - உள்நாடு - ரூ. 480
■ வெளிநாடு - ரூ. 5000

**வைகறை வெளிச்சம்**
சந்தா செலுத்துங்கள்

VAIGARAI VELICHAM
62889509

Collect payments from any of these apps

மனிதர்களே!
நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழந்து) தெரிந்தவன்.

அல்குர்ஆன்-49:13.

## உள்ளே...!




4




10

அல்குத்ஸ்-ன் முக்கியத்துவம் - 6
பிராமினிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 23
ஃபாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு - 28
நமது தாஃவா பணிகளில் ஒரு மைல்கல்..! - 30
நான் ஹஜ்ஜில் கண்டதும் கேட்டதும் - 31
தீண்டாமை ஒழிய எளிய வழிமுறை என்ன? - 43
மனித வாழ்வு பெற மதம் மாறுவீர்! - 44
அம்பேத்கரை நான் தலைவராக ஏற்றுக்கொண்டேன் - 46
மகளிர் மன்றம் - 48
மருத்துவம் - 52
நோன்பு ஏன் கடமையாக்கப்பட்டது.! - 55
நோன்பெனப்படுவது... - 57
சிலுவைப் போர் 2.0 - 58
தலையங்கம் - 60

All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts only



# பைத்துல் முகத்திஸ்-ம் காஸா போரும் இப்போதைய நிலை!

## ரமழான் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை அல்குத்ஸ் தினம்

### இப்போது.. 2025இல் அல்குத்ஸ்/அல்-அக்ஸா?

*2024 ரமழானில், என்னென்ன கெடுபிடிகளைக் கட்டவிழ்த்துவிட்டார்ளோ, அதே கெடுபிடிகளை ஜியோனிஸ்ட்டுகளான யூதத் தீவிரவாதிகள் 2025 ரமழானிலும் கட்டவிழ்த்து விட்டு வருகின்றார்கள்.*

*இந்த ரமழானில் 2000 பேருக்குமேல் அல்அக்ஸாவில் தராவீஹ் தொழுதிட அனுமதி இல்லை எனப் பிரகடனப்படுத்தினார்கள்.*

*ஆனால் இஸ்லாத்தை முன்வைத்துப் போராடும் போராளிகள் உலக மக்களுக்கும் பாலஸ்தீனில் வாழும் முஸ்லிம்களும் அல்-அக்ஸா நோக்கிப் பயணம் செய்யுங்கள் என அறிவித்தார்கள். இதனைத் தொடர்ந்து இந்த ரமழானில் முதல் நோன்பில் 90,000 பேர் தராவீஹ் தொழுகையைத் தொழுதார்கள்.*

*முதல் தராவீஹ் மார்ச்-1,2025இல் இஸ்ரேலிய இராணுவம், பாதுகாப்புப்படை என்ற பெயரில் காவல்துறை இவையெல்லாம் கொடுத்த நெருக்கடிகள், அடிதடிகள், அனைத்தையும் கடந்து 75,000 பேர் தராவீஹ் தொழுகையைத் தொழுதார்கள். காலை தொழுகையை (பஜ்ர்) தொழுகையை 40,000 பேர் தொழுதார்கள்.*

*மார்ச்-7,2025 ஜும்ஆ தொழுகையில் 90,000 பேர் கலந்துகொண்டார்கள்.*

*மார்ச்-14,2025 ஜும்ஆ தொழுகையில் 80,000 பேர் கலந்துகொண்டார்கள்.*

*மார்ச்-21,2025 ஜும்ஆ தொழுகையில் 80,000 பேர் கலந்துகொண்டார்கள்.*

*கடுமையான இஸ்ரேலில் அடாவடித் தனத்தைத் தாண்டித்தான் இந்தத் தொழுகை 50-க்கும் மேற்பட்ட சோதனைச் சாவடிகளைக் கடந்துதான் அல்-அக்ஸாவுக்குள் போக முடிந்தது.*

*இதன்மூலம் அல்அக்ஸா யூத மயமாவதைத் தடுத்தேவிட்டார்கள். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.*

#### அல்-அக்ஸாவை நோக்கிய மக்கள் பெருவெள்ளம்

*நடந்துகொண்டிருக்கும் ஹமாஸ்-இஸ்ரேல் போருக்கான ஹமாஸ் வைத்த பெயர்* Operation "Al Aqsa Flood". *அதாவது அல்-அக்ஸாவை நோக்கிய மக்கள் பெருவெள்ளம் அல்லது அல்-அக்ஸா புயல்.*

*ஹிஸ்புல்லாஹ் என்ற லெபனானைச் சார்ந்த இஸ்லாமியப் போராளிகள் தங்களில் ஷஹீதாகுபவர்களை* Martyrs in the way of Al-Quds.



vaigarai velicham official

அல்குத்ஸ்-இன் பாதையில் ஷஹீதானவர்கள் (அ) தங்கள் இன்னுயிரை நீத்தவர்கள் என்றுதான் அழைத்தார்கள்.

இப்போது நடக்கும் காஸா போரும் இதர நடவடிக்கைகளும் யூதமயமாக்கப்படும் அல்குத்ஸ்-(ஜெரூசலம்), அதில் வீற்றிருக்கும் அல்-அக்ஸா மஸ்ஜித் ஆகியவற்றை மீட்பது என்ற இலக்கோடு நடத்தப்படுபவை.

ஏனெனில் யூதத் தீவிரவாதிகள் என்ற ஜியோனிஸ்ட்டுகள் அல்-அக்ஸா மஸ்ஜித்-ஐ யூத மயமாக்கிடும் வேலைகளை நீண்ட நெடும் ஆண்டுகளாகவே செய்து வருகின்றார்கள்.

இதற்காக பல யூத அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. Women for temple. அதாவது ஆலயத்தைக் கட்டியெழுப்ப பெண்கள் என்றொரு அமைப்பும் செயல்பட்டு வருகின்றது. இதைப் பார்த்துத்தான், இங்கே கோயில்களை மீட்டும், பெண்கள் அமைப்பு ஒன்று செயல் படுகின்றது. அந்த அமைப்புத்தான், வாரணாசி, மதுரா ஆகிய இடங்களில் ஆண்டாண்டுகாலமாக, வாழ்ந்துவரும் மஸ்ஜித்களை அபகரிக்கத் துடிக்கின்றன.

அதேபோல்தான் அல்-அக்ஸா மஸ்ஜித்-இன் கீழ் சாலமன் ஆலயம் இருந்தது என்ற கட்டுக்கதையும், அந்த இடத்தில்தான் அல்-அக்ஸா மஸ்ஜித் கட்டப்பட்டுள்ளது என்ற ஆகாச கற்பனையும். இதே கதையைத்தான் இங்கே இந்துத்துவ பாசிஸ்ட்டுகள், பாபரி மஸ்ஜித்-ஐப் பற்றிப் பேசியதும்,

ஒரு காமுகன் நீதிபதியானபோது - ஒரு பாசிஸ்ட்டு நீதிபதியானபோது, பாபரி மஸ்ஜித் பறிபோனது.

ஆனால் அங்கே, பாலஸ்தீனில், போராளிகள் இலட்சக்கணக்கில் தங்கள் உயிரைத்தந்து, அல்-அக்ஸா பறிபோகாமல் பாதுகாத்து வருகின்றார்கள். இதை இன்று நாம் கண்கூடாகக் கண்டு வருகின்றோம்.

மொத்தத்தில் இந்திய பாசிசம் என்ற இந்துத்துவ தீவிரவாதம், யூத ஜியோனிசத்தின் "ஈ அடித்தான் காப்பி"

**கிருஸ்தவம் - ஜியோனிஸம் - இஸ்லாம்**

எப்படி ஜியோனிஸ்ட்டுகள் என்ற யூதத் தீவிரவாதிகள், மஸ்ஜித் அல்-அக்ஸாவின் இஸ்லாமிய அடையாளங்களை அழிக்க முற்படு கின்றார்களோ, அதேபோல் கிருஸ்தவ அடையாளங்களையும் அழிக்க முற்பட்டு வருகின்றார்கள்.

அது இன்றைய நாள்களில் அதாவது 2000 (இரண்டாயிரம்) ஆண்டு தொடக்கத்திலிருந்தே நடைபெற்று வருகின்றது.

இதனை உலகெங்கிலும் வாழுகின்ற கிருஸ்தவர்களைவிட ஜெரூசலம், பெத்தலஹேம் ஆகிய இடங்களில் வாழும் கிருஸ்தவர்கள் நன்றாக அறிவார்கள். The Supreme Council of Churches. கிருஸ்தவ ஆலயங்களின் உச்சபட்ச குழு இதை பலமுறை அறிவித்தே இருக்கின்றது.

ஜெரூசலத்தின் தலைமை பாதிரி அவர்கள் இந்தப் போரின் தொடக்க நாட்களில் அல்-அக்ஸா மஸ்ஜித்-க்குள் நுழைந்து சுற்றிப் பார்த்தார்கள். கிருஸ்தவர்களின் அடையாளங் களையும், வழித்தடங்களையும் பார்த்தார்கள். பார்த்துவிட்டு, போராளிகள் வெல்ல வேண்டும். அப்போது மட்டுமே ஜெரூசலம் என்ற புனித பூமியின் கிருஸ்தவர்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படும் என்றார்.

கி.பி 634,635 கலீபா உமர் (ரழி) அவர்களின் காலந்தொட்டே இன்றளவும் 2025 வரை, கிருஸ்தவர்களின் அடையாங்களும், பாத்யதை களும் பாதுகாக்கப்பட்டே வருகின்றன. அதிசயம். ஆனால் உண்மை.

ஏனெனில் அந்த வட்டார நகராட்சிகள் இன்னும் இன்றும், முஸ்லிம்களின் கைகளில்தான் இருக்கின்றன. அந்த முஸ்லிம்கள் இஸ்லாத்தின் வழிமுறையைத்தான் பின்பற்றுகின்றார்கள்.

2023 கிருஸ்தவர்களின், கிருஸ்துமஸ் விழாக்கள், கிருஸ்தவ ஆலயங்களின் ஆணை களின்படி கிருஸ்தவ விழாக்கள் மட்டுப் படுத்தப்பட்டன.

பெத்தலஹேமிலுள்ள ஏசு-கிறிஸ்து பிறந்த இடத்திலுள்ள கிருஸ்தவ ஆலயத்தில் குழந்தை ஏசு இடிபாடுகளுக்கிடையே கிடப்பதைப் போன்ற படமே கிருஸ்துமஸ் அட்டைகளாக உலகெங்கும் டிரண்ட் ஆயின. அதாவது பிரபல்யம் ஆயின.

இந்தப் படம் காஸாவில் இஸ்ரேலிய ஆக்கிர மிப்புப்படைகள் குழந்தைகளைக் கொலை செய்வதை அடையாளப்படுத்திடும் வகையில் அமைந்தது. இதன்வழி அல்குத்ஸ் பகுதி

கிருஸ்தவர்கள் வழி உலகெங்கிலும் வாழும் கிருஸ்தவ பெருங்குடியினர் யூத ஆக்கிரமிப்பு களுக்கு எதிராகவும் இருக்கின்றார்கள் என்பதை தெளிவுபடுத்தின.

கிருஸ்தவர்களின் தலைவர் போப் பிரான்சிஸ் அவர்கள் காஸாவில் நடப்பது போர் அல்ல. கூட்டுப்படுகொலை, அதனை முழு விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று கூறி வருகின்றார்கள். (Various sources. 18/11/2024) தன் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ள இன்றைய நிலையிலும், அதையே கூறியுள்ளார்கள்.

காஸா படுகொலைகளை நிச்சயம் புலன்விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டின் உட்பொருள், இஸ்ரேலை தண்டிக்க வேண்டும் என்பதே!

அதேபோல், Patriarchal Vicar of the coptic orthodox church அதாவது காப்டிக் புராதன ஆலயம் என்ற கிறிஸ்தவ அமைப்பைச் சார்ந்த தலைமை பாதிரி ஜனவரி 6,7,2025இல் ஜெரூசலம் வந்தார். மான்கர் சதுக்கம் (Manger Square) திலிருந்து ஜெரூசலம் வரை நடுஇரவு ஊர்வலம் ஒன்றை நடத்தினார். அப்போது காஸாவில் நடப்பது கூட்டுப்படுகொலைகள் அதை சர்வதேசமும் ஒன்றாய் இணைந்து தடுக்க வேண்டும் என்றார்.

இப்படி கிருஸ்தவர்களும், ஜெரூசலம் அல்குத்ஸ், அல்-அக்ஸா ஆகியவை முஸ்லிம் களின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். அப்போது மட்டுமே கிருஸ்தவர்களின் வழிபாட்டு உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று நம்புகிறார்கள். அதற்குப் பிரார்த்தனையும் செய்கிறார்கள்.

வரலாற்றின் ஒரு காலக்கட்டம் வரை கிறிஸ் தவர்களே அல்-அக்ஸாவை, கபளீகரப்படுத்தி னார்கள். 90 ஆண்டுகள் (1097 முதல் 1187 வரை) அவர்களின் கைகளுக்குச் சென்றது. பின்னர் 1187இல் மாவீரன் சுல்தான் சலாஹுத்தீன் அய்யுபியினால் மீட்கப்பட்டது.

இந்த 90 ஆண்டுகளும் அல்-அக்ஸாவின் மீது சிலுவையே நின்றது. ஆனால் யூதர்கள் கிறிஸ்தவ அடையாளங்களையும் அழித்து யூத மயமாக்கலை விரைவுபடுத்தி வருகின்றார்கள். இந்நிலையில், முஸ்லிம்களே இஸ்லாத்தை முன்வைத்து போராளிகளே ஒரு தீர்வு. இது கிறிஸ்தவ பாதிரிகள் உலகின் தலைகீழ் மாற்றம், வரையிட்டுக் காட்டப்பட வேண்டிய நிகழ்வு.

ஆனால் இஸ்லாமியப் போராளிகளுக் கெதிராக யூத பயங்கரவாதத்திற்கு இன்றளவும் பெரிய அளவில் உதவி செய்து வருகிறது ஐரோப்பிய ஆட்சியாளர்களே! என்பதையும் வரலாறு மறக்காது. மறைக்காது. ■ -MGM

# அல்குத்ஸ்-ன் முக்கியத்துவம்

**நான்** நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களிடம் கேட்டேன் "பூமியில் எது முதல் மஸ்ஜித்?" "புனிதமிக்க மஸ்ஜிதுல் ஹரம் (காபா)" என பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள். அடுத்து எது? என நான் கேட்டேன். தொலைவில் உள்ள (மஸ்ஜிதுல் அக்ஸா) என பெருமானார் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்...

- அறிவிப்பு : அபூதர் (ரலி), முஸ்லிம்

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் "மூன்று பள்ளிவாசல்களைத் தவிர வேறெங்கும் நன்மையை நாடி பயணம் செய்வது என்பது இல்லை. ஒன்று மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுன் நபவி என்ற என்னுடைய பள்ளிவாசல், பைத்துல் முகத்திஸ் என்ற மஸ்ஜிதுல் அக்ஸா".

பாலஸ்தீனில் - ஜெரூசலத்தில் அமைந் துள்ளது அல்-அக்ஸா மஸ்ஜித்.

ஆதாரம்: புகாரி, முஸ்லிம்

இந்த ஜெரூசலம் (பைத்துல் முகத்திஸ்) அதில் அமைந்துள்ள அல்அக்ஸா மஸ்ஜித் தான் நமது முதல் கிப்லா "தொழுகையில் முன்னோக்குமிடமாக" இருந்தது.

பெருமானார் (ஸல்) அவர்களின் பெயரால் நிறுவப்பட்ட மதினா பள்ளிவாசலிலும் கிப்லா இதை நோக்கியே அமைந்திருந்தது.

17 மாதங்களுக்குப் பின் பின்வரும் இறைவசனம் கிப்லாவை "காபா"வை நோக்கித் திருப்பிற்று. நபியே "நாம் உம்முகம் அடிக்கடி வானத்தை நோக்கிட காண்கின்றோம்.

எனவே, நீர் விரும்பும் கிப்லாவின் பக்கம் உம்மைத் திடமாகத்திருப்பி விடுகின்றோம். ஆகவே நீர் இப்போது (மக்காவின்) மஸ்ஜிதுல் ஹராம் பக்கம் உம் முகத்தைத் திருப்பிக் கொள்ளும். (முஸ்லிம்களே) நீங்கள் எங்கிருந் தாலும் உங்கள் (முகங்களை) அந்தப் பக்கம் திருப்பிக்கொள்ளுங்கள்."

விண்ணேற்றம் (மிஹ்ராஜ்) என்ற வரலாற்று சிறப்புமிக்க பயணத்தின் மையப் பகுதி அல் அஸ்கா மஸ்ஜித்தான்.

(காண்க: அல்குர்ஆன் 17:1)

கி.பி. 637 ஜெரூசலத்தை கலீபா உமர் (ரழி) மீட்டு விண்ணேற்ற இடத்தில் மஸ்ஜிதுல் அக்ஸாவை கட்டினார்கள்.

705 அப்துல் அல் மாலிக் அவர்களாலும் தொடர்ந்து அவரது மகனாலும் விரிவாக்கம் செய்யப்பட்டது.

746 நில நடுக்கம் ஒன்று அதை இடித்து விட்டது.

754 அப்பாசி கலீபா அல்மன்சூர் அவர்கள் அதனை கட்டி எழுப்பினார்கள்.

780 அல்மஹ்தி அவர்கள் அதனை அழகுப்படுத்தினார்கள்.

1033 நிலநடுக்கம் ஒன்று அதனை மீண்டும் குலைத்தது.

1035 பாத்திமத்து கலிபா அல் அஸ்ஸாஹிர் மீண்டும் அக்ஸாவை கட்டினார்கள். அதுவே இப்போதும் நின்று கொண்டிருக்கிறது.

1095 சிலுவைப் போர்களை தொடங்கினார்கள் கிறிஸ்தவர்கள், போப் அர்பன் II -இன் தலைமையில்.

2009 - ஜூலை 31-ம் நாளும் இதைப் போல் மஸ்ஜிதுல் அக்ஸாவில் புகுந்தார்கள். ஒவ்வொரு முறை இவர்கள் புகும் போதும் முஸ்லிம்கள் பலர் தங்கள் உயிரை தந்து இவர்களை தடுக்கின்றார்கள்.

2010-ல் எகிப்தில் ஏற்பட்ட இஸ்லாமிய எழுச்சிக்கு பின் பாலஸ்தீனுக்கும், எகிப் திற்கும் இடையே எழுப்பப்பட்டிருந்த தடுப்புச் சுவர்கள் அகற்றப்பட்டன. இதனால் பாலஸ்தீன பெருமளவில் முஸ்லிம்களுக் கிருந்த நெருக்கடிகள் குறைந்தன. குறிப்பாக மருத்துவ வசதிகளும், மருந்துகளும் கிடைத்தன. இப்போது உள்ள இராணுவ ஆட்சியில் இந்த நிவாரணம் தடை செய்யப்பட்டுவிட்டது.

ஆனால் இஸ்ரேல் ஜெரூசலத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமித்து, ஒரு தடுப்புச் சுவரை எழுப்பியுள்ளது. முஸ்லிம்களுக்கு சொந்த மான இடங்களை ஆக்கிரமித்து, அங்கு யூதர்களை குடியமர்த்தி வருகின்றது. இதற்கு அமெரிக்கர்களும், ஐரோப்பிய நாடுகளும் தொடர்ந்து உதவி செய்கின்றன. ஆனால் இறுதி வெற்றியை அல்லாஹ் முஸ்லிம் களுக்கே வாக்களித்துள்ளான். (அல்ஹம்து லில்லாஹ்)

37 ஆண்டுகளாக உலக முஸ்லிம்களின் கவனத்தை அல்குத்ஸ் இன் பக்கம் திருப்பி வருகின்றோம். இன்று உலகமெங்கும் இந்த தினம் பொதுமக்களின் கவனத்தை கவர்ந்து வருகின்றது. இதனால் இந்த நாளில் நடக்கும் நிகழ்ச்சிகளை தடை செய்திட வேண்டும் என யூதர்கள் போராடி வருகின்றார்கள்.

**அல் அக்ஸாவுக்கு தொடரும் ஆபத்து**

அன்றைய நாள் தொட்டே யூதர்கள் இந்த பைத்துல் முகத்திஸிலுள்ள அல்-அக்ஸா மஸ்ஜித்-ஐ தங்களுடையதாக ஆக்கிக் கொள்ள பல்வேறு தீவிரவாத செயல்களையும் செய்து வருகின்றார்கள்.

அல்-அக்ஸா பள்ளிவாசல் இருந்த இடத்தில்தான் தங்களுடைய ஆலயங்கள் இருந்தன என்றும், தங்களுடைய ஆலயத்தை இடித்துவிட்டுத் தான் அந்த இடத்தில் பள்ளிவாவலை எழுப்பி இருக்கின்றார்கள் என்றும், பொய்களையும், புனைந்துரை களையும் பரப்பிவருகின்றார்கள்.

இஸ்லாத்தின் இரண்டாவது கலீபாஃ, உமர் இப்னு அல் ஹத்தாப் (ரழி) அவர்கள் தாம். கி.பி. 637ஆம் ஆண்டு அல்-அக்ஸா மஸ்ஜித்-ஐ கட்டினார்கள். அந்த இடம் குப்பை கூளங்கள் நிறைந்த இடமாகவே இருந்தது. அங்கு எந்த ஆலயமும் இருக்க வில்லை. இதற்கு உமர் (ரழி) அவர்களுடன் அந்த இடத்திற்குச் சென்ற கிறிஸ்தவ பாதரி சாட்சி. ஆனால் இன்றைக்கு யூதர்கள், ஒரு கதையைக்கட்டி விடுகின்றார்கள். அது அன்று நின்றிருந்த எங்கள் ஆலயத்தை இடித்துவிட்டுத்தான் “அக்ஸா மஸ்ஜித்” நிறுவப்பட்டிருக்கின்றது என்றொரு பொய்யைப் பரப்பி வருகின்றார்கள்.

இந்தப் பொய்யை உண்மையாக்கும் வகையில் புனைந்துரைகளை ஆய்வுகளாக வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நூல்களையும் வெளியிட்டுக் கொண்டிருக் கின்றார்கள்.

இதுவல்லாமல் தங்களுக்கே உரிய வன் முறைகளையும் கட்டவிழ்த்து விட்டு வருகின்றனர். “அல் அக்ஸா” பள்ளிவாசலை அகழ்ந்து பார்த்திட வேண்டும் என மஸ்ஜித் - இன் - அஸ்திவாரத்தை தோண்டிடத் தொடங்கினார்கள். முஸ்லிம்கள் தங்கள் உயிரைத் தந்து காப்பாற்றினார்கள்.

ஜூலை-17,2014இல் இப்போதைய தலைமை யூத மதகுரு யஹீதா கிளிக் என்பவர், 46 யூதர்களோடு சேர்ந்து பள்ளி வாசலில் பூஜை நடத்தச் சென்றான். தடுத்தார்கள் முஸ்லிம்கள், பல முஸ்லிம் களைக் கொலை செய்தார்கள். இந்த யூத மதகுருதான் அல்-அக்ஸா மஸ்ஜித் இருக்கு மிடத்தில் யூத ஆலயம் எழுப்புவதற்காக நிர்மானிக்கப்பட்ட அறக்கட்டளையின் தலைவர். Temple Mount | Heritage Foun dation என்பதுதான் அந்த அறக்கட்டளையின் பெயர்.

### மஸ்ஜித் அக்ஸாவின் தற்போதைய நிலை?

மஸ்ஜித் அக்ஸா ஓர் யூத ஆலயம் என்றும், அதை இடித்துவட்டு அந்த இடத்தில்தான் பள்ளிவாசல் அதாவது மஸ்ஜித் அக்ஸா கட்டப்பது என்றும் யூதர்கள் ஓர் இமாலயப் பொய்யை பரப்பி வருகின்றனர்.

1967இல் மூன்று அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் நடந்த ஆறுநாள் போரில் மஸ்ஜிதுல் அக்ஸா இருக்கும் இடத்தை அதாவது அல்குத்ஸ் என்ற ஜெரூசலத்தை இஸ்ரேல் கைப்பற்றியது. அல்அக்ஸா மஸ்ஜித்-இன் அஸ்திவாரத்தைத் தோண்டத் தொடங்கியது. கேட்டதற்கு அதற்குக் கீழே இருக்கும் கட்டடத்தை கண்டுபிடிக்கிறோம் என்றார்கள்.

1973 எகிப்து இஸ்ரேல் மீது ஓர் அதிரடி தாக்குதலை நடத்தியது. இஸ்ரேல் எகிப்திடம் பணிந்து மீண்டும் மஸ்ஜித் அக்ஸா ஜோர்டானின் அறநிலைய அமைச்சகத் திடம் ஒப்படைக்கப்பட்டது.

மஸ்ஜித்-இன் நிர்வாகம் ஜோர்டானின் அறநிலை அமைச்சகத்திடம் ஒப்படைக்கப் பட்டாலும் அதன் வெளிபாதுகாப்பு ஜெரூசலம், காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தக காவல்துறை இஸ்ரேலின் கீழ் இயங்குவது. ஆனால், நடைமுறையில் இஸ்ரேலின் இராணுவம்தான் அல்-அக்ஸா மஸ்ஜித்-ஐ சுற்றியுள்ள எல்லா நடவடிக் கையும் கட்டுப்படுத்துகின்றது.

பென்கௌவ்ர் - இஸ்ரேலில் ஓர் அமைச்சர் அவரது பெயர் பென் - கௌவர். இவர். தேசியப் பாதுகாப்புப் படை என்றொன்றை வைத்திருக்கின்றார். இவருக்கு ஓர் அதிகப் பதவி அது இந்த அக்ஸா மஸ்ஜித்-இல்


vaigarai velicham official

வருவோர் போவோருக்கு அனுமதி வழங்குவது. இவர் எப்போதும் தன் தேசியப் பாதுகாப்புப் படையைக் கொண்டு அல்-அக்ஸாவில் புகுந்து பிரச்சினை செய்து கொண்டிருப்பார்.

அத்தோடு அல்அக்ஸாவின், உட்பகுதியை யூத மயமாக்கிக் கொண்டிருந்தார். முஸ்லிம்களின் வருகையைக் கட்டுப்படுத்தினார். வருபவர்களைக் கஷ்டப்படுத்தினார்.

இந்நிலையில்தான் அல்-அக்ஸா ஸ்டார் அல்-அக்ஸா புயல் என்ற பெயரில் ஒருபெரும் போரை ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் ஆகிய போர்ப்படைவீரர்கள் அக்டோபர் 7,2023இல் இஸ்ரேல் மீது நடத்தினார்கள்.

தாக்குதலைத் தொடர்ந்து, அல்-அக்ஸாவில் கெடுபிடிகளை அதிகப்படுத்தினார்கள். இஸ்ரேலிய கூட்டுப்படை கொலை படைகள் இந்தப் போர் தொடங்கி 22 வெள்ளிக்கிழமைகளில் சில வெள்ளிக் கிழமையில் யாரையுமே அல்-அக்ஸா மஸ்ஜித்-க்குள் விடவில்லை. தொழ வந்தவர்கள், அல்-அக்ஸாவுக்கு வெளியேயுள்ள தெருக்களிலும், கட்டிடங்களுக்கு இடுக்கிலும் தொழுதார்கள்.

ரமழானில் யாரையும் அல்-அக்ஸா மஸ்ஜித்-இல் தொழ விடமாட்டோம் என அறிவித்தார்கள். இஸ்ரேலிய ஆட்சியாளர்கள்.

ஆனால், ஹமாஸ்-இன் போர்ப்படைத் தளகர்த்தார். யஹ்யா சின்வர். ஜெரூசலம் வாழ் முஸ்லிம்களிடம், அல்-அக்ஸா பெருவாரியாகச் சென்று தொழுங்கள், எதைப் பற்றியும் கவலைப்படாதீர்கள், அதில் உயிரைத் தந்தாலும் சரி எனப் பிரகடனப் படுத்தினார்.

இதைத் தொடர்ந்து முஸ்லிம்கள் இஸ்ரேலின் அனைத்துக் கெடுபிடிகளையும் கடந்து, முதலில் 80,000 என்பது ஆயிரம் பேர், பின்னர் 1,00,000 ஒரு லட்சம் பேர். 23-03-2024 வெள்ளிக்கிழமை அன்று 1,20,000 ஒரு லட்சத்து இருபதாயிரம் பேர் - ஜூம்ஆ தொழுதார்கள். வெறும் 10,000 பேரை மட்டுமே அனுமதிப்பேன் எனச் சொன்ன இஸ்ரேல் விழிபிதுங்கி நின்றது.

**ரமழான் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை**

அல்குத்ஸ் தினம் அல்லது அல்குத்ஸ் - மீட்பு தினம் OIC என என்ற இஸ்லாமிய நாடுகளின் பேரவை அறிவித்ததை,

அதை தமிழகத்தில் ஓர் மக்கள் இயக்கமாக மாற்றி வருகின்றது. தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் மற்றும் நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்.

எதிர்வரும் (ரமழானில்) கடைசி வெள்ளிக் கிழமை அல்குத்-ஐ மீட்க சபதமேற்போம். இன்ஷா அல்லாஹ்.

- MGM






# செய்தி ஊடகங்கள்

## உண்மையின் பக்கமா?
### அல்லது
## வெறுப்பின் தளமா?

**இந்த** அறிக்கையின் முந்தைய அத்தியாயங்கள், CAA, நாடு தழுவிய போராட்டங்கள் மற்றும் வடகிழக்கு டெல்லி வன்முறை குறித்த பொது விவாதத்தில் ஊடக செய்திகள் மற்றும் விவாதங்களின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகின்றன. டிசம்பர் 2019 முதல் பிப்ரவரி 2020 வரை அதிகம் பார்க்கப்பட்ட செய்தி சேனல்களில் ஒளிபரப்பப்பட்ட இந்த பிரச்சினைகள் குறித்த விவாதங்களின் போக்கை இந்த அத்தியாயம் பகுப்பாய்வு செய்கிறது.

**ஆய்வுக்கான காரணம்**

ஒரு ஜனநாயக நாட்டில், சர்ச்சையை உருவாக்கும் அல்லது மோதலுக்கு வழி வகுக்கும் சாத்தியமுள்ள பிரச்சனைகளில், ஒரு செய்தி ஊடகத்தின் பங்கு மிகவும் முக்கியமானது. செய்திகளை வழங்கும்போது எந்த ஒரு பாரபட்சமுமின்றி உண்மைகளை துல்லியமாகவும் சுதந்திரமாகவும் வழங்க வேண்டும்.

நவம்பர் 2021இல், செய்தி ஒளிபரப்பு மற்றும் டிஜிட்டல் தரநிலைகள் ஆணையம் (NBDSA), ஒளிபரப்பு மற்றும் நெறிமுறை தரநிலைகளைப் பின்பற்றத் தவறியதற்காக, டைம்ஸ் நவ் (Times Now) தொலைக்காட்சி செய்தி சேனலை, அதன் வலைத்தளத்திலிருந்து ஒரு பிரைம் டைம் (prime Time) நிகழ்ச்சியின் குறிப்பிட்ட அத்தியாயங்களின் அனைத்து நிகழ்ச்சிகளையும் நீக்குமாறு உத்தரவு பிறப்பித்தது.




செப்டம்பர் 2020இல் ஒளிபரப்பப்பட்ட இரண்டு அத்தியாயங்களும், 2020 டெல்லி வன்முறை தொடர்பான விசாரணையை மையமாகக் கொண்டிருந்தன. ஆணையத்தின் முன் உள்ள புகார்களின் முக்கிய அம்சம் என்னவென்றால், நிகழ்ச்சியின் தொகுப்பாளர்களால் வழிநடத்தப்பட்ட அத்தியாயங்கள், தனிநபர்கள் (அறியப்பட்ட சி.ஏ.ஏ. எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள்) விசாரிக்கப்படுவதைப் பற்றி ஒரு பக்கச்சார்பான பார்வையை வெளிப்படுத்தின.

நீதித்துறை மற்றும் பிற அறிக்கைகளை முன்னிலைப்படுத்தாமல், தில்லி காவல்துறையின் குற்றச்சாட்டுகளை முழுமையாக ஆதரித்தன. புகார்தாரர் மற்றும் ஒளிபரப்பாளர் ஆகிய இருவரின் வாதங்களையும் ஆராய்ந்து காட்சிகளை மதிப்பாய்வு செய்த பின்னர், என்.பி.டி.எஸ்.ஏ (NBDSA) “தொகுப்பாளர்கள் ஒருதலைபட்சமான முறையில் விவாதங்களை நடத்தவில்லை என்றும், ஆனால் நெறிமுறைகள் மற்றும் ஒளிபரப்பு தரநிலைகள் மற்றும் என்.பி.டி.எஸ்.ஏ வழங்கிய பல்வேறு வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள

அடிப்படை கொள்கைகளை மீறியதாகவும் கண்டறிந்தது. இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

CAA நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட முன்னேற்றங்கள் மற்றும் பிப்ரவரி 2020 வகுப்புவாத வன்முறைகள் குறித்த ஊடக அறிக்கைகள், விவாதங்கள் பற்றிய விரிவான பகுப்பாய்வு எதுவும் இல்லை. NBDSAஇன் உத்தரவு மூலம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுடன், அத்தகைய பகுப்பாய்வின் தேவை இன்னும் அவசியமானது. இந்த அத்தியாயம் அதற்கான ஓர் தொடக்கத்தை வழங்குகிறது.

**நோக்கம் மற்றும் வழிமுறை**

இந்த அத்தியாயத்தின் பகுப்பாய்வு, தொலைக்காட்சியில் அதிகம் பார்க்கப்பட்ட ஆறு பிரைம் டைம் நிகழ்ச்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டது. செய்தி சேனல்கள் (கிடைத்த இலக்கு மதிப்பீடு புள்ளி-TRP-தரவின் அடிப்படையில்). குறிப்பிட்ட காலத்திற்குள் ஒளிபரப்பப்பட்ட, CAA தொடர்பான பிரச்சினைகள், அதனுடன் தொடர்புடைய போராட்டங்கள் மற்றும் வன்முறை ஆகியவற்றில் கவனம் செலுத்திய அத்தியாயங்கள் பகுப்பாய்வுக்காக தொகுக்கப்பட்டன. அச்சு ஊடகங்கள் ஆய்வில் சேர்க்கப்படவில்லை.

அதிக பார்வையாளர்களைக் கொண்ட ஆறு செய்தி சேனல்களை நாங்கள் அடையாளம் கண்டோம்,அவற்றில் ஆங்கில சேனல்கள்,

ரிபப்ளிக் டிவி மற்றும் டைம்ஸ் நவ், மேலும் நான்கு இந்தி செய்தி சேனல்கள்

- ஆஜ் தக்
- ஜீ நியூஸ்
- இந்தியா டிவி மற்றும்
- ரிபப்ளிக் பாரத்.

■ தேர்ந்தெடுக்கப்பட்ட பிரைம் டைம் நிகழ்ச்சிகள்

- ஹல்லா போல் (ஆஜ் தக்)
- டிஎன்ஏ (ஜீ நியூஸ்)
- பூச்சா ஹை பாரத் (ரிபப்ளிக் பாரத்)
- ஹக்கிகத் க்யா ஹை (இந்தியா டிவி)
- தி டிபேட் (ரிபப்ளிக் டிவி) மற்றும்
- இந்தியா அப்ஃஃப்ரண்ட் (டைம்ஸ் நவ்) ஆகும்.

ஆராய்ச்சிக் குழு ஆய்வுக்கு உட்படுத்திய மாதங்களில் ஒளிபரப்பப்பட்ட இந்த நிகழ்ச்சிகளில் மொத்தம் 326 அத்தியாயங்களைத் தேர்ந்தெடுத்தனர். இது சுமார் 243 மணிநேர (14,580 நிமிடங்கள்) ஒளிபரப்பு நேரத்தைக் கொண்டுள்ளது. இந்த அத்தியாயங்கள் அந்தந்த சேனல்களின் வலைத்தளங்கள் அல்லது சமூக ஊடக கணக்குகள் மூலம் அணுகப்பட்டன.

பார்த்த காட்சிகளின் உள்ளடக்கம் மற்றும் பகுப்பாய்வு “கருப்பொருள்” அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டது. பார்வையிடப்பட்ட நிகழ்ச்சிகள் மற்றும் அவற்றின் தலைப்புகள், மக்களை கவரும் தலைப்புகள் மற்றும் ஹேஷ்டேக்குகளில் பயன்படுத்தப்படும் சொற்கள் என அனைத்தையும் அடிப்படையாகக் கொண்ட முழு பகுப்பாய்வும் ஆய்வுக் குழுவிடம் உள்ளது.

இந்தக் ஆய்வை நடத்துவதன் நோக்கம், பிரச்சினைகளைப் பற்றிய செய்திக்காணொளிகளிலும், உரைகளிலும் ஏதேனும் ஒரு “முறைகள்” (patterns) உருவாகின்றனவா என்பதை கண்டறிவதே. அவ்வாறு இருந்தால், இந்த “முறைகள்” ஆறு மிக அதிகம் பார்க்கப்படும் சேனல்கள், இந்த பிரச்சினைகளை தங்களது பார்வையாளர்களிடம் எவ்வாறு விளக்குகின்றன என்பதை வெளிப்படுத்தும்.

**முக்கிய நேர நிகழ்ச்சிகளின் உள்ளடக்கப் பகுப்பாய்வு**

தேர்ந்தெடுக்கப்பட்ட எபிசோடுகளின் பகுப்பாய்வில் சில மீண்டும் தோன்றும் (Repeated) “முறைகள்” வெளிப்படுகின்றன. பிரச்சினைகளை பற்றி செய்தி ஊடகங்கள் விவரிக்கும் வார்த்தைகள், நிலைப்பாடு மற்றும் மொழியை பயன்படுத்துவதில் ஒரே மாதிரியான அணுகுமுறைகள் காணப்படுகின்றன.

முஸ்லீம் சமூகத்திற்கெதிரான பாகுபாடு, இந்த நிகழ்ச்சிகளில் இடம்பெற்ற செய்திகளின் அடிப்படையாக தொடர்ந்து காணப்பட்டது. குடியுரிமை திருத்தச் சட்டம் (CAA) தொடர்பான பிரச்சினைகளை “ஹிந்துக்களுக்கு எதிராக முஸ்லீம்கள்” என்ற கோணத்தில் வடிவமைக்க ஒரு திட்டமிட்ட முயற்சி காணப்பட்டது. இதில் முஸ்லீம்கள் “பிரச்சனை ஏற்படுத்துபவர்கள்” அல்லது “நன்றி இல்லாத குடிமக்கள்” அல்லது “தேசிய நலனுக்கு விரோதமான” நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் என வரையறுக்கப்பட்டனர்.

இதை ஆதரிக்கும் வகையில் தொலைக்காட்சி




திரைகளில் ஹாஷ்டேக்குகள் மற்றும் தலைப்புகள் திரும்ப திரும்ப ஒளிபரப்புவதுதான், இந்த ப்ரைம் டைம் நிகழ்ச்சிகளின் முக்கியப் பகுதியாகும். ஊடகங்கள் தந்திரமாக ஒரு கோஷத்தை மீண்டும் மீண்டும் பயன்படுத்தும் உத்தியை செயல்படுத்துகின்றன, அது நினைவிலிருக்கக்கூடிய "சொற்றொடராக" மாறும் வரை தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றது. இதில் காட்சிப்படுத்தும் கருவிகள், குறிப்பிட்ட செய்திகளைப் பரப்புவதில் முக்கிய பங்காற்றுகின்றன.

இந்த சூழலில், எந்த சமூகத்திற்கு இரக்கம் காட்ட வேண்டும், எதை எதிர்க்க வேண்டும் என்பதைக் குறித்து மையப்படுத்தப்படுகிறது.

இவற்றையெல்லாம் பார்த்து ஆய்வு செய்ததன் மூலம், பின்வரும் குறிப்பிட்ட கருப்பொருள்களை நாங்கள் கண்டறிந்துள்ளோம்:

**CAA எதிர்ப்பு போராட்டங்களை பெரிதும் வன்முறையாக சித்தரித்தல்**

எங்கள் பகுப்பாய்வு, ஆறு சேனல்களும் இந்தப் போராட்டங்களை முற்றிலும் குழப்ப மூட்டும் மற்றும் வன்முறையானதாக சித்தரிக்க தொடர்ந்து முயன்றதை வெளிக்கொணர்கிறது. CAA-க்கு எதிரான தேசமெங்கும் நடந்த போராட்டங்கள், இந்த சேனல்களின் முக்கிய கவனமாக இருந்தன. வன்முறையின் இந்தக் கருப்பொருள், 2019 டிசம்பரில் CAA எதிர்ப்பு போராட்டங்கள் எழுந்ததிலிருந்து வடிவமைக்கப்பட்டது.

முதல் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, முதலாவது பெரும்பாலும் போராட்டங்களில், அசாம், உத்தரப் பிரதேசம் மற்றும் தில்லி மாநிலங்களில், கல்லெறிதல், பொதுச் சொத்துக்கள் மற்றும் வாகனங்களை தீவைத்து அழித்தல், காவல்துறையுடன் மோதல் போன்ற சம்பவங்கள் இடம்பெற்றன. ஆனால் இதற்கு காரணம் காவல்துறை, பேரணிகளுக்கு அனுமதி வழங்க மறுத்தது மற்றும் மக்கள் மீது தடியடி, துப்பாக்கிச்சூடு என வன்முறையை கையாண்டதே. இதில் உத்தரப் பிரதேசத்தில் மட்டும் இரண்டு நாட்களில் 22 பேர் கொல்லப்பட்டனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு சேனல்களில் ஒளிபரப்பான நிகழ்ச்சிகளின் எங்கள் பகுப்பாய்வு, இந்த வன்முறை சம்பவங்கள், CAA எதிர்ப்பு போராட்டக்காரர்களை குற்றவாளியாக சித்தரிக்க ஒரு திட்டமிட்ட உரைநடையை உருவாக்க பயன்படுத்தப்பட்டதை வெளிக்கொணர்கிறது. தில்லியில் நடைபெற்ற முழு போராட்ட இயக்கம், குறிப்பாக ஷாஹீன் பாக், வன்முறையானது மதங்களுக்கு இடையேயான மோதலுக்காகவே சித்தரிக்கப்பட்டது என செய்தி வெளியீடுகள், போராட்டங்களில் ஏற்பட்ட வன்முறைக்குக் காரணமாக ஒருதலை பட்சமாக சித்தரித்தன.

CAA எதிர்ப்பு போராட்டங்களின் முக்கிய அம்சங்கள், அவற்றின் கோரிக்கைகள் மற்றும் அமைதியான அமர்வுப் போராட்டங்கள் ஆகியவை முழுமையாக புறக்கணிக்கப்பட்டன. மேலும் காவல்துறையின் வன்முறையைப் பற்றிய எந்தத் தகவல்களும் இந்த செய்திகளில் இடம் பெறவில்லை.

**CAA எதிர்ப்பு போராட்டங்களை வன்முறையாக சித்தரித்தல்**

டிசம்பர் 15க்கு பின், இந்த சேனல்கள் அனைத்தும் ஒரே மாதிரியான முறையில் CAA எதிர்ப்பு போராட்டக்காரர்களை குற்றவாளிகளாகவும், அபாயகரமானவர்களாகவும் சித்தரித்தன. போராட்டக்காரர்களைப் பற்றிப் பேசும்போது, "vandals" (அழிப்பவர்கள்), "rioters" (கலவரக்காரர்கள்), "potential terrorists" (பயங்கரவாதிகளாக மாறக்கூடியவர்கள்), "anti-national" (தேசிய விரோதிகள்), "tukde-tukde gang" (நாட்டை உடைப்பவர்கள்), "victimizers" (பாதிப்பவர்கள்), "cowards", "blackmailers" மற்றும் "dangerous" (அபாயகரமானவர்கள்) போன்ற வார்த்தைகள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டன.

**ரிபப்ளிக் டிவி - The Debate (டிசம்பர் 16, 2019)**

ரிபப்ளிக் டிவியின் முக்கிய நேர நிகழ்ச்சி "The Debate" 2019 டிசம்பர் 16 அன்று ஒளிபரப்பப்பட்டது. இதில் "Using Rights Excuse for Riots?" (உரிமைகளை வன்முறைக்கான காரணமாக பயன்படுத்துகிறார்களா?) என்ற


vaigarai velicham official

வாசகங்கள் திரையில் ஒளிர்ந்தன. Rights Not Riots என்ற ஹேஷ்டேக் பயன்படுத்தப்பட்டது. தொகுப்பாளர் போராட்டக்காரர்களை தொடர்ந்து "சமூக வன்முறையைத் தூண்ட முயலும் பயங்கரவாதிகள்" என்று குற்றம் சுமத்தினார்.

**இந்தியா டிவி - Haqiqat Kya Hai (டிசம்பர் 17, 2019)**

2019 டிசம்பர் 17 அன்று, தில்லியின் சீலாம்பூர்-ஜாப்ராபாத் பகுதியில் காவல்துறையுடன் போராட்டக்காரர்கள் வன்முறையாக மோதினர் என இந்தியா டிவியின் முக்கிய நேர நிகழ்ச்சியில் "Haqiqat Kya Hai" அதே இரவு ஒளிபரப்பப் பட்டது. நிகழ்ச்சியில் பின்வரும் கேள்விகள் எழுப்பப்பட்டன:

"Dilli me kisne lagayi aag?" (தில்லிக்கு எவர் தீ வைத்தனர்?)

"Dilli ko kisne jalaya?" (தில்லியை எவர் எரித்தனர்?)

நிகழ்ச்சியில் பின்வரும் வாசகங்கள் திரையில் ஒளிர்ந்தன:

"Jaffrabad me dange ke 210 minutes, 100% complete picture." (ஜாப்ராபாத் கலவரத்தின் 210 நிமிடங்கள், 100% முழுமையான படம்.)

"Dilli ke musalmano me Modi phobia kisne phailaya?" (தில்லியின் முஸ்லீம்களில் மோடி பயத்தை எவர் பரப்பினர்?)

"PM Modi ke khilaaf 'guerilla yudh' direct." (மோடிக்கெதிரான நேரடி கொரில்லா போர்.)

"Jamia-Jaffrabad ki danga files decoded." (ஜாமியா-ஜாப்ராபாத் கலவர கோப்புகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.)

இவ்வாறு ஒளிபரப்புகள் செய்து, தில்லியின் முஸ்லீம்களை "இந்திய அரசுக்கு எதிராகப் போர் நடத்தும் அபாயகரமான சமூகம்" என்று சித்தரிக்க முயன்றது. ஜாமியா மற்றும் ஜாப்ராபாத் கலவரங்களை "சதித்திட்டம்" என குற்றம் சுமத்தி, சம்பவம் நடந்த அதே நாளிலேயே இதற்கான முடிவுகள் வெளியிடப்பட்டன.

**Zee News - DNA (டிசம்பர் 18, 2019)**

Zee News-ன் DNA நிகழ்ச்சி, 2019 டிசம்பர் 18 அன்று ஒளிபரப்பப்பட்டது. தொகுப்பாளர், "CAA எதிர்ப்பு போராட்டங்கள் மத அடிப்படை யிலான கலவரத்தை ஏற்படுத்தும் பெரிய சதித்திட்டம்" என்று குற்றம் சுமத்தினார். சமூக ஊடகங்களை "Digital Danga" (டிஜிட்டல் கலவரம்) என்று குறிப்பிடப்பட்டு, போராட்டக் காரர்களை "Urban Naxals" (நகர நக்சலைட்டுகள்) என்று குறிபபிட்டார்.



தொகுப்பாளர் கூறியதாவது:

“Ab sochne wali baat hai ki 2016 ke baad aisa kya hua hai ki ye chhaatra urban naxalism ke liye andolan kar rahe hai.” (2016க்குப் பிறகு என்ன நடந்தது என்பதே சிந்திக்க வேண்டிய விஷயம். எதனால் மாணவர்கள் நகர நக்சலைட்டுகளுக்காக போராடுகிறார்கள்?)

**ரிபப்ளிக் பாரத் - Poochta Hai Bharat (டிசம்பர் 27, 2019)**

ரிபப்ளிக் பாரத்-ன் Poochta Hai Bharat நிகழ்ச்சி, 2019 டிசம்பர் 27 அன்று ஒளிபரப்பப் பட்டது. இதில் ஆதாரம் இல்லாத காட்சிகள் மற்றும் வாட்ஸ்அப் செய்திகளை மையமாகக் கொண்டு செய்தி வழங்கப்பட்டது. தொகுப் பாளர் முஸ்லீம் போராட்டக்காரர்களின் காட்சி களை காண்பித்து, பின்வருமாறு கூறினார்:

“Jo log dara rahe the ki shukravar ko dange honge, poore Hindustan ne aaj unhen dara diya.” (வெள்ளிக்கிழமை கலவரம் நடக்கும் என்று மிரட்டியவர்கள், இன்று முழு இந்தியாவால் மிரண்டுவிட்டனர்.)

தொகுப்பாளர் மேலும் ஒரு வாட்ஸ்அப் செய்தியையும் வாசித்தார்:

“Jihad karna shuru karo, India Gate pe milenge, hockey aur baseball bat leke aana. Police par toot padna, khoon-e-shahadat karo.” (ஜிஹாத் செய்ய தொடங்குங்கள். இந்தியா கேட்-ல் சந்திப்போம். ஹாக்கி மற்றும் பேஸ்பால் பேட் எடுத்து வருங்கள். காவல்துறையை தாக்குங்கள். வீரமரணம் அடையுங்கள்.)

அந்த நிகழ்ச்சி, ஒரு வாட்ஸ்அப் செய்தியின் பின்வரும் உரையை “உடனடி செய்தி” (Breaking News) ஆக திரையில் வெளியிட்டது:

“ஜிகாத் செய்வது சட்டபூர்வமானது, தொடங்குங்கள்.” (Jihad karna jayaz hai, shuru karo).

எதிர்வரும் கலவரங்கள் குறித்த அச்சுறுத்தல் களின் தோற்றம், அல்லது எதிர்ப்பாளர்களுடன் தொடர்புடைய எந்த ஆதாரங்களும் வழங்கப் படவில்லை. அதைப் போலவே, திரையில் முக்கியமாகக் காட்டப்பட்ட வாட்ஸ்அப் செய்திகள் எங்கிருந்து வந்தது அல்லது அதன் உண்மைத்தன்மை பற்றிய விளக்கங்களும் வழங்கப்படவில்லை.

குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு (CAA) எதிரான இயக்கத்தை துவக்கதிலிருந்து பார்க்கும் பொழுது, 2019 டிசம்பர் மாதத்திலேயே, எதிர்ப்புகள் பல்கலைக்கழக வளாகங்களைத் தாண்டி, குடியிருப்பு பகுதிகளில் அமர்வுப் போராட்டங்களாக விரிந்தன. 2019 டிசம்பர் மாதத்தின் தொடக்கத்தில் சில வன்முறைச் சம்பவங்கள் நடந்தபோதிலும், அதற்குப் பிறகு போராட்ட இடங்களில் பெரிதாக எந்த ஒரு வன்முறை சம்பவங்களும் பதிவாகவில்லை.

ஆனால், 2020 ஜனவரி-பிப்ரவரி மாதங்களில், தில்லி சட்டசபைத் தேர்தல்கள் நெருங்கும் நிலையில், சில செய்திகள் மற்றும் தொலைக்காட்சி சேனல்கள் குற்றச்சாட்டுகளை அதிகரித்தன. ஆய்வுகளின் படி, இந்த சேனல்களின் செய்திகள் அரசியல் மற்றும் இந்துத் தேசிய வாதக் குழுக்கள் (அத்தியாயம் 2ல் விவரிக்கப் பட்டவை) நிகழ்த்திய வெறுப்பு பேச்சு மற்றும் வன்முறைக்கான வெளிப்படையான அழைப்பு களுக்கு ஒத்ததாக இருந்தன. ஷாஹீன் பாக் போராட்ட களம் தான், குறிப்பாக இச்சேனல் களால் குற்றம் சாட்டப்பட்டு, வன்முறையின் மூலமாகவும், பல்வேறு சதித்திட்டங்களின் தோற்றமாகவும் சித்தரிக்கப்பட்டது.

2020 ஜனவரி 27 அன்று, Zee News தொலைக் காட்சி சேனலில் ஒளிபரப்பான DNA நிகழ்ச்சி,

“இப்போது ஷாஹீன் பாக் செல்ல விசா தேவைப்படுமா?” (Kya ab Shaheen Bagh jaane ke liye visa lagega?) என்ற தலைப்பில் நடந்தது.

அதனுடன் #370 In Shaheen Bagh என்ற ஹேஷ்டேக் இணைக்கப்பட்டது. நிகழ்ச்சியின் போது தொகுப்பாளர், ஷாஹீன் பாக் போராட்ட இடத்தைக் காஷ்மீர் மற்றும் சிரியா போன்ற பகுதிகளுடன் ஒப்பிட்டு, போராட்ட இடத்தை வன்முறை மற்றும் அச்சுறுத்தல் நிறைந்த இடமாக சித்தரிக்க முயன்றார்.

அங்கு காவல் துறையினர் செல்ல முடியாத இடமாகவும், தொகுபாளரின் மற்றும் அவரது சக பணியாளர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் நிறைந்த இடமாகவும் சித்தரிக்கப்பட்டது. போராட்டக்காரர்கள் “மூளை சலவை செய்யப் பட்டவர்கள்” என்று குற்றம் சாட்டப்பட்டனர். (“ஷாஹீன் பாக் சென்று வந்தபின், போராட் டக்காரர்கள் மூளை சலவை செய்யப்பட்டு விட்டார்கள் என்பது எங்களுக்கு தெளிவாகி விட்டது.”)

நிகழ்ச்சியின் தலைப்பு, #370 In Shaheen Bagh என்ற ஹேஷ்டேக், மற்றும் அதில் வழங்கப் பட்ட தகவல்கள், ஜம்மு & காஷ்மீரின் நீக்கப் பட்ட அரசியல் அந்தஸ்தை குறிக்கும் தவறான


vaigarai velicham official

ஒப்பீட்டின் மூலம் ஷாஹீன் பாக் போராட்ட இடத்தையும், போராட்டக்காரர்களையும் "மற்றவர்கள்" என்று சித்தரித்தன. போராட்டக் காரர்களை "இந்தியாவுக்கு திருப்பிக்கொண்டு வர வேண்டும்" என்பதாக தொகுப்பாளர் கூறினார்.

நிகழ்ச்சியில் மேற்கொள்ளப்பட்ட மற்ற குறிப்புகள், ஷாஹீன் பாக் போராட்டம் ஜனநாயக விரோத நோக்கங்களுக்காக நடத்தப்படுகிறது என்பதைக் குறிக்கின்றன:

"ஷாஹீன் பாக் 'துக்டே–துக்டே' (tukde-tukde) கும்பலின் புதிய தலைமையகம் ஆகிவிட்டது."

"ஷாஹீன் பாகில் இப்போது நடந்து கொண்டிருப்பது ஜனநாயகத்தில் ஒரு களங்கம்."

அடுத்த நாள் (ஜனவரி 28, 2020) ஒளிபரப்பு இந்த கதையை தொடர்ந்தது. மற்றும் "Shaheen Bagh ko ab khalikaradenachahiye" (ஷாஹீன் பாக் இப்போது காலியாக்கப்பட வேண்டும்) என்ற வாசகத்துடன், # Lekar Rahenge Shaheen Bagh என்ற ஹேஷ்டேக்கையும் இணைத்தது.

நிகழ்ச்சி தொகுப்பாளர் பார்வையாளர் களிடம் கேட்டார்:

"க்யா ஹம் சப் மில் கர ஷாஹீன் பாக் கோ டுக்டே–டுக்டே காங்க் சே ஆஸாத் நஹீ கர சக்தே ஹைன்?" (நாம் அனைவரும் சேர்ந்து ஷாஹீன் பாகை 'டுக்டே–டுக்டே' கும்பலிலிருந்து விடுவிக்க முடியாதா?)

ஷாஹீன் பாகை மீண்டும் பாகிஸ்தானும், காஷ்மீரும் என்பதற்குச் சமமாக ஒப்பிட்டு, பொதுவான குற்றச்சாட்டுகளுடன் விமர்சிக்கப் பட்டது. நிகழ்ச்சியில் பின்வரும் கருத்தும் தெரிவிக்கப்பட்டது:

"எக் பாத் ஓர் காமன் ஹை, ஜோ பாகிஸ்தான் அர் ஷாஹீன் பாக் கே பிரதர்ஷன் காரி ஹை, வோ எக் பாஷா மே போல்தே ஹை... உன்கி விசார் தாரா பில்குல் மில்தி ஹை."

(பாகிஸ்தானுக்கும் ஷாஹீன் பாக் போராட் டக்காரர்களுக்கும் பொதுவாக இருக்கின்ற ஒன்று என்னவெனில், அவர்கள் ஒரே மொழியில் பேசுகிறார்கள்... அவர்களின் சிந்தனைகள் ஒரே மாதிரியாக உள்ளன.)

மேற்கண்ட கருத்துக்கள் "அவர்கள்" மற்றும் "அவர்களின்" என்ற வார்த்தைகளை ஒரு வகையான, அச்சுறுத்தும் இஸ்லாமிய ஒற்றுமையை சுட்டிக்காட்டும் வகையில் கேவல மாக பயன்படுத்துகின்றன, ஆனால் அதற்கான எந்தவித ஆதாரங்களும் வழங்கப்படவில்லை.

முஸ்லிம்கள் "விரோதிகள்" என வகைப் படுத்தப்படும் பழமையான பிரிவினைத் தோற்றம் மீண்டும் வெளிப்பட்டது. 2020 பிப்ரவரி 10 அன்று ஒளிபரப்பான The Debate என்ற நிகழ்ச்சியில்,

"Anger Over Unending Shaheen Bagh Blockade" (முடிவடையாத ஷாஹீன் பாக் மீதான கோபம்) என்ற தலைப்பில் #Shaheen Bagh Exploitation என்ற ஹேஷ்டேக்குடன் நிகழ்ச்சி ஒளிபரப்பானது. அந்நிகழ்ச்சியில் ஒரு பேனல் உறுப்பினர் மற்றொரு பேனல் உறுப்பினரிடம் கூறினார்:

"இந்த மக்கள் இந்தியாவை ஈராக்காக மாற்ற நினைக்கிறார்கள். அவர்கள் இந்தியாவை சிரியாவாக, ஈராக்காக, ஆப்கானிஸ்தானாக மாற்ற நினைக்கிறார்கள். ஆனால் அதை நாம் ஒருபோதும் நடக்க விட மாட்டோம். அவமானம் அவர்களுக்கு..."

"தும்ஹே ஷரம் ஆனி சாஹியே." (உங்களுக்கு வெட்கமாக இருக்க வேண்டும்.)

"தும் ஹிந்துஸ்தான் கே துஷ்மன் ஹோ." (நீங்கள் இந்தியாவின் எதிரி.)

"தும் ஷாஹீன் பாக் கே துஷ்மன் ஹோ." (நீங்கள் ஷாஹீன் பாகின் எதிரி.)

"தும் உன் அவுராத்தோன் கே துஷ்மன் ஹோ ஜோ சர்தியோ மே பேடீ ஹை." (குளிரில் அமர்ந்து இருக்கும் பெண்களின் எதிரி நீங்கள்.)

அந்த பேனல் உறுப்பினர் தொடர்ந்து கூறினார்:

"சுக்ர் கரோ அல்லா கா கே ஹிந்துஸ்தான் மே ரஹ் ரஹே ஹோ, கா ரஹே ஹோ, பீ ரஹே ஹோ, அர் ஹிந்துஸ்தான் கே வாசிரே–அழாம் கோ காளியான் தேதே ஹோ, ஷரம் ஆன் யூ."

(இந்தியாவில் நீங்கள் வாழ்ந்து, உணவுண்டு, குடித்து இருப்பதற்கு அல்லாஹ்வுக்கு நன்றி சொல்லுங்கள், ஆனால் இந்திய பிரதமரை நீங்கள் அவமதிக்கிறீர்கள், இது வெட்கக்கேடானது.)

இன்னொரு பேனல் உறுப்பினர் இதேபோன்ற கருத்துக்களை பகிர்ந்தார்:

"இந்த நாட்டின் மக்கள் ஒருபோதும், ஷாஹீன் பாக் போராட்டக்காரர்களை மன்னிக்க மாட்டார்கள். அவர்கள் தீவிரவாத, மத ரீதியான, இஸ்லாமிய அடிப்படைவாத சிந்தனைகளை நாட்டின் வீதிகளில் பயங்கரமான நிலைமைகளை



ஏற்படுத்தும் வகையில் திணித்தனர்."

சில சந்தர்ப்பங்களில், வெறுப்பை தூண்டும் கருத்துக்கள், விவாதத்திற்காக அழைக்கப்பட்ட பேனல் உறுப்பினர்களால் வழங்கப்பட்ட நேர்மறை ஆதரவால் ஊக்குவிக்கப்பட்டன. சில வேளைகளில், தொகுப்பாளர்கள் தாமாகவவே வெறுப்பை தூண்டும் கருத்துகளை வெளியிட்டனர்.

2020 ஜனவரி 28 அன்று Halla Bol (Aaj Tak) நிகழ்ச்சியில், தொகுப்பாளர் ஒரு பாஜக பிரதிநிதி கூறிய கூற்றுகளை பாராட்டினார். அந்த பிரதிநிதி பின்வரும் உரைகளை ஒரு கவிதையாக உச்சரித்தார்:

"இமாம் கா ஹுக்ம் ஹை சலோ தேஷ் தோடேன்."

(இமாம் உத்தரவு பிறப்பித்துள்ளார், தேசத்தை உடைக்க.)

"யே மௌகா நா ஆயேகா சலோ தேஷ் தோடேன்."

(இந்த வாய்ப்பு திரும்ப கிடைக்காது, தேசத்தை உடைக்க.)

"ஷாஹீன் பாகோ மே பழ்டி ஹை ஹஸ்ரத்."

(விவேகமற்ற ஆசைகள் ஷாஹீன் பாக்களில் வளர்க்கப்படுகின்றன.)

"பிர் தேஷ் தோடே யே ஹோாதி ஹை கஸ்ரத்."

(தேசம் மீண்டும் உடைய வேண்டும், இதுவே அவர்களின் பயிற்சி.)

"Is aag ko ab jihaad se joden" (இந்த தீயை இப்போது ஜிஹாதுடன் இணைக்கலாம்)

"Imam ka hukm hai chalo desh toden" (இமாம் உத்தரவு பிறப்பித்துள்ளார், தேசத்தை உடைக்கலாம்)

2020 பிப்ரவரி 5 அன்று Poochta Hai Bharat (Republic Bharat) நிகழ்ச்சியில், பேனல் உறுப்பினர்களால் கூறப்பட்ட மதம் சார்ந்த பிரிவினைவாதக் கருத்துகளை தொகுப்பாளர் தடுப்பதற்கோ மறுப்பதற்கோ முயற்சி செய்யவில்லை. பேனல் உறுப்பினர்கள் கூறியது:

"இந்துக்கள், இந்துக்களாக வாக்களிக்க வில்லை என்றால், டெல்லியின் ஒவ்வொரு பகுதியில் (மொஹல்லா) ஷாஹீன் பாக்கள் உருவாகும்... இல்லையெனில், ஷாஹீன் பாக் மூலம் தொடர்ந்து பயங்கரவாதிகள் தோன்று வார்கள். இந்துக்கள் பாஜகவுக்கு வாக்களிக்க வேண்டும்."

மற்றொரு பேனல் உறுப்பினர் கூறியது:

"In desh ke gaddaron ko beech sadak mein goli maarni chahiye, Shaheen Bagh mein khade karke goli maarni chahiye." (இந்த நாட்டின் துரோகிகளை தெருவின் நடுவில் சுட வேண்டும், ஷாஹீன் பாகில் நிறுத்தி சுட வேண்டும்.)

2020 பிப்ரவரி 10 அன்று Halla Bol (Aaj Tak) நிகழ்ச்சியில், பாஜகவின் மாநில எம்.எல்.ஏ.யான ஒரு பேனல் உறுப்பினர் கூறியது:

"Wo joote khayenge, aur kagaz bhi dikhayenge." (அவர்களை தாக்க வேண்டும், மேலும் அவர்கள் ஆவணங்களையும் காண்பிக்க வேண்டி இருக்கும்.)

அதற்குப் பிறகு மற்றொரு பேனல் உறுப்பினர் கூறியது:

"Agar Hindutva ki qabar khud sakti hai to desh ke gaddaron ko goli bhi lag sakti hai." (ஹிந்துத்துவா கல்லறையில் புதைக்கப்பட முடியும் என்றால், தேச துரோகிகளை சுடவும் முடியும்.)

தொகுப்பாளர் இந்த வன்முறையை தூண்டும் கருத்துகளுக்கு எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

2020 பிப்ரவரி 24 அன்று வடகிழக்கு டெல்லியில் வன்முறை வெடித்தது. அந்நாள்களில் நடைபெற்ற வன்முறைகள் குறித்து செய்தி வழங்கியபோது, சில செய்தி ஒளிபரப்புகள் போராட்டக்காரர்களையே வன்முறைக்குப் பொறுப்பாகக் குற்றம்சாட்டின.

2020 பிப்ரவரி 24 அன்று The Debate (Republic TV) நிகழ்ச்சியில் தொகுப்பாளர், குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு (CAA) எதிரான போராட்டக்காரர்களை தலைமை காவலர் ரதன் லாலின் கொலைக்கு காரணமாக குற்றம் சாட்டினார். ரதன் லால் அன்றே (பிப்ரவரி 24) கலவரத்தின்போது உயிரிழந்தார். ஆனால் அவர் எவ்வாறு கொல்லப்பட்டார் என்பது தொடர்பான விசாரணை தொடங்காத நிலையில், தொகுப்பாளர் அப்போதே கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். நிகழ்ச்சியில் பின்வரும் வாசகங்கள் தொடர்ந்து காட்டப்பட்டன:

"Rioters Kill Police Constable" (கலவரக் காரர்கள் காவலரைக் கொன்றுள்ளனர்)

"They Have Blood on their Hands" (அவர்களின் கைகளில் இரத்தம் ஒட்டியுள்ளது)

அந்த நிகழ்ச்சியில் தொகுப்பாளர் கூறியது:

"தலைமை காவலர் ரதன் லால் இறந்தார். மவுஜ்பூர் வன்முறையை கட்டுப்படுத்த அவர் பணியில் இருந்தார். போராட்டக்காரர்களை சமாதானப்படுத்த முயன்றபோது, அவர்கள் கல்லை எடுத்து அவரை தாக்கி கொன்றனர். இன்று அவர் இறந்தார். இது மிகவும் மோசமான ஒன்று. இதன் பிறகு அவர்கள் காவல்துறையை முற்றுகையிடச் சொல்கிறார்கள்."

"நான் நினைப்பது என்னவென்றால், அவர்கள் எவ்வித காரணங்களையும் கூறாமல், ரதன் லாலின் உயிரை மீட்டுத் தர முடியுமா என்பதே ஒரே கேள்வி. சர்வதேச நிகழ்வுடன் இணைந்த தலைப்பை உருவாக்க அவர்களுக்கு வேண்டியுள்ளது. தலைமை காவலர் ரதன் லாலின் கொலைக்கு அவர்கள் பொறுப்பானவர்கள். அவர் தனது காயங்களால் இறந்தார். இதை 'அமைதியாகப் போராடுகிறவர்கள்' என்று கூறப்படும் போராட்டக்காரர்களே செய்துள்ளனர்."

தொகுப்பாளர் தொடர்ந்து ரதன் லாலின் கொலையும் வன்முறைகளும், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் (பிப்ரவரி 25) இந்தியா வருகைக்கு எதிராகத் திட்டமிட்டு நடத்தப்பட்டவை என்பதைக் குறிக்க முயன்றார்.

"இது அமெரிக்க அதிபர் முதல் முறையாக வருகிற தருணத்துடன் நேர்த்தியாக இணைக்கப்பட்டுள்ளது. இது ஒரு தலைப்புச் செய்திக்கு ஏற்ப நடத்தப்பட்டுள்ளது. இன்று ஒரு காவலர் காயமடைந்த நிலையில் உயிருக்கு போராடிக்கொண்டிருக்கிறார். இன்னொரு காவலர் இறந்துள்ளார். இவர்கள் போராட்டக் காரர்கள் அல்ல. அவர்கள் தங்கள் துப்பாக்கிகளை எடுத்து, கொல்லுவதற்கு தயாராக இருக்கிறார்கள்."

2020 பிப்ரவரி 24 அன்று Zee News சேனல் தனது செய்தி ஒளிபரப்பில், டொனால்ட் டிரம்ப் இந்தியா வருகை புரிந்த நேரத்தில், இந்தியாவின் மதிப்பைக் குறைப்பதற்கான ஒரு திட்டமிட்ட சதி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று கூறி அதைப் பரப்ப முயன்றது. இந்தச் சதியின் பின்னணியில் "டுக்டே-டுக்டே காங்க்" மற்றும் எதிர்க்கட்சிகள் இருப்பதாக அவர்கள் குற்றம் சாட்டினர். அவர்கள் கூறியது:

"Yeh joh tasveerein dekh rahe hai, yeh achanak nahi hua...shadyantra chal rahi hai bharat ko badbam karne ki aise sammein mein jab Donald Trump bharat aaye hue hai."

(நீங்கள் காணும் இந்தக் காட்சிகள் திடீரென்று நிகழ்ந்தவை அல்ல... இது இந்தியாவை அவமதிக்க செய்யும் வகையில் திட்டமிட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கும் சதி; அதுவும் டொனால்ட் டிரம்ப் இந்தியா வந்துள்ள தருணத்தில்.)

"Unke samne bharat ki chavi kharab karni ki, sari duniya ke samne Bharat ki chhavi kharab karne ki shazish hai aur iss shazish mein tukde-tukde gang, patrakar, budhi jivi aur desh ke vipaksh ke neta hai."

(இந்தியாவின் மதிப்பை சர்வதேச அரங்கில் குறைப்பதற்கான சதி இது; இதில் "டுக்டே - டுக்டே காங்க்," பத்திரிகையாளர்கள், மற்றும் எதிர்க்கட்சி தலைவர்கள் உள்ளனர்.)

இந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பின்னணியாக எந்தவொரு உறுதியான ஆதாரங்களும்

வழங்கப்படவில்லை. இது Republic TV சேனலில் முன்வைக்கப்பட்ட கதைக்களத்துடன் ஒத்துப் போனது.

*2020 பிப்ரவரி 25 அன்று* Republic Bharat *தனது ஒளிபரப்பில், போராட்டக்காரர்களே வன்முறைக்குப் பொறுப்பானவர்கள் என்பதே உண்மை எனக் கூறும் கதைக்களத்தைத் தொடர்ந்து முன்வைத்தது. தொகுப்பாளர் கூறியது:*

"Sharm nahi aati, jo log ab tak CAA kah rahe the...ye maine tab bhi bola tha, ye CAA wale nahi hai, ye dangai hai, inako CAA, NRC kuch pataa nahi hai."

*(அவர்களுக்கு வெட்கமே இல்லை, இவர்கள் இதுவரை* CAA *பற்றி பேசிக் கொண்டிருக் கிறார்கள்... நான் இதை முன்பே கூறினேன், இவர்கள்* CAA *ஆதரவாளர்கள் அல்ல, இவர்கள் கலவரக்காரர்கள்; இவர்கள்* CAA, NRC *பற்றி ஒன்றும் அறியவில்லை.)*

*அதேநாளில்* The Debate (Republic TV) *நிகழ்ச்சியில் பேனல் உறுப்பினர்கள் கூறிய கருத்துகள்:*

"The Nanis and Dadis (grandmothers) of Shaheen Bagh are basically jihadi elements sitting and inciting a violent mob here."

*(ஷாஹீன் பாகின் பாட்டிமாரும் அம்மா மாரும் அடிப்படையில் ஜிஹாதி சக்திகள்; இவர்கள் வன்முறையை தூண்டுகின்றனர்.)*

"This is not a protest; this is a classical definition of waging war against India. You (protesters) are burning people, you are throwing acid bombs."

*(இது போராட்டம் அல்ல; இது இந்தியாவுக்கு எதிரான போரின் முறையான வரையறை. நீங்கள் (போராட்டக்காரர்கள்) மக்களை எரிக்கிறீர்கள், ஆசிட் குண்டுகளை வீசுகிறீர்கள்.)*

"You (protesters) are instigating violence for past 70 days."

*(நீங்கள் (போராட்டக்காரர்கள்) கடந்த 70 நாட்களாக வன்முறையை தூண்டி வருகிறீர்கள்.)*

*பிப்ரவரி 25 அன்று வன்முறை உச்சத்தில் இருந்தபோதும், தொகுப்பாளர்கள் மற்றும் பேனல் உறுப்பினர்கள் வன்முறையின் காரணம் மற்றும் அதன் பின்னணியில் உள்ளவர்களை உறுதியாக குற்றம் சாட்டினர். இவை எந்தவொரு ஆதாரத்தையும் முன்வைக்கவில்லை. இவ்வளவு பெரிய குற்றச்சாட்டுகளை எந்த ஆதாரமுமின்றி வெளியிடுவது, குறிப்பாக மதசார்பு வன்முறைகள் பற்றிய செய்தி அறிக்கைகளில், பத்திரிகை ஒழுங்குமுறைகளை முற்றிலும் மீறியது.*




vaigarai velicham official

சேனல்கள் பயன்படுத்திய மொழியும், குற்றச் சாட்டுகளை முன்வைத்த விதமும் ஒரேபோல் இருந்தன. CAAக்கு எதிரான போராட்டங்களை மத அடிப்படையில் குற்றம் சாட்டி, போராட் டக்காரர்களை "கலவரக்காரர்கள்" மற்றும் "பயங்கரவாதிகள்" எனக் குற்றம் சாட்டி, போராட்டங்களை போர்க்களம் போன்ற சிரியா போன்ற இடங்களுடன் ஒப்பிட்டு, இஸ்லாமிய சமுதாயத்தை "வன்முறையின் பிரதிநிதியாக" காட்ட முயன்றனர்.

இந்தியா முழுவதும் பரவியுள்ள CAA எதிர்ப்புப் போராட்டங்களை மத அடிப் படையில் தவறாகக் குற்றம் சாட்டி, அவற்றை அழிக்கப்பட வேண்டியவை என்று காட்டும் முயற்சியில் இந்த சேனல்கள் ஈடுபட்டிருந்தன. ஷாஹீன் பாக் போராட்டங்களை மத அடிப்படையில் தீவிரவாதத்துடன் இணைத்துக் காட்டும் முறையை உருவாக்க முயன்றனர். போராட்டக்காரர்களை "பயங்கரவாதிகள்" மற்றும் "கலவரக்காரர்கள்" எனக் குற்றம் சாட்டி, இஸ்லாமிய சமுதாயத்தை "வன்முறையின் பிரதிநிதி" எனக் குற்றம் சாட்டியதன் மூலம், பொதுமக்களின் வெறுப்பை தூண்டும் நோக்கத் துடன் இவை செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

இந்த மூடத்தனமான சூழ்நிலையில், பிப்ரவரி 24 முதல் 26 வரை வடகிழக்கு டெல்லியில் வன்முறை நடந்தபோது, போராட்டக்காரர்களே வன்முறைக்குப் பொறுப்பானவர்கள் என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் வன்முறையின் உண்மையான காரணங்கள் அப்போது வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்பட வில்லை.

### CAA எதிர்ப்பு போராட்டங்களை இஸ்லாமிய தீவிரவாதத்துடன் இணைத்தல்

CAA எதிர்ப்பு போராட்டங்களை இஸ்லாமிய தீவிரவாதத்தால் தூண்டப்பட்டவை, மற்றும் இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்கள் ஆதரிக் கின்றன என்று காட்டுவதும், முஸ்லீம்கள் இந்துக்களுக்கு எதிரான கலவரக்காரர்களாக உருவகப்படுத்துவதும், சில ஊடகங்களின் முக்கிய நோக்கமாக இருந்தது. "ஜிஹாத்" நடத்துதல், இந்துக்களை தாக்குதல் போன்ற குற்றச்சாட்டுகள் மூலமாக முஸ்லீம்கள் வன்முறைக்கு ஒத்துழைக்கிறார்கள் என்ற பிம்பம் உருவாக்கப்பட்டது.

2020 டிசம்பர் 26 அன்று Zee News ஒளிபரப்பிய DNA நிகழ்ச்சி "Kashmirse UP Pahuche Expert Patharbazo ka DNA test" (காஷ்மீரிலிருந்து உ.பி வந்த கற்களை எறியும் நிபுணர்களின் DNA பரிசோதனை) என்ற தலைப்பில் ஒளிபரப்பப் பட்டது. இந்த நிகழ்ச்சியில், பாகிஸ்தான் உளவுப் பணி அமைப்பு (ISI), Popular Front of India (PFI) மற்றும் "கற்களை எறியும் காஷ்மீர் குழுக்கள்" ஆகியவை CAA எதிர்ப்பு போராட்டங்களை வன்முறைக்கு தூண்டி, நிதி வழங்கி வருகின்றன என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. தொகுப்பாளர் பின்வரும் கருத்துகளை கூறினார்:

"UP ke virodh pradarshan ke liye Kashmir ke pathar bajo ko le kar aaya gaya tha."

(உ.பி-யில் நடைபெற்ற போராட்டங் களுக்காக காஷ்மீரிலிருந்து கற்களை எறியும் குழுவினரை அழைத்துக் கொண்டுவந்தனர்.)

"Sootro seh yeh kaha ja sakta hai ki Bharat mein hinsa phelane mein Pakistan ki khufiya agency ISI funding kar rahi hai."

(தகவல்களின்படி, இந்தியாவில் வன்முறையை ஏற்படுத்த பாகிஸ்தானின் உளவுப்பணி அமைப்பு ISI நிதியுதவி செய்கிறது.)

"Delhi aur UP ke hinsa ke peeche PFI, Islamic Youth Federation aur Kashmir ke pathar baj ka haath hai."

(டெல்லி மற்றும் உபி வன்முறைகளின் பின்னணியில் PFI, Islamic Youth Federation மற்றும் காஷ்மீரில் உள்ள கற்களை எறியும் குழுக்கள் உள்ளன.)

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு எந்த உறுதியான ஆதாரங்களும் வழங்கப்படவில்லை.

2020 ஜனவரி 3 அன்று India TV-யின் Haqiqat Kya Hai நிகழ்ச்சி, முஸ்லீம்கள் (உள்பட முக்கிய அரசியல்வாதிகள்) பள்ளிவாசல்களை மூடிக்கொண்டே மற்றும் போராட்டங்கள் மூலம் உள்ளூரில் வன்முறையை தூண்டி வருகின்றனர் என்று குற்றம் சாட்டியது. நிகழ்ச்சியின் போது, திரையில் பின்வரும் வாசகம் காட்டப்பட்டது:

"CAA ko radh karke bolo La Ilaha Illalla. Ek ek nara suniye pradarshan ka matlab samjhaya, Owaisi ke sheher mein bharkau loudspeaker full on hai. Dharmik naro ke piche ki planning ki brain mapping."

(CAAவை ரத்து செய்யச் சொல்லுங்கள், La Ilaha Illallah என்று முழங்குங்கள். ஒவ்வொரு முழக்கத்தையும் கேளுங்கள்; போராட்டத்தின் உண்மையான நோக்கத்தை புரிந்துகொள்ளுங்கள். ஓவைசியின் நகரத்தில் தீவிரவாதத்திற்கான

முழக்கங்கள் முழு வேகத்தில் ஒலிக்கின்றன. மத அடிப்படையிலான முழக்கங்களுக்குப் பின்னணி திட்டமிடப்பட்டிருப்பதை புரிந்து கொள்ளுங்கள்.)

நிகழ்ச்சித் தொகுப்பாளர் பின்வரும் கேள்வியை எழுப்பினார்:

"Modi ke dushman kaise dete hai musalmano ko tution?"

(மோடியின் எதிரிகள் முஸ்லீம்களுக்கு எவ்வாறு பயிற்சி அளிக்கின்றனர்?)

அதன்பிறகு அவர் இதனை விளக்கினார்:

"Bahut gaur se in dharmic naron ko samajhiye... In naro ke peeche maksad samjhaiye... kaise apne mazhab ko khatre mein batakar Musalmano ko sadakon par sangram ke liye bhadakaya jaa raha hai."

(இந்த மத அடிப்படையிலான முழக்கங் களை கவனமாகக் கேளுங்கள்... இவற்றின் பின்னணியை புரிந்துகொள்ளுங்கள்... தங்கள் மதம் ஆபத்துக்குள் இருப்பதாகக் கூறி முஸ்லீம்கள் சாலைகளில் போராட தூண்டப்படுகிறார்கள்.)

இந்த முழக்கங்களை கவனமாகக் கேட்டுப் புரிந்துகொள்ளுங்கள்... முஸ்லிம்களின் மதம் ஆபத்தில் இருப்பதாகக் கூறி, அவர்களை வீதிகளில் போராட்டத்திற்குத் தூண்டுவதே இதன் நோக்கம்.)

"Idgah mei chal raha Modi virodh... Musalmano ko uksane wali narebaazi kyon?"

(இத்காவில் மோடியை எதிர்த்துப் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது... முஸ்லிம்களை தூண்டும் முழக்கங்கள் ஏன்?)

"Chaukane wali baat ye hai yaha mazhab bachane ke liye Musalmano ko sir pe kafan bandh ke nikalne ko kaha gaya. Jihad ka rasta apnane ke liye naujawano ko bharkaya ja raha hai."

(அதிசயிக்க வைக்கும் விஷயம் என்ன வென்றால், தங்கள் மதத்தை காப்பாற்றுவதற்காக முஸ்லிம்களுக்கு தலையில் கஃபன் (மரண உடை) அணிந்து புறப்படுமாறு கூறப்படுகிறது. ஜிஹாதின் பாதையை ஏற்கும்படியாக இளைஞர்களை தூண்டப்படுகிறது.)

"Jumme ke baad CAA ke khilaaf morcha jarur nikla."

(ஜும்மா தொழுகைக்கு பிறகு, CAA க்கு எதிராக கண்டன ஊர்வலம் கண்டிப்பாக நடத்தப்படும்.)

போராட்டங்களை மதப் போராகக் காட்டுவதன் மூலம், நிகழ்ச்சியின் தொகுப்பாளர், முஸ்லிமல்லாதவர்களின் மனதில் பய உணர்வை உருவாக்கவும், சமுதாயங்களுக்கு இடையே பிளவை ஏற்படுத்தவும் முயன்றதாக தெரிகிறது. அதே நேரத்தில், முஸ்லிம்களின் CAA எதிர்ப்பு இயக்கங்களை ஆக்கிரமிப்பு மற்றும் மதவாத மாகக் காட்டினார்.

The Debate (Republic TV) நிகழ்ச்சியில் ஜனவரி 10, 2020 அன்று "Who Wants to Break India Again" (இந்தியாவை மீண்டும் உடைக்க விரும்புவது யார்) என்ற தலைப்பில், ஹேஷ்டேக் #Jinnah Azadi Slogan உடன், ஒரு பேனலிஸ்ட் கூறியது:

"This is further to Bharat Tere Tukde Honge, Inshallah, Inshallah."

(இது "இந்தியா உடைந்தே தீரும், இன்ஷா அல்லா, இன்ஷாஅல்லா" என்பதன் தொடர்ச்சி. இது எதுவும் மாற்றப்பட்ட காட்சியல்ல. இவர்கள் இங்கு ஒரு கலிஃபத்தை உருவாக்க விரும்புகிறார்கள். இவர்கள் ஒரு புதிய இஸ்லாமிய தேசத்தை உருவாக்க விரும்பு கிறார்கள். அதனால்தான் இப்போது 'ஜின்னா வாலி ஆசாதி' முழக்கமிடுகிறார்கள்.)

ஜனவரி 16, 2020 அன்று ஒளிபரப்பான The Debate (Republic TV) நிகழ்ச்சி, "Is Shaheen Bagh a Paid Protest?" (ஷாஹீன் பாக் ஒரு பணம் கொடுக்கப்பட்ட போராட்டமா?) என்ற மையக் கேள்வியை மையமாகக் கொண்டது. #Protest On Hire ஹேஷ்டேக் உடன், தொகுப்பாளர் தனது கருத்துக்களை இவ்வாறு தெரிவித்தார்:

ஷாஹீன் பாகில் நடந்து கொண்டிருக்கும் இஸ்லாமிய தீவிரவாத முயற்சிதான் இது. ஷாஹீன் பாக் என்பது மக்களின் போராட்டம் அல்ல. இது அரசியல் சார்ந்ததுமாகவும், மதவாதத்தை தூண்டுவதற்கான முயற்சியுமாகும். இது மதம் சார்ந்த பாகுபாட்டை உருவாக்கும் முயற்சி. போராட்டம் செய்ய விரும்பினால், ஜந்தர் மந்தருக்குச் செல்லுங்கள். எதற்காக டெல்லியில் முஸ்லிம்கள் அதிகம் உள்ள பகுதியில் இருக்க வேண்டும்? இது இப்போது ஓய வேண்டும். நாடு முழுவதும் இந்த ஷாஹீன் பாக் அருவருப்பில் உள்ளது. போராட்ட இயக்கத்தின் காபி அருந்தும் தளமாக இது மாறிவிட்டது. உங்களுக்கு நேரம் இருந்தால், புனேயில் ஒரு ஷாஹீன் பாக் தொடங்குங்கள், கொல்கத்தாவில் ஒரு ஷாஹீன் பாக் தொடங் குங்கள், பெங்களூருவில் ஒரு ஷாஹீன் பாக்



தொடங்குங்கள். ஆனால் இது இப்போது தேசத்தின் விரோதமாக மாறியுள்ளது.)

CAA எதிர்ப்புப் போராட்டங்களை, குறிப்பாக ஷாஹீன் பாகில் நடந்தவை, இஸ்லாமிய அடிப்படைவாதம் என்றும் நாட்டை அழிக்க முயற்சிக்கிறது என்றும் போலி கதையை இந்தச் சேனல்கள் தொடர்ந்து பரப்பிக் கொண்டிருந்தன.

ஜனவரி 17, 2020 அன்று ஒளிபரப்பான The Debate நிகழ்ச்சி “Shaheen Bagh Campaign: Call off Political Protests” (ஷாஹீன் பாக் இயக்கம்: அரசியல் போராட்டங்களை நிறுத்துங்கள்) என்ற தலைப்பில் ஒளிபரப்பப்பட்டது. ஹேஷ்டேக் #Shaheen Bagh Sham உடன், திரையில் “Anything but a Public Protest” (பொது போராட்டமல்ல, வேறொன்றே) என்று எழுதப்பட்டிருந்தது.

நிகழ்ச்சியில் தொகுப்பாளர் கூறியது:

இந்தக் குழு இரத்த களரியையே விரும்புகிறது. ஆயிரக்கணக்கான ரோகிங்கியா அகதிகள் கலிந்தி குஞ்ஜ் மற்றும் ஷாஹீன் பாக் பகுதிகளிலுள்ள முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்... நீங்கள் இவர்களையும், வெளிநாட்டவர்களையும் போராட்டக் களத்தில் கொண்டு வருகிறீர்கள். உள்நாட்டு பாதுகாப்பிற்கான அச்சுறுத்தல்களை உருவாக்குகிறீர்கள். சிறிய குழந்தைகளுக்கே, அவர்களின் வாழ்நாள் முழுவதும் நரேந்திர மோடியையும் அமித் ஷாவையும் கொல்ல வேண்டும் என்பதே வாழ்வின் நோக்கம் என்று சொல்லப்படுகிறது.

இது இப்போது நிறைவு பெறவேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. பார்வையாளர்கள், நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று சொல்லுங்கள். முதலில், இது அரசியல் சார்ந்தது. இரண்டாவது, இது சமூகவாதம் சார்ந்தது. மூன்றாவது, இது பாகிஸ்தானிலும் லாகூரிலும் திட்டமிடப்பட்டுள்ளது; அங்கு கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. நான்காவது, இது மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து அதிகளவிலான நிதி உதவி பெற்றுள்ளது.

ஒரு பேனல் (panelist) உறுப்பினர் இதை ஒத்துக் கொண்டு,

“நீங்கள் தேசவிரோதிகளுக்கு உதவுகிறீர்கள். நீங்கள் இந்தியாவுக்கு எதிரான நாடுகளான பாகிஸ்தான் போன்றவற்றுக்கு உதவுகிறீர்கள், ஏனெனில் இப்படிப்பட்ட போராட்டங்களை பாகிஸ்தான் ஆதரிக்கிறது. பாகிஸ்தான் இப்படிப் பட்ட போராட்டங்களை பயன்படுத்தி, உலகிற்கு இந்திய அரசு ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு எதிராக உள்ளது என்று தூண்டுகிறது. ஆனால் இது உண்மை அல்ல. நீங்கள் அதை நன்றாகவே அறிவீர்கள். இவை அனைத்தும் பாகிஸ்தானின் தூண்டுதலின் பேரில் திட்டமிட்டு மேடையேற்றப்பட்டவை, நாட்டிற்கு களங்கம் ஏற்படுத்துவதற்காக பாகிஸ்தான் நிதி வழங்குகிறது” என்றார்.

பிற நாடுகளிலிருந்து திட்டமிடப்பட்டதாக கூறப்படும் எந்தக் கூற்றுகளும் நிகழ்ச்சியின் போது எவ்வித ஆதாரங்களாலும் நிரூபிக்கப்பட வில்லை. ஷாஹீன் பாகில் வெளிப்படையாக நடந்துகொண்டிருந்த போராட்டத்தின் தன்மைக்கு எதிராகவே இந்தக் கதைகள் நகர்த்தப்பட்டன.

2020 ஜனவரி 27ஆம் தேதி, ரிபப்ளிக் டிவியில் “12 Tapes Expose ‘Break India’ Conspiracy” என்ற தலைப்பில் “#Unite ForIndia” என்ற ஹேஷ்டேக் குடன் ஒளிபரப்பான The Debate என்ற நிகழ்ச்சியில், தொகுப்பாளர் நிகழ்ச்சியைத் தொடங்கியபோது:




பெரியோர்களே முதலில், யுனைட் ஃபார் இந்தியா இயக்கத்திற்கு நீங்கள் அளித்த ஆதரவுக்கு நன்றி. இந்தியாவின் பல பகுதிகளில் ஷாஹீன் பாக் மாதிரியான அனுபவத்தை உருவாக்க முயற்சிக்கும் முஸ்லீம் பயங்கரவாத, இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு எதிராக நடத்தப்படும் எங்கள் இயக்கத்திற்கு ஆதரவளித் தமைக்கு நன்றி. அவர்களை முஸ்லீம் பயங்கரவாதிகள் என்று அழைக்க வேண்டும், ஏனெனில் அவர்களின் தத்துவம் ‘முஸ்லிம்கள் முஸ்லிம்களுக்காகவே’ என்பதே.”

ஜனவரி 29ஆம் தேதி, The Debate நிகழ்ச்சியில் “#Pro Pak Shaheen Bagh” என்ற ஹேஷ்டேக்குடன் ஒளிபரப்பானது. நிகழ்ச்சியின் தலைப்புகள், “பாகிஸ்தான் ஆதரவு. இந்திய இராணுவத்திற்கு எதிரானது. வன்முறையை ஆதரிக்கும்“ மற்றும் “இப்போது அவர்கள் வெளிப்படையாக பாகிஸ்தானை ஆதரிக்கிறார்கள்” என்பவற்றை வெளிப்படுத்தின.

தொகுப்பாளர் குறிப்பிட்டது :

“இந்தியாவின் பல பகுதிகளில் இன்று CAA-க்கு எதிரான போராட்டங்கள் நடைபெற்றன. இந்த போராட்டங்களால் இன்று முழுவதும் இடையறாத வன்முறை நடந்திருக்கிறது. பெரியோர்களே ஏன் இவர்கள் இப்போது ஒட்டுமொத்த வன்முறைக்கு மாறிவிட்டார்கள் என்பது எனக்குப் புரிகிறது. CAA இந்தியர்களுக்கு (முஸ்லிம்கள் உட்பட) எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தும் என்பதை இவர்கள் நிரூபிக்க முடியவில்லை. ஆமாம், முடியவில்லை என்று நான் மீண்டும் கூறுகிறேன். அவர்கள் அதை நிரூபிக்க முடியாததால், இப்போது அவர்களின் ஒரே வழி வன்முறையே.”

“ஷாஹீன் பாகின் மையத்தில் உள்ள இஸ்லாமிய தீவிரவாதமும் முஸ்லீம் பிரிவினை வாதமும் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்பட் டுள்ளன. இப்போது அவர்களால் வேறொரு முகத்தை எடுத்துக்கொள்ள முடியவில்லை. ஆகவே, அவர்களின் ஒரே வழி வன்முறையே. ஷாஹீன் பாக் என்ற பணம் சம்பாதிக்கும் நாடகத்தை ஊக்குவித்த அனைவரும் இன்றைய வன்முறைக்குப் பொறுப்பு ஏற்கிறார்களா? இன்று இந்தியர்கள் கொல்லப்படும்போது, அவர்கள் ஏன் மறைந்துகொண்டிருக்கிறார்கள்? இது வெளிப்படையாக பாகிஸ்தானுக்கான ஆதரவு, வெளிப்படையாக இந்திய இராணுவத்திற்கு எதிரானது.”

**CAA இந்தியர்களுக்கு (முஸ்லிம்கள் உட்பட) எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று உறுதியாக எப்படிக் கூற முடியும் என்பது தெளிவாக இல்லை, ஏனெனில் CAA இன்னும் அமல்படுத்தப்படவில்லை. அதன் விளைவுகள் அமல்படுத்தும் அனுபவத்தின் அடிப்படையில் மட்டுமே மதிப்பீடு செய்ய முடியும்.**

# வாதாடாமலேயே குற்றத்தை ஒப்பு கொள்ளுதல்



## முஸ்லிம் 'தீவிரவாதிகளின்' சாமர்த்தியமான முடிவு

**பிப்ரவரி மாத தொடர்ச்சி....**

இறுதியாக, முஸ்லிம் 'தீவிரவாதிகள்' புத்திசாலிகள் ஆகிவிட்டனர். பலனளிக்காத நீதிமன்ற போராட்டங்களை குறித்து அவர்கள் உணர்ந்து கொண்டனர். இறுதி வரை உறுதியுடன் போராடி தோற்றவர்களின் உதாரணங்கள் அவர்களின் முன் உள்ளது. ஆதாரம் பொய்யாக புனையப்பட்டது அல்லது திரிக்கப்பட்டது என்பது கண்களுக்கு எளிதில் தெரிந்த போதிலும்; அவர்கள் குற்றம் நிரூபிக்கப்பட்டு ஆயுள் அல்லது மரண தண்டனை வழங்கப்பட்டவர்கள்.

2006 மும்பை ரயில் குண்டுவெடிப்பு வழக்கு, 2006 அவுரங்காபாத் ஆர்டிஎக்ஸ் மற்றும் ஆயுத கடத்தல் வழக்கு, புனேவின் 2010 ஜெர்மன் பேக்கரி வழக்கு மற்றும் 2013 தில்சுக்நகர் (ஹைதரா பாத்) குண்டுவெடிப்பு வழக்கு ஆகியவை அவற்றுள் சில. மேலும் பல முக்கிய வழக்குகளான 2002 ஆக்ஷர்தாம் தாக்குதல் வழக்கு, 1993 சூரத் (குஜராத்) குண்டுவெடிப்பு வழக்கு, 1996 தில்லி–என்சிஆர் தொடர் குண்டுவெடிப்பு வழக்கு, 2003 முலுண்ட்–விலே பார்லே–சென்ட்ரல் மும்பை குண்டுவெடிப்பு வழக்கு, 2006 காலுப்பூர் (அஹமதாபாத்) குண்டுவெடிப்பு வழக்கு, 2006 டில்லி தொடர் குண்டுவெடிப்பு வழக்கு ஆகியவற்றில் அதிர்ஷ்டவசமாக நிரபராதி என நிரூபிக்கப்பட்டவர்களும் எளிதில் விடுதலையாகவில்லை. அவர்கள் ஆயுள் தண்டனையை போன்று 7 முதல் 21 ஆண்டுகள் வரை சிறை தண்டனை அனுபவித்து மறுபிறவி எடுத்துள்ளனர்.

முன்னர் பாதிக்கப்பட்டவர்களின் இந்த கசப்பான அனுபவத்தால் முஸ்லிம் தீவிரவாதிகள் என்று கூறப்படுபவர்கள் புரிந்து கொண்டனர். இதுவோ அல்லது அதுவோ எதுவாகினும் நாம் தோற்பது உறுதி என்பதை அறிந்திருந்தனர். குற்றம் சாட்டப்பட்டது என்பது சாட்டப் பட்டது மட்டும்தான். ஆனால் குற்றம் நிரூபிக்க முடியாமல் விடுதலை ஆவது என்பது ஒன்றும் நிவாரணம் அல்ல. அது சிறையில் கழித்த காலத்தை குறைக்கவில்லை; தீவிரவாத முத்திரையை போக்கவில்லை. ஆண்டுகள் செல்ல செல்ல அது பாவச்சுமையை அதிகரித்தே அல்லாமல் வேறில்லை. வழக்கை வாதாடுவதற்கு ஆயிரக்கணக்கில் பணத்தை வாரி இரைப்பதன் பலன் தான் என்ன என அவர்கள் ஆச்சர்யம் கொள்கிறார்கள். இந்த நிதர்சனத்தை அவர்கள் உணர்ந்ததால் தான் இத்தைகைய புதிய போக்கு உருவாக காரணமானது. அதாவது தன் மீது சாட்டப்பட்ட குற்றங்கள் அனைத்தையும் ஒப்பு கொள்வதன் மூலம் தன் வாழ்க்கையின் முக்கியமான 7 முதல் 15 வருடங்கள்

வரை சேமித்து மாறாத களங்கத்துடன் புதிய வாழ்க்கையை துவங்கலாம் என்பதே அது.

குறைந்த பட்சம் மூன்று வழக்குகளிலாவது முஸ்லிம் குற்றவாளிகள் முதலிலேயே குற்றத்தை ஒத்துகொண்டுள்ளார்கள் அல்லது முதலில் நிரபராதி எனவும் பின்னர் குற்றத்தை ஒத்து கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

## I) இந்து தலைவர்களை கொலை செய்ய சதி செய்த வழக்கு, பெங்களூர், 2012

### அ) உண்மைகளின் சுருக்கம்

தடை செய்யப்பட தீவிரவாத இயக்கங்களான லஷ்கர் –இ– தொய்பா (LeT–லஷ்கர்) மற்றும் ஹர்கதுல் ஜிஹாத் அல் இஸ்லாமி (HuJI - ஹுஜி) ஆகியவற்றை சேர்ந்த சில உறுப்பினர்கள் சமூக விரோத செயல்களை செய்யப்போவதாக பெங்களூர் மாநகர குற்றப் பிரிவு (CCB) போலீசாருக்கு நம்பத் தகுந்த தகவல் கிடைக்கிறது. அதாவது, பெங்களூர், ஹூப்ளி, ஹைதராபாத் & நான்தத் பகுதிகளின் இந்து சமுதாய முக்கிய தலைவர்களை கொலை செய்வது, அதன்மூலம் இந்தியாவில் சமூக அமைதியை குலைப்பது போன்றவை. அவர்களில் சிலர் சட்ட விரோதமாக ஆயுதங்கள் வைத்திருப்பதாகவும் அறியப்பட்டது.

சந்தேகத்துக்கு உள்ளான நபர்கள் மீதான கண்காணிப்பை அதிகப்படுத்தியது பெங்களூர் காவல்துறை. 29 ஆகஸ்ட் 2012 அன்று ஷோயப் அஹ்மத் மிர்ஸா (எ) சோட்டா மற்றும் அப்துல் ஹக்கீம் ஜமாதார் ஆகியோர் 'கன்னட பிரபா' எனும் பத்திரிகையில் எழுதி வரும் பிரதாப் சிம்ஹா என்பவர் அடிக்கடி வந்து செல்லும் வீட்டின் அருகே சுற்றித் திரிந்ததை கண்டனர். அவர்கள் இருவரும் சட்ட விரோதமான முறையில் ஆயுதங்கள் வைத்திருந்த தால் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப் பட்டனர். தகுந்த சட்ட பிரிவுகளில் பசவேஷ்வர் நகர் காவல் நிலையத்தில் வழக்கு எண் 384/2012 ஆக பதிவு செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, மேலும் பல குற்ற வாளிகள் பின்னர் கைது செய்யப்பட்டனர்.

லஷ்கர் அமைப்புக்கு துணை நிற்கும் தீவிரவாத குழுக்கள் சவூதி அரேபியா மற்றும் பாகிஸ்தானில் அதிகமாக இருப்பதாகவும் அவர்களுக்கு உதவி செய்பவர்கள் கர்நாடகா, ஆந்திரா மாற்றும் மராட்டிய மாநிலங்களில் இருப்பதாகவும் அந்த விசாரணையில் தெரிய வந்துள்ளது.



**எஸ்.எம். முஷ்ரிஃப், IPS**
*முன்னாள் இன்ஸ்பெக்டர் ஜெனரல், மகாராஷ்டிரா காவல்துறை*

இந்தியாவில் தீவிரவாத செயல்களில் ஈடுபடுவதற்கான பெரும் சதித் திட்டம் தீட்டுவதுதான் அவர்களின் எண்ணமாக இருந்துள்ளது. இவ்வழக்கின் சர்வதேச தொடர்பு களை கருத்தில் கொண்டும் அதனால் ஏற்படும் தாக்கத்தை கருத்தில் கொண்டும் இந்த வழக்கை தேசிய விசாரணை முகமைக்கு (NIA – என்.ஐ.ஏ) 16 நவம்பர் 2012 தேதியிட்ட உத்தரவின் மூலம் மாற்றியது இந்திய அரசு.

விசாரணையை முடித்த பின்னர், பிப்ரவரி 20, 2013 அன்று 13 முஸ்லிம் இளைஞர்கள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது என்.ஐ.ஏ. பெங்களூர், ஹூப்ளி, ஹைதராபாத் & நான்தத் நகரங்களின் முக்கிய இந்து தலைவர்கள், பத்திரிக்கையாளர்கள் அரசியல்வாதிகள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் ஆகியோரை கொலை செய்வதற்கான சதித் திட்டம் தீட்டியது தான் அவர்கள் மீதான குற்றச்சாட்டு ஆகும். இதன் மூலம் இந்தியாவில் சமூக அமைதியை குலைத்து இந்திய அரசுக்கு எதிராக போர் தொடுப்பது அவர்கள் குறிக்கோளாக சொல்லப்பட்டுள்ளது. இந்த குறிக்கோளின் அடிப்படையில் அவர்கள் பின்வரும் சட்ட விரோத செயல்களை செய்ததாக கூறப்பட்டுள்ளது:

1) கொல்வதற்கான இலக்காக இந்து தலைவர்களை அடையாளம் கண்டது.

2) சட்ட விரோதமாக ஆயுதங்கள் சேகரித்தது.

3) சுடுவதற்கான பயிற்சி மேற்கொண்டு ஆயுதங்களை சோதித்தது.

4) லஷ்கர் மற்றும் ஹுஜி அமைப்புக்கு ஆள் சேர்த்தது; அவர்களில் சிலர் பாப்புலர்


vaigarai velicham official

ஃபிரண்ட் ஆஃப் இந்தியா (PFI) அமைப்பை சேர்ந்தவர்களாக இருந்ததும், அவர்கள் 'எதிரிகளோடு' குறிப்பாக கலவர நேரங்களில் வீழ்த்துவதற்கான கடும் போக்கு சிந்தனை உடையவர்கள் என்பதும்.

5) குற்றம் சாட்டப்பட்டவர்களில் இருவர் ஈரான் வழியாக பாகிஸ்தானுக்கு சென்று மூத்த ஐ.எஸ்.ஐ அதிகாரிகளை சந்தித்த தாகவும்; அங்கு பயிற்சி மேற்கொண்டதாகவும்,

6) அவர்களில் ஒருவர் ஓட்டுநர் பணியில் செல்வதாக கூறிக் கொண்டு சவூதி அரேபியா சென்றதாகவும்; அங்கு ரியாத்தில் தம்மாமிலும் சதித் திட்டம் தீட்டும் கூட்டங்கள் நடத்திய தாகவும்,

7) தீவிரவாத செயல்களுக்கு பணம் திரட்டும் பொருட்டு ஹூப்ளியின் சில நகைக்கடைகளை கொள்ளையிட திட்ட மிட்டது.

8) போலியான அடையாள அட்டைகளை பயன்படுத்தி பல்வேறு சிம் கார்டுகள் வாங்கியது.

9) பல்வேறு பெயர்களில் பல்வேறு இமெயில் ஐடிக்கள் உருவாக்கியது; சதி செயலுக்கு தொடர்புடைய வகையில் மறைகுறியாக்கப் பட்ட தகவல் பரிமாற்றம் செய்தது.

## அ) குற்றச்சாட்டிற்கு பலம் சேர்க்கும் ஆதாரங்கள்

1) கஸ்டடியில் இருக்கும்போது குற்றம் சாட்டப்பட்டவர்கள் அளித்த வாக்குமூலம்.

2) நீதிபதியின் முன் ஏழு பேர் அளித்த சாட்சி வாக்குமூலம்.

3) அடையாள அணிவகுப்பில் நான்கு குற்ற வாளிகளை அடையாளம் கண்டது.

4) இமெயில் சேவை நிறுவனங்களிடம் பெறப்பட்ட இமெயில் ஐடிக்களின் தகவல்கள் கொண்ட குறுந்தகடு.

5) குறிப்பிட்ட சிலரை கொல்வதற்கும்; கொள்ளை அடிப்பதற்கும் திட்டமிட்ட மறை குறியாக்கப்பட்ட இமெயில் செய்திகள்.

6) குற்றவாளிகள் தங்களுக்குள் பேசி கொண்டதற்கான செல்போனின் அழைப்பு தகவல் பதிவுகள்.

7) மூன்று குற்றவாளிகளின் பாஸ்போர்ட்.

8) குற்றவாளிகள் துப்பாக்கி பயிற்சி மேற்கொண்ட இடத்திலிருந்து கிடைத்த இரண்டு குண்டுகள், குற்றவாளிகள் தகவல் பரிமாற் றத்துக்கு இணையதளம் பயன்படுத்திய கணினி மையத்தின் ஹார்ட் டிஸ்க்குகள், ஒரு மாருதி 800 கார், ஒரு கேனான் கேமரா, இன்னும் பல.

9) அவர்களில் ஒரு குற்றவாளி வழங்கிய குறிப்புகளின் அடிப்படையில் வரையப்பட்ட இச்சதி செயலுக்கு சூத்திரதாரியான ஜாகிர் (எ) உஸ்தாத் என்பவனின் வரைபடம்.

10) ஆயுதங்கள் குறித்த பெங்களூர் தடயவியல் பரிசோதனை மையத்தின் அறிக்கை.

## ஆ) ஆதாரங்கள் எந்த அளவுக்கு நம்பத்தகுத்தவை

பொதுவாக பார்க்கும்போது, அதனளவில் மறுக்க முடியாததாகவும் நம்ப முடியாததாகவும் இருக்கிறது. வெளிநாடுகளுக்கு பயணம் செய்ததாக சொல்லப்பட்ட குற்றவாளிகளின் பாஸ்போர்ட், செல்போன்கள் மற்றும் குற்ற வாளிகள் தங்களுக்குள் பேசி கொண்டதற்கான செல்போனின் அழைப்பு தகவல் பதிவுகள், இமெயில் கணக்குகள் மற்றும் அவற்றின் மூலம் அனுப்பப்பட்ட இமெயில் செய்திகள் ஆகியவற்றை தவிர மற்ற அனைத்து ஆதாரங் களும் காவல்துறையால் மாறுதல் செய்ய முடிந்தவை அதனால் அவற்றை தீவிரமாக விசாரிக்காமல் நம்புவதற்கில்லை. பாஸ்போர்ட், செல்போன்கள் மற்றும் இமெயில் செய்திகளில் கூட எச்சரிக்கையோடு இருப்பது அவசியமா கிறது. குற்றவாளிகள் பாகிஸ்தான் அல்லது மற்ற நாடுகளுக்கு பயணிப்பது விசாரணை அதிகாரி களின் கற்பனை குதிரைகள் பறப்பதாகவே பெரும்பாலும் இருந்துள்ளது. குற்றம் சாட்டப் பட்டவர்களின் பாஸ்போர்ட்களில் உள்ள பதிவுகளை அவர்களின் சொந்த கதைகளுக்கு வலுசேர்க்கும் விதமாக பயன்படுத்திடுவதுதான் அது.

உதாரணமாக, இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் இருவர் ஈரானுக்கு உரிய ஆவணங்களுடன் சென்றதாகவும் பின்னர் ரகசியமாக பாகிஸ்தானுக்கு சென்றதாகவும், லஷ்கர் உறுப்பினர்களையும், ஐ.எஸ்.ஐ ஏஜெ ண்ட்களையும் சந்தித்த தாகவும் கூறுவது, அதுபல இஸ்லாமியர்கள் செல்லும் 'கும்' எனும் புனித

தலத்துக்கு அவர் சென்று வந்திருக்கலாம். அதன் காரணமாக அவரின் பாஸ்போர்ட்டில் ஈரான் குடியுரிமை முத்திரை இருந்திருக்கலாம். அவர்கள் சட்ட விரோதமாக நுழைந்ததையும், லஷ்கர் மற்றும் ஐ.எஸ்.ஐ நபர்களை சந்தித்ததையும், அங்கு பயிற்சி பெற்றதையும் நிரூபிக்காத வரை; அந்த உண்மை மட்டுமே போதாது அரசு தரப்பின் கதையை சரி காண்பதற்கு.

அதைபோலவே, சவூதி அரேபியாவிற்கு சென்றவரையும் கருதலாம். அவர் அங்கு வேலை தேடுவதற்காக சென்றிருக்கலாம். அது மட்டுமே அவர் சதித் திட்டத்துக்கு காரணமானவர்களை அங்கு சந்தித்ததையும், மேலும் சதித் திட்டம் தீட்டியதையும் நிரூபிக்க போதுமாதாக இல்லை. அரசு தரப்புதான் அதற்கான மறுக்கவியலாத உறுதிப்படுத்தும் சாட்சியங்களை அளிக்க வேண்டும்.

இதுவரை, மொபைல் போன்களின் ஆதாரத்தை பொறுத்த வரை அதன் உரிமையாளர் பற்றி தெளிவாக தெரியாமல் அதை சார்ந்து இருக்கமுடியாது. மொபைல்சிம்கார்டுகள்அனைத்தும் குற்றவாளிகள் அடுத்தவர் பெயரில் போலியான ஆவணங்கள் கொடுத்து வாங்கப்பட்டதாக குற்றப்பத்திரிகையில் இருந்து தெரிய வருகிறது. அப்படியெனில், சம்மந்தப்பட்ட குற்றவாளிகள் தான் ஆவணங்களை போலியாக தயார் செய்து அதை பயன்படுத்தி சிம் கார்டுகள் வாங்கியதாக நிரூபிக்கப்பட வேண்டும். அதை செய்யாமல் குற்றவாளிகளுக்கு எதிராக மொபைல் ஆதாரத்தை உபயோகிக்க முடியாது.

இமெயில் கணக்குகள் மற்றும் அதன் மூலம் அனுப்பிய மெயில்களை பொறுத்த வரை இதே நிலைதான். ஒவ்வொரு இமெயில் கணக்குகள் மற்றும் அவற்றின் மெயில்களின் IP அட்ரஸ், MAC அட்ரஸ், இடம், தேதி மற்றும் நேரம் ஆகியவையும் லேப்டாப் அல்லது கணினி போன்றவற்றையும் கண்டறிய வேண்டியது தேவையாகிறது. இந்த வழக்கில் லேப்டாப்கள், ஹார்டு டிஸ்க்குகள் & பென் டிரைவ்கள் ஆகியவற்றின் தடயவியல் ஆய்வக டிஜிட்டல் ஆய்வு அறிக்கை இன்னும் பெறப்படவில்லை. அதுபோலவே, Mutual Legal Assistance Treaty (MLAT) எனும் உடன்படிக்கையின் படி தகவல்களை பரிமாறிக்கொள்ள அல்லது பயன்படுத்திகொள்ள அமெரிக்க அரசின் அனுமதி இன்னும் கிடைக்கவில்லை.

இமெயில் கணக்குகள் மற்றும் இமெயில் செய்திகள் தெளிவாக நிறுவப்படாதது மட்டுமல்லாமல் கூடுதலாக அவை குறியீட்டு மொழியில் (Coded Language) உள்ளது என்பது ஒத்துக்கொள்ளப்பட்ட உண்மையாகும். அது எவ்வாறு டீகோட் செய்யப்பட்டது என்பது குற்றப்பத்திரிகையில் எங்கேயும் குறிப்பிடப்பட வில்லை. அவை அறிவியல் ரீதியாக டீகோட் செய்யப்பட்டதா அல்லது குற்றவாளிகள் தாங்களாகவே முன் வந்து டீகோட் செய்து தந்தார்களா? அவர்களாக முன் வந்து செய்தார்கள் எனில், விசாரணை அதிகாரிகளால் மாற்றப் பட்டிருக்க வாய்ப்புள்ளது என்பதால் அதை ஆதாரமாக கொள்வதன் மதிப்பு குறைந்துவிடும்.

## இ) அந்த இளைஞர்கள் குற்ற ஒப்புதல் அளித்தது சிறந்த முடிவு

வழக்கு பலகீனமானது, ஆதாரங்கள் உடைய சாத்தியங்கள் உள்ளது. அதனால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் வழக்கில் வெற்றி பெறுவார்கள் என்பது தெளிவு. ஆனால், திடீரென ஒரு நாள் காலையில் அவர்கள் புதிய மனு ஒன்றை தாக்கல் செய்தனர். தாங்கள் நிரபராதி என்பதில் இருந்து மாறி குற்ற ஒப்புதல் தரும் மனு அது. இது எதிர்பாராத செயலாகும். இதுபோன்ற கடுமையான முடிவை எடுக்க காரணம் என்னவாக இருக்கும்?

அதற்கு பல காரணங்கள் உள்ளன. அவர்கள் ஜாமீன் கூட வழங்கப்படாமல் நான்கு ஆண்டுகள் சிறையில் வாடியுள்ளனர். வழக்கு விசாரணை நத்தை வேகத்தில் நடந்துகொண்டிருந்தது. ஜூன் 2014ல் துவங்கிய வழக்கில் இரண்டு ஆண்டுகளில் 246 சாட்சிகளில் வெரும் 14 சாட்சிகள் மட்டுமே விசாரிக்கப்பட்டுள்ளனர். இதனால் இந்த வழக்கானது இப்போதெல்லாம் முடிவதற்கு வாய்ப்பே இல்லை என்பதனால் ஆகும். அவர்கள் வழக்கறிஞர்களுக்கு அதிகமாக பணத்தை செலவு செய்தும் பலன் தெரியவில்லை. அவர்கள் சிறையில் வாடியபோது அவர்களின் வாழ்க்கை வீணாகியது. இத்தகைய காரணிகள் அவர்கள் வழக்கை நடத்த போராடுவதில் உள்ள சாதக பாதகங்களை குறித்து சிந்திக்க வைத்திருக்கலாம். குற்றம் நிரூபிக்கப்பட்டால், அவர்களுக்கு ஏழு ஆண்டு கால சிறை தண்டனை

கிடைக்கலாம். நிரபராதி என தீர்ப்பு வந்தாலும் அவர்கள் விடுதலை ஆவதற்கு இன்னும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் காத்திருக்க நேரிடும். எந்த வகையிலும் அவர்கள் தங்கள் மீதுள்ள 'தீவிரவாதி' எனும் முத்திரையை எஞ்சிய ஆயுள் காலம் முழுவதும் சுமக்க வேண்டியது வரும்.

ஆகையால் அவர்கள் குற்றம் ஒப்புதல் அளிப்பது விவேகமான செயல் என கருதி இருக்கலாம். எப்படி என்றாலும் கடைசி நேரத்தில் நடப்பதை விட இப்போது நடந்தால் தங்கள் ஆயுளின் மதிப்புமிக்க 3 அல்லது 4 ஆண்டுகளை சேமிக்கலாம் என்பதாக. 2016ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ம் நாள், 13 இளைஞர்களும் குற்ற ஒப்புதல் அளிக்க விரும்புவதாக NIA சிறப்பு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர். இதன் பின் விளைவுகளை அவர்களுக்கு விளக்கி, சிந்தித்து முடிவு செய்ய இரண்டு நாட்கள் அவகாசம் அளித்தார் நீதிபதி.

செப்டம்பர் 1ம் நாளன்று, அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்திய போது, அவர்கள் உறுதியாக இருந்து அவர்கள் ஏற்கனவே எடுத்த முடிவை உறுதிபட தெரிவித்தனர். கருத்துரை வழங்குமாறு நீதிமன்றம் NIAவை கேட்டு கொண்டது. தீவிரவாத வழக்கில் குற்றவாளிகள் குற்ற ஒப்புதல் வழங்குவது இதுவே முதல் முறை என்பதால், தண்டனை பெற்று தரும் வாய்ப்பு இருப்பதை அறிந்து கொண்டது NIA.

NIA கடுமையான தண்டனை தருவதற்கு அழுத்தம் கொடுக்கவில்லை மாறாக, மென்மை யாக நடந்து கொள்ள பச்சை கொடி காட்டியது. 2016ம் ஆண்டு செப்டம்பர் 15ம் நாள், நீதிமன்றம் அனைத்து குற்றவாளிகளையும் அனைத்து குற்றங் களுக்காகவும் ஐந்தாண்டு சிறை தண்டனை வழங்கி தண்டித்தது.

இதுதான் அந்த இளைஞர்களின் புத்தி சாலித்தனமான முடிவாகும். இவ்வாறு செய்ததன் மூலம் அவர்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பி விட்டார்கள் என்றாலும் அது தீவிரவாதி எனும் பட்டத்துடன் தான். அது மட்டுமல்லாது இது மற்ற முஸ்லிம் தீவிரவாதிகள் என்று சொல்லப் படும் அல்லது முத்திரை குத்தப்படும் நபர்களுக்கு வழி காட்டி விட்டனர்.

2) ISIS சித்தாந்தத்தை பரப்புவது, மக்களை ஊக்குவிப்பது மற்றும் நிதி திரட்டுவது ஆகியவற்றிற்கான சதி வழக்கு (டெல்லி 2016)


இந்த வழக்கின் (RC-04/2016/NIA/DLI) குற்றப் பத்திரிக்கை புது டெல்லி NIAவினால் 25, ஜூலை 2016 அன்று பின்வரும் மூன்று குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சமர்ப்பிக்கப் பட்டது:

(A1) ஷேக் அசாருல் இஸ்லாம் (எ) அல் ஷேக் ஆபி – பிராங் கிராமம், கந்தர்பால் மாவட்டம், ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை சேர்ந்தவர்.

(A2) அதனால் ஹசன் (எ) ஆனந்த் முஹம்மத் (எ) ஹசன் முஹம்மத் (எ) ஆனந்த் கௌடா – பத்தல் நகரம், கர்நாடகா மாநிலத்தை சேர்ந்தவர்.

(A3) முஹம்மத் ஃபர்ஹான் ஷேக் (எ) காகா இப்ன் அம்ரு (எ) காலித் பின் வலீத் – கவுசா மும்ப்ரா பகுதி, தானே மாவட்டம், மஹாராஷ்ட்ரா மாநிலத்தை சேர்ந்தவர்.

**அடுத்த இதழில் தொடரும்..**



# ஃபாலஸ்தீன முஸ்லிம்கள்

## அகதிகளான வரலாறு

தொடர்...



பிப்ரவரி மாத தொடர்ச்சி....

### 1946களில்...

இந்தக் கட்டுரையை காந்திஜி அவர்கள் எழுதியபின் யூதர்களைப் பாலஸ்தீனில் குடியமர்த்துவது என்பதில் பிரிட்டன், அமெரிக்கா, ஆகிய நாடுகள் தீர்க்கமுடன் செயல்பட்டன.

யூதர்கள் தீவிரவாத செயல்களின் வழி பாலஸ்தீனில் தங்களுக்கொரு நாட்டை உருவாக்கிட ஆயத்தமானார்கள்.

இந்தப் பின்னணியில் காந்திஜி தனது ஹரிஜன் பத்திரிகையில் ஜூலை 21, 1946 இல் ஓர் கட்டுரையை எழுதினார்கள் அது:

"உலகம் யூதர்களுக்கு பல அநீதிகளை இழைத்தது. ஐரோப்பாவில் அவர்கள் வாழுமிடங்களைத்தான் சேரிகள் 'Ghet- tos' என அழைத்தார்கள். அவர்களை அவ்வாறு கஷ்டங்களுக்கு ஆட்படுத்திடவில்லை என்றால் அவர்கள் பாலஸ்தீனை நோக்கிவரும் நிலை ஏற்பட்டிருக்காது. மொத்த உலகமும் அவர்களின் வசிக்குமிடமாக ஆகி இருக்கும்."

"ஆனால் இப்போது என் கருத்துப்படி அவர்கள் பாலஸ்தீனில் தங்களைத் திணிக்க எண்ணற்ற தவறுகளைச் செய்கின்றார்கள். அவர்கள் பாலஸ்தீனில் தங்களைக் கட்டாயமாக அமர்ந்திட பிரிட்டன், அமெரிக்கா ஆகியவற்றின் உதவியை நாடுகின்றார்கள். இப்போது தீவிரவாதத்தை முழுமையாக நாடுகின்றார்கள். அவர்கள் உலகக் குடிமக்களாக இருந்திருந்தால் இன்றும் இனிவரும் நாள்களிலும் கண்ணியமிக்கவர்களாக இருந்திருப்பார்கள். அவர்களின் உழைப்பும் சுறுசுறுப்பும் அவர்களை உலகின் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் ஏற்றுக் கொள்ள செய்திருக்கும்."

"கிறிஸ்தவ உலகம், புதிய ஏற்பாட்டை



vaigarai velicham official

தவறாகப் புரிந்துகொண்டு அவர்களைத் (யூதர்களைத்) தனிமைப்படுத்தி ஏராளமான கொடுமைகளைச் செய்துவிட்டது. இது கிறிஸ்தவ உலகின் மீது விழுந்த மாறாத வடுவாகும். இன்னும் யூதர்களை அவர்கள் மாச்சர்யத்தோடு ஏன் பார்க்கின்றார்கள்? ஏதோ ஒருவன் செய்ததற்காக ஓர் சமுதாயத்தைத் தண்டிப்பது சரியல்ல."

"ஐன்ஸ்டின்-ஐ போன்ற ஒரு யூத விஞ்ஞானி ஒரு கண்டுபிடிப்பைக் கண்டுபிடித்துத் தந்தான் என்றால், அதனால் வரும் கீர்த்தி அவனையே சாரும். அதே நேரத்தில் அவனைப் போன்ற ஒருவன் தவறு செய்கின்றான் என்றால் அதனால் வரும் பழியும் அவன் ஒருவனையே சாரும். அல்லாமல் அவன் சார்ந்த சமுதாயத்தைச் சாராது."


"யூதர்கள் கொடுமைப்படுத்தப்பட்டார்கள் (கிறிஸ்தவ உலகத்தால்) என்ற உண்மை அவர்களுக்கு (யூதர்களுக்கு) அமைதியான வழிமுறைகளின் ஆற்றலை அவர்களுக்கு உணர்த்தி இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் பிரிட்டன் நாட்டின் ஆயுதங்களையும் அமெரிக்க நாட்டின் பணத்தையும் தங்களது தீவிரவாதத்தையும் நம்பி, தங்களுக்கு எந்தத் தீமையையும் செய்யாத மக்களின் பூமியில் ஏன் தங்களை நட்டுக்கொள்ள நாடுகின்றார்கள்? அவர்கள் பாலஸ்தீனில் தங்களைத் திணித்திட ஏன் தீவிரவாதத்தை நாடுகின்றார்கள்?"

**– மோகன்தாஸ் கரம் சந்த் சாந்தி**

## காந்திஜியின் கடிதம் ஒரு வரலாற்றுப் பார்வை

காந்திஜி அவர்களின் கடிதம் திரும்பத்திரும்ப ஓர் உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டு கின்றது. அது கிறிஸ்தவ உலகம் பல கொடுமை களையும், குரூரங்களையும் யூதர்கள் மீது கட்டவிழ்த்துவிட்டது. அரபுக்கள் யூதர்களுக்கு எந்தக் கொடுமையையும் செய்திடவில்லை.

அதேபோல் பாலஸ்தீனில் தீவிரவாதத்தின் மூலம் தான் யூதர்கள் தங்களைத் திணித்துக் கொண்டார்கள் என்பதையும், அதற்கு அமெரிக் காவின் பணமும் பிரிட்டனின் ஆயுதங்களும் பயன்படுத்தப்பட்டன என்பதும் தெளிவு படுத்துகின்றார் காந்திஜி அவர்கள்.



யூதர்கள் தொடக்க நாட்களில்ஐரோப்பாவில் தான் தங்களுக்கு ஒரு நாடு வேண்டும் எனக் கோரினார்கள். ஆனால் யூதர்களை (காந்தியடிகள் குறிப்பிடுவதைப்போல் தீண்ட தகாதவர்களாக கருதிய) ஐரோப்பியர்கள் அவர்களை பாலஸ்தீன் நோக்கி அனுப்பினார்கள். இதற்குத் தேவையான வகையில் வேதங்களில் திருத்தங்களைக் கொண்டு வந்தார்கள்.

யூதர்கள் வரலாறு முழுவதும் தண்டிக்கப் பட்டிருக்கின்றார்கள். காரணம் காழ்ப்போ கசப்போ அல்ல. மாறாக அவர்கள் தங்களை அரவணைத்த சமுதாயங்களையெல்லாம் வஞ்சித்திருக்கின்றார்கள், கொலை செய்திருக் கின்றார்கள், செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை உலகம் நன்றாக அறியும். இதே போல் வரலாறு முழுவதும் அவர்கள் வாழ்ந்திருக்கின் றார்கள். அதனால்தான் அவர்கள் தண்டிக்கப் பட்டிருக்கின்றார்கள்.

இனி யூதர்கள் இந்த உலகம் முழுவதும் தங்கள் ஆட்சியின் கீழ்தான் இருக்க வேண்டும் என்ற வெறியோடு செயல்பட்டு வருகின்றார்கள். இதனை அகண்ட இஸ்ரேல் என்று அவர்கள் அழைக்கின்றார்கள். இந்த அகண்ட இஸ்ரேலை யும் அவர்கள் வேதங்களில் வாக்களிக்கப்பட்டது என்று கூறுகின்றார்கள்.

அவர்கள் (யூதர்கள்) காந்தியடிகளின் காலத்தில் தாம் தீவிரவாதத்தைக் கையாண் டார்கள் என்றில்லை. மாறாக இன்றளவும் அவர்கள் அதையே கையாண்டு வருகின்றார்கள். பெண்களையும் குழந்தைகளையும் கொலை செய்வதை வழிமுறையாகக் கொண்டவர்கள் இதில் இன்றைக்கும் அமெரிக்காவும் பிரிட்டனும் துணை நிற்கின்றன.

அனைவரின் ஆதங்கங்களையும் தேற்றும் அளவில் இப்போது ஹிஸ்புல்லாஹ், ஹமாஸ் போன்ற அமைப்புகள் அவர்களைத் தடுத்து நிறுத்தி வருகின்றன.

அவர்களின் கைகளிலிருந்து பிரவாகமெடுத் தோடிய அநியாயங்கள் தடுக்கப்பட்டுள்ளன. ■

# நமது தாஃவா பணிகளில் ஒரு மைல்கல்..!

**இஸ்லாத்தை** ஏற்றுக்கொண்ட இளைஞர்கள் குறிப்பாக, படித்தவர்கள் ஓர் பிரச்சனையை எதிர்கொண்டார்கள்.

இவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவுடன் தங்கள் பெயரை மாற்றிக்கொள்கின்றார்கள். வேலை வாய்ப்புகளுக்கு தேர்வை எழுதுகின்றார்கள். வென்று விடுகின்றார்கள். ஆனால், வேலைக்கான உத்தரவுகளை அனுப்ப மாட்டேன் என்கின்றார்கள்.



அவர்கள் பழைய இட ஒதுக்கீடுகளிலும் வேலை தருவதில்லை.

இஸ்லாத்தை ஏற்றபின், BCM என்ற Backward Class Muslim என்ற பட்டியலிலும் தருவதில்லை.

போதுமான அளவுக்கு மதிப்பெண்களைப் பெற்றிருந்தால், பொதுப் பட்டியலில் வேலை தரலாம். அதையும் தருவதில்லை.

இதனை நமது தாஃவா பயணங்களின்போது அந்த மக்கள் நம்மிடம் தெரிவித்தார்கள்.

மீனாட்சிபுரம் (இப்போது ரஹ்மத் நகர்) என்ற இடத்தைச் சார்ந்த ஒருவர் இந்தத் தகவலை நம்மிடம் தெரிவித்தார்.

உடனேயே மதுரை நீதிமன்றத்தை அணுகினோம். வைகை சட்ட நிறுவனம்தான் வழக்கை நடத்தியது. நீதிமன்றம் வழக்கில் தீர்ப்பைத் தந்தது. அந்தத் தீர்ப்பில், ஒரு பணியிடத்தை எடுத்துத் தனியாக வைத்திட வேண்டும் எனத் தீர்ப்பைத் தந்தது.


அரசு இதில், ஓர் முடிவெடுக்கும் வரை என்றது. நாம் தொடர்ந்து வழக்காடியபோது BCM இல் வேலை தர தீர்ப்பு வழங்கப்பட்டது. (பார்க்க 2.04.2024 தீர்ப்பு)

இதனிடையே இந்தப் பிரச்சனை அரசின் பார்வைக்கு வந்தது. தம்பி ஜவாஹிருல்லாஹ், சட்ட மன்றத்தில் பிரச்சனையை எழுப்பினார்.

அந்தப் பின்னணியில் தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்கள், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு BCMஇல் வேலை தந்திட வேண்டும் என்ற உத்தரவைப் பிறப்பித்தார்.

மொத்த விவகாரத்தையும் பேசி நாம் ஓர் வீடியோவையும் ஒளிபரப்பினோம்.

அல்ஹம்துலில்லாஹ்.


அமெரிக்காவின் நிறவெறி கொள்கையை இஸ்லாத்தை முன் வைத்து முறியடித்த மாவீரன் மால்கம் X என்ற மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத். தான் இஸ்லாத்தை ஏற்றார், அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து நிரந்திரமாக மீட்டார்.

“ஹஜ்” பயணம் என்ற புனித மக்கா மாநகரம் சென்று இஸ்லாம் தொடங்கிய பூமியில் தன் கடமையை முடித்தார். சவூதி அரேபியா அரசின், அரசு விருந்தினர் என்ற கண்ணியத்தோடு.

16 ஆப்ரிக்கா நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தார். லட்சக்கணக்கானவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யும் தனது பெரும் பயணத்தின் ஒரு பகுதியாக, "கேசியஸ் கிளே" என்ற உலக மகா குத்துச் சண்டை வீரனை முஹம்மத் அலீ கிளேயையும் இஸ்லாத்தில் இணைத்தார்.

ஆனால், அமெரிக்காவின் வெள்ளை நிறவெறியர்களால், இதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் அதாவது, குழு கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளை நிற அமைப்பைச் சார்ந்தவர்கள் அமெரிக்காவின் உளவுத்துறையின் உதவியோடு மால்கம்-X அவர்களை பிப்ரவரி 21-1965 இல் கொலை செய்து விட்டார்கள்.

தொடர்புக்கு: 7401213394/7358278146/8148129887






பீ.எம். அப்துல் கரீம்
(ஆலோசனைக்குழுத் தலைவர்
இ.இ.மு.சங்கம், குளச்சல்)


# நான் ஹஜ்ஜில் கண்டதும் கேட்டதும்

**நபியே!** நினைவூட்டுவீராக உம் இறைவன் ஆதமுடைய மக்களின் முதுகுகளிலிருந்து அவர்களுடைய சந்ததிகளை வெளியாக்கி அவர்களை தங்களுக்கு சாட்சியாக வைத்து "நான் உங்களுடைய இறைவனல்லவா? என்று கேட்டதற்கு அவர்கள் மெய்தான் நாங்கள் சாட்சி கூறுகிறோம் என்று கூறியதை அவர்களுக்கு நினைவூட்டுவீராக! இது நினைவூட்டப்படாமல் இருந்தால் நிச்சயமாக இதனை மறந்து பாரா முகமாக இருந்துவிட்டோம் என்று மறுமை நாளில் நீங்கள் யாருமே சொல்லாதிருக்கவும். திருமறை *7:172*

*1964* ஆண்டிலிருந்து ஐவேளைத் தொழுகை ஏனைய இஸ்லாமிய கடமைகளை முறையாக நிறைவேற்றி வருகிறேன். குளச்சல் நஜ்முல் இஸ்லாம் மத்ரஸாவில் கணியாபுரம் ஹாஜி. இ.முகம்மது நூஹ் மௌலவியிடம் அரபியும் மார்க்க கல்வியும் சுமார் இருபதுக்குமேல் மாணவ, மாணவிகள் கற்றோம். முன்பு நம்மாவட்டம் கேரளப் பகுதியோடு இருந்ததால் நோன்பு மாதத்தில் நம் பகுதிக்கு தங்கள்மார்கள், மார்க்க அறிஞர்கள் ஜும்ஆ நாட்களில் வந்து மார்க்க பேருரைகள் ஆற்றுவர். நம் பகுதி மக்கள் அரேபியா சென்றதிலிருந்து இம்மாதிரி பேருரைகளும் உலமாக்களின் வரவும் இல்லை. நான் மிகவும் சிறுவனாக இருக்கும்பொழுது என்னைக் கவர்ந்த மலையாள சொற்பொழிவாளர் பொன்னானி அப்துல்லாஹ் முஸ்லியார் *1967*-ல் நம் ஊரிர் ரிபாயி மஸ்ஜிதில் நடைபெற்ற மார்க்க பேருரையில் சிறப்புரையாற்றிய மூதறிஞர் உத்தமபாளையம் ஹாஜி. மௌலவி P.S.K. முகம்மது இப்ராஹீம் மௌலவியுடைய மற்றும் இந்திய சுதந்திர தியாகியும் சுபாஸ் சந்திரபோசின் மொழிபெயர்பாளருமான பள்ளப்பட்டி மணிமொழி மௌலானா ஹாஜி M.J. கலீலுர்ரகுமான் பாகவியுடையவும் மார்க்க பேரூரைகள் என்னைக் கவர்ந்ததாகும். இருவர் பேச்சும் வேறுபட்ட நடையை உடையது. இருவரும் மர்ஹூம்களாகி விட்டனர்.

நம்மூர் அன்றைய ஜமாஅத் நிர்வாகிகள் வற்புறுத்தவே ஓர் ஜூம்ஆவில் மணிமொழி மௌலானா குதுபா பேருரை தன் சிம்மக் குரலில் அரபியிலும் தமிழிலும் நிகழ்த்தினார்கள். நம் ஜூம்ஆ பள்ளியில் அந்த ஜூம்ஆ நாளில் கூடிய மக்கள் மௌலவியின் "குதுபா" பற்றியே பேசினர். என் வாழ்நாளில் அது போன்று ஒரு

"குதுபா" பேருரை நான் கேட்டதில்லை. அரபி மத்ரஸாவில் நானும் மாணவர்களும் ஓதும் போது நம்மூர் ஜூம்ஆ பள்ளி வாசல்களில் வரும் தங்ஙள்மார்கள் உலமாக்களுக்கு கிதுமத் தென்னும் பணிவிடை செய்வோம். அவர்கள் ஊர் புறப்படும்பொழுது என்னிடம் மகனே! நீ "ஹஜ்" செய்யும் என வாழ்த்தியுள்ளனர். அவ்வாழ்த்தோடு நாம் "ஹஜ்" செய்ய வேண்டு மென்ற எண்ணமும் சிறு வயது முதற்கொண்டே இருந்தது.

மனதிடம், வினை திடம் என்பதிற்கிணங்க வல்ல அல்லாஹ் வாழ்க்கைப் போராட்டத்திற் கிடையே ஹஜ்ஜு செய்யும் வசதியும் வாய்ப் பையும் உண்டு பண்ணித் தந்தான். ஹஜ்ஜில் கண்டதையும், கேட்டதையும் மக்கா, மதீனா, மினா, அரபா, முஸ்தலி, ஜபலே நூர், கிப்லதைனி பள்ளி, மஸ்ஜீதே குபா, பதுர்உஹத் அகழிபகுதி போன்ற மஸ்ஜிதுகளில் கண்ட கேட்ட நிகழ்வு களை இக்கட்டுரை வாயிலாக தெரிவிக்கின்றேன்.

"ஹஜ்" என்றால் நாடுதல் இறைவனது கிருபையால் இறை நாட்டப்படி ஊரிலிருந்து புறப்பட்டு சென்னை வந்து புதுப்பேட்டையில் தங்கி ஜூம்ஆ நாளில் புதுப்பேட்டை ஜூம்ஆவில் அப்பள்ளி இமாமும் ஹஜ் செல்வதால், நானும் அவரும் ஜூம்ஆவில் கலந்த மக்களால். முஸாஹபாவும் ஸலாமும் செய்யப்பட்டோம். நம்வூர் ஜூம்ஆவிலும் நான் சிறிய உரை நிகழ்த்தி ஸலாமும், முஸாபஹாவும் செய்யப்பட்டோம் ஊர் மக்களால். 25-11-08 தேதி அஸருக்குப்பின் புதுப்பேட்டையில் நாங்கள் தங்கும் இடத்தி லிருந்து புறப்பட்டு, ஹஜ் கமிட்டி ஆபீசிலிருந்து (சென்னை) இஃராம் துணி அணிந்து முறையான அரசு சோதனைக்குப் பின் ஆகாய விமானத்தில் இரவு சுமார் 9 மணிக்கு பிரயாணித்தோம். விமானம் புறப்பட்டதும் "தல்பியா" ஹாஜிகள் அனைவர்களும் மெய் மறந்து மொழிந்தவர்களாக இறைவனிடம் "துஆ" செய்தவர்களாக இருந்தார்கள்.

ஆகாய விமானம் பறக்கும் பொழுது கடல் பகுதியைப் பார்க்கும் பொழுது கடல் பகுதிகளில் கப்பல்கள், சிறு தீவுகளைப் பார்க்க முடிந்தது. குறிப்பாக துபாய், பஃரைன் நாடுகளை பொழுது விமானத்திலிருந்து பார்க்கும் கடல் என்னும் கன்னிகையின் உடலில் கிடக்கும் அழகிய மாலையாக பளிச்சிட்ட காட்சிகள் மெய் மறக்கச் செய்தது

ஜித்தா பிரயாணத்தில் மேலே இருந்து பார்க்க, பார்க்க பரவசமாக இருந்தது. "ஜித்தா" விமான தளத்தில் வருவதும் போவதுமான விமான காட்சிகள் கண்கொள்ளாக் காட்சியாகும். ஜித்தா விமான தளத்திற்கு காலை சுமார் 3 மணி அளவில் சேர்ந்தோம் அரசு உட்பட்ட விசா சோதனைகளுக்குப் பின் விமான தளத்தில் ஒரு பகுதியில் சுபுகு தொழுகையை ஜமாஅத்தாக தொழுதோம். தொழுகைக்குப்பின் லக்கேஜ் எடை பார்த்து தயார் நிலையிலிருந்த பேருந்தில் மக்கா பயணம் செய்தோம். காலை 10 மணி அளவில் புனித மக்கா நகர் வந்தடைந்தோம்.

மக்கா வர ஜித்தாவிலிருந்து இரவும் பகலும், விமான பயணமுமாக உடலுக்கு அசதியாக இருந்தது. ஹரமில் பகத்வாசல் 79-ம் நம்பருக்கு நேராக உள்ள இப்ராஹீம் கலீல் ரோட்டில் நேர்பாதையாகவுள்ள நகாஸா பகுதியில் பங்கிறா அலாஹாலி வங்கி இயங்கும் 7-வது மாடியில் No-717-ல் ரூமில் தங்க வைக்கப்பட்டோம். எங்கள் மூன்று பேருக்கு ஒரு ரூம் (நான், மனைவி, மாமி) நகாஸா சுமார் ஹரமிலிருந்து 2½ to 3 மைல் வரும். எந்நேரமும் ஹரமிற்கு வந்துபோக மோட்டார், டெம்போ வசதி ஹஜ்ஜு காலங்களில் ஹரம்போக, வர ஐந்து ரியாள் ஹஜ்ஜு முடிந்தபின் ஹரம் வந்துபோக நபருக்கு மூன்று இரண்டு ரியாள் ஆகும்.

நகாஸா தங்கு விடுதியில் இருந்தவர்கள் பெரும்பாலும் உருது, தமிழ், மலையாள, கருநாடக முஸ்லிம்கள் பெருமளவு ஈரோடு, கோயம்புத்தூர் சிறிதளவு குமரி மாவட்ட முஸ்லிம்களும் தங்கியிருந்தனர். தங்கும் விடுதியில் நாங்கள் கொண்டு சென்ற பொருட்களை எங்களுக்கு ஒதுக்கப்பட்ட அறைகளில் போட்டு விட்டு நேராக ஹரம் சென்று இரண்டு ரக்அத்துகள் தொழுது கஃபாவை ஏழு தடவை "தவாப்" செய்து ஸபா-மர்வாகிற்கிடையே ஸயீ செய்து (தொங்கோட்டம் ஓடி) முடி இறக்கி, பெண்கள் சிறிது முடிவெட்டி ஹஜ்ஜின் முதல் உம்ராவை நிறைவேற்றினோம். இஷாத் தொழுகையை ஹரமில் தொழுது நகாஸா தங்குவிடுதிக்கு வந்தோம். முதலில் கஃபாவை பார்த்தபோது ஏற்பட்ட உணர்ச்சிப்பூர்வ, உவகை சொல்ல முடியாதது.

நகாஸா தங்கு விடுதியில் சுமார் இருபது பேருக்கு விசாலமான சமயலறையும் குளிர் சாதனப் பெட்டி, துணி துவைக்கும் வெளுப்பான், எந்நேரமும் குளிர் நீர், வெந்நீர் போன்ற வசதிகள் ஓர் தாய் பெற்ற பிள்ளைகளே ஒற்றுமையின்



vaigarai velicham official

மையமாக இருக்கும் இக்காலத்தில் பலதரப் பட்ட பகுதி முஸ்லிம்களானாலும் சகோதரப் பாசத்தோடு பழகும் பாங்கு மெச்ச வேண்டியதே, அடுக்களை மற்று பொருட்களையும் உபயோகிக்கும்போது விட்டு கொடுத்து மக்கள் நடந்த மனிதநேய செயல்பாடு பாராட்ட வேண்டியதே.

**நகாஸா :** இப்பகுதி மலைப்பாங்கானது. வீதியான அழகிய ரோடுகள் ரோட்டோரங்களில் - பூஞ்செடிகள் குற்றிச் செடிகள் பேரீத்த மர கன்றுகள், நிழல் தரும் மரங்கள் நட்டு நீர் ஊற்று போன்றவை வைத்து அழகுபடுத்தியுள்ளனர். மலையைச் சுற்றி வீடுகள் ஐவேளை தொழுகைக்கான ஜூம்ஆவுக்கான பள்ளிவாசல் அழகிய முறையில் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொழுகையின்போதும் ஒலிக்கும் பாங்கொலி இறை நினைப்பை ஊட்டுகிறது. இரவு நேரங்களில் மலைப்பகுதிகளில் வீடுகள் இருப்பதால் மின் விளக்குகள் கண்ணை கவரும்படி உள்ளது.

நகாஸா பகுதி ஒரு காலத்தில் பங்களாதேஸ் முஸ்லிம்கள் சவூதி அரசு ஏற்பாட்டில் கொண்டு வந்து குடியமர்த்தி நாட்டின் பிரஜைகளாக்கி யுள்ளனர் என அங்கு ஒருவர் சொன்னார். இங்கே இந்தியா, பாகிஸ்தான், சீனா, நேபாளம், ஆப்பிரிக்கா போன்ற பல்வேறுபட்ட ஹாஜிகள் தங்கு விடுதிகளில் தங்கியுள்ளனர். இந்நாட்டி னருக்கான மருத்துவமனைகளும் ஒவ்வொரு நாட்டின் பெயர் தேசியக் கொடியோடு காட்சியளிக்கிறது. தத்தம் நாட்டினவரின் மருத்துவமனைகளில் அந்நாட்டவர் உடல் நோய்க்கு மருத்துவம் பார்க்கலாம்.

நகாஸாவைச் சுற்றி மீன் மார்க்கெட்டு இறைச்சிக்கடை காணப்படுகிறது. மார்க்கெட் டில் நம் நாட்டில் காணப்படும் நெய் மீன், சூரை, சாளை, கணவாய், இறால், கல்றால் போன்ற மீன் வகைகளும், நெத்தலி கருவாடு, இறால் கருவாடு, கணவாய் கருவாடு போன்றவைகளும், ஆடுமாடு, கோழி போன்ற இறச்சி வகைகளும் காணப்படு கிறது. விதவிதமான கீரைவகைகள் கத்தரி, வெண்டை, பீன்ஸ், மிளகு வகைகள் மாங்காய், கேரட்டு, உருளைக்கிழங்கு நம்பகுதியில் காணப்படாத காய்கறிகள், கீரைவகைகள் அங்கு காணப்படுகிறது. ஆப்பிள், ஆரஞ்சு, பேரிக்காய், முந்திரி போன்ற பழ வகைகளும் வாழைப்பழம் போன்றவையும் அங்கு காணப்படுகிறது. நம் நாட்டில் காண முடியாத சில பழவகைகளும்



அங்கே காண முடிகிறது. நம் நாட்டு வெற்றிலை பாக்கு சந்தையில் வழமையாக காணலாம்.

நகாஸா பகுதியில் நாங்கள் தங்கியிருந்த விடுதிக்கு பின் பகுதியில் பெரிய வீதியாபாதை கொஞ்ச நடந்தால் அப்பகுதியில் நம் ஊரில் சில பகுதிகளில் வீட்டு வேலை, தோப்புகிளையல் என வேலையாட்களை அழைக்க ஆட்கள் நிற்பதைப் போல மோட்டார்காரில் அரபிகள் பெருமளவு குவிந்து நின்று அழைத்து செல்கிறார்கள். கடைவீதிகளில் சுலைமானியும், சிகரெட், கொக்கோ கோலாவுமாக அரேபியர் நாற்காலியில் சுற்றி இருந்து பேசிக் கொண்டு இருப்பதைப்பார்க்கலாம். நகாஸா மீன் மார்க் கெட்டை ஒட்டி அரேபியர் பல சரக்கு கடைகள் (மளிகைக் கடைகள்) காணப்படுகிறது. மளிகைக் கடைகளில் பல நாட்டு அரிசி கோதுமை மாவு, சீனி, எண்ணெய் வகை முட்டை என எல்லா வித பொருட்களும் உண்டு. அப்துல்கரீம் என்ற அரபி ஒருவர் கடையில் தான் நான் மளிகை சாமான்கள் வாங்குவேன். அவர் என்னிடம் பிரியமாக இருப்பார். அவசியமான மீன் வகை இரால், கோழி இறச்சியும் அவசியத்திற்கு வாங்கி னோம். ஒவ்வொரு அரபியும் காலை சுபுகு தொழுத உடனேயே கோகோகோலாவும், சிகரெட்டுடன் காட்சியளிக்கிறார்கள்.

ஹரமிலிருந்து தங்கு விடுதிகளுக்கு ஹாஜிகள் போகும்போது இளம் அரபி இளைஞர்கள் மோட்டார் சைக்கிளை மிகவும் வேகமாக ஓட்டி வந்து ரோட்டு ஓரங்களில் அங்குமிங்கும் ஓட வைப்பது அன்றாட நிகழ்வு. அரசுக்கு இது தெரியாமல் நடக்கும் செயல். பெரியோரை மதியாதவரும், இளைஞர்கள் மீது அன்பு பாராட்டுவோரும் என்னைச் சார்ந்தவரல்ல என்ற பெருமானார் (ஸல்) அவர்களின் போதனையை அரபு இளைஞர்களுக்கு போதிக்காமையே இச்செயல் பாடுகளுக்கு காரணமாக இருக்குமோ என்னவோ தெரிய வில்லை. அரபு வயோதிகர்கள் இளைஞர்கள் பெண்கள், சிறுமியர் நம் குளச்சல், தேங்காய் பட்டிணம், இனயம் எவ்வாறு கேரள முஸ்லிம் களை ஒத்த சாயலை பார்க்க முடிந்தது. நாங்கள் இருந்த பகுதி அரேபியர் குடியிருப்பை - நோட்டமிட்டதில் கண்ட காட்சி இது.

**ஹஜ்ஜில் நடந்த நிகழ்வுகள்**

ஹஜ்ஜுக்கு ஹஜ் கமிட்டி மூலம் ஹஜ்ஜுக்குச் செல்பவர்களுக்கும் உணவு சமைப்பது கடினம், சிரமம் என்றெல்லா ஊரில் மக்கள் பேசிக் கொள்வார்கள். ஒவ்வொரு நாளும் நாம் என்ன ஆகாரம் உண்டு பண்ண வேண்டுமென திட்டமிட்டு சமைப்பது, இரவு நேரங்களுக்கு ரொட்டி போன்ற உணவு வகைகளை உண்பது சூழ்நிலைக்கு ஏற்ப உணவு வகைகளை உண்ண நம்மை தயார் செய்தால், உணவு ஹஜ்ஜில் நமக்கு ஓர் பிரச்சினையே இல்லை. இது நாங்கள் அனுபவத்தில் கண்ட உண்மையாகும். லுஹருக்கு முன் ஒவ்வொரு நாளும் நாம் உண்ணும் உணவு வேலை முடித்து விடலாம். லுஹர், அஸர், மஃரிபு, இஷா என ஹரமிலே இமாம் ஜமா அத்தாக தொழலாம். காலைத் தொழுகைக்கு தஹஜ்ஜத் நேரமே மோட்டார்காரில் ஹஜ்மிற்கு நாங்கள் தங்கியிருந்த பகுதியிலிருந்து மக்கள் போன வண்ணம் இருப்பார்கள். காலை தஹஜ்ஜத், சுபுஹ் தொழுகைகளை முடித்து தங்குமிடங் களுக்கு புறப்படுவார்கள். நம் வயிற்றுக்கு வேண்டி உணவு சமைப்பதும் “இபாதத்” என்பதை அறியாதார் நாடோறு உணவு சமைப்பதை கடுமையான வேலையாக கருதுவார்கள் என்பதே உண்மை. ஹஜ்ஜில் உணவு ஓர் பிரச்சினையே இல்லை என்பது அங்கு நாம் கண்ட பேருண்மையாகும்.

ஒவ்வொரு தொழுகைக்கு முன்பு நேரமே சென்றாலே ஹஜ்ஜு காலங்களில் ஹரமில் உள்ளே இடம் கிடைக்கும். இல்லாவிடில் ஹரமை சுற்றிய பகுதிகளில்தான் இடம் கிடைக்கும். ஒவ்வொரு தொழுகையின்போது ஹரமில் மேல்தளம், அதையடுத்த தளம் கஃபாவை சுற்றிய பகுதி, கீழ்ப்பகுதியென ஹரம் விசாலமான இட அமைப்பை உடையது. எந்நேரமும் தவாப், ஸபா- மர்வாஸயீ செய்தால் நடைபெற்றுக் கொண்டேயிருக்கும் அதே போன்று ஜமாஅத் தொழுகையல்லாத சுன்னத் தொழுகை ஏனைய சுன்னத்தான தொழுகைகள் நடந்த வண்ணமேயிருக்கும். ஜமாஅத்தொழுகை பாங்கு இனிமையாக இருக்கிறது.

இமாம் பாதுகாப்போடு வருகிறார். தொழுகை முடிந்ததும் பாதுகாப்போடு போகிறார். தொழுகையின் போது இப்பொழுது காணப்படும் இம்முறை பெருமானார் (ஸல்), கலீபாக்கள் கடை பிடித்த முறையாக இல்லாமல் உள்ளது. தொழுகையில் “ஸலாம்“ சொல்வதோடு முடிந்து விடும். துஆ இல்லை. மக்காமஸ்ஜிதை சுற்றி எங்கும் ஸம்ஸம் நீர் வைக்கப்பட்டிருக்கும். ஸம்ஸம் நீர் பசியையும், தாகத்தையும் போக்கும் வல்லமை உடைய தென்பது (பானம் என்பது) நம்மால் உணர முடிகிறது.

ஹரமை சுற்றியுள்ள கழிவறைகள் உலூச் செய்யும் இடங்கள் மேல் தளம், கீழ் தளம் என அமைக்கப்பட்டுள்ள பாங்கும் பல லட்சம் மக்கள் பெருமாற வசதி வாய்ப்புகள் செய்யப்பட்டுள்ளது. தற்போதைய சவூதி அரசை நாம் பாராட்டக் கடமைபட்டுள்ளோம். நம் இடங்களில் சிறு திருவிழா என்றால் சுத்தம் படும் பாடு பரிதாப கரமானது. அங்குள்ள கழிவறைகளில் காணப் படும் அசுத்தவாடைகளற்ற நிலை எங்கும் காண முடியாதது. ஹரமில் இருக்கும் பொழுது என்னைப் போன்ற சர்க்கரை நோயாளிகள் அடிக்கடி சிறு நீர்கழிக்க வேண்டுமே என எண்ணிய எண்ணம் பொய்யானது. ஒருநாள் நாங்கள் சிறுநீர் கழித்துக் கொண்டிருக்கும் பொழுது ஒருவர் சொன்னார் இவ்இடம் அபீப்லஹு வீடு இருந்த இடமென்றார். பெருமானார் (ஸல்) அவர்களை தாங்க முடியாத தொல்லைகளை தந்த அபீலஹப் இருப்பிடம் இவ்உலகிலும் அசிங்கமானது மறுமையிலும் துன்பகரமானது.

இந்தியா, பாகிஸ்தான், பங்காளதேஷ், சிலோன், மாலி, ஆப்கானிஸ்தான், பர்மா, இந்தோனேஷியா, மலேசியா, சிங்கப்பூர், துருக்கி, பிரான்ஸ், இங்கிலாந், அமெரிக்கா,


vaigarai velicham official

ஆஸ்திரேலியா, கனடா, சீனா, ஆப்ரிக்க நாடுகள், அரபுநாடுகள் என உலகெல்லாம் முஸ்லிம்கள் வாழ்கிறார்களோ அங்கிருந்தெல்லாம் “ஹஜ்” கடமையை நிறைவேற்ற முஸ்லிம்கள் வந்துள்ளனர்.

மக்காவில் மினாவில் அரபாவில் முஸ்தலி பாவில் இஃறாம் உடை அணிந்த மக்களை காணும் காட்சி உலகில் எங்கும் காண முடியாதது. மேலும் நாம் கூடுமிடங்களில் ஒருவர் இந்தியர், ஒருவர் பாகிஸ்தானி ஒருவர் சைனாக்காரர் என்றிராமல் இஸ்லாத்தால் பின்னி பிணைக்கப் பட்ட பாங்குமெச்சத்தக்கதாகும். தொழும் இடங்களில் நெருங்கி பழகுவதும், தொழும் இடங்களில் தொழ வசதி செய்து கொடுப்பதும் குறிப்பாக எந்நாட்டவரானாலும் தொழும் இடங்களில் முசல்லாவில் தொழ அன்போடு அரவணைத்து நிற்கும் பாங்கு மெச்சத்தக்கது. கரு நிறத்து ஹப்சியரை காதல் மிகு பார்சியரை பெருஞ் செருக்கின் அரபியரை பிணைத்தெடுத்த நாயகமே! என இறையருட் கவிமணி குறிப்பிடும் கவிதை வரிகள் உயிரோட்டமுடையது என்பது நேரில் பார்க்க முடிந்தது.

மக்காவில் பல்வேறு நாட்டினர் மதுஹபை பின்பற்றுவோர் இப்னுதைமிய்யா வழிமுறை யினர் என பல்வேறு முறையை பின்பற்றுவோரை அங்கே காண முடியும். கையை கட்டுவோர் பலவகையினர் கை கட்டாதவர் கை கட்டி ருகூவுக்குப் பின் கை கட்டி சுஜூது செய்வோர், அத்தஹிய்யாத்தில் சுண்டு விரலை அசைப்போர் அசைக்காதவர் என பல்வேறு வழி முறைகளையை பின் பற்றும் தொழும் முறை காண முடிகிறது.

தொழுகைக்குப் பின் “துஆ” இல்லை. இமாம்களின் கிராஅத்கேட்போரை கவரும்படி உள்ளது. ஹரமில் ஹாஜிகள், வரும் மக்கள் தொழுகையில் ஈடுபட்டும் குர்ஆன் ஒதியும், திக்ர் செய்தும் இருக்கின்றனர். மேல் தளத்திலிருந்து தரிவாப் செய்யும் பொழுது கஃபாவை பார்த்தால் மனித உருவம் வட்டவடிவமாக சுற்றுவது பார்க்க பரவசம் ஏற்படும். சுபுகு தொழுகையில் குனூத் இல்லை. நாங்கள் ஹஜ் செய்ய சென்றபோது பலஸ்தீனில் காசாப் பகுதியில் ஏற்பட்ட மோதல் நேரத்தில் இரண்டொரு நாள் காலைத் தொழுகையில் குனூத்தில் பலஸ்தீனி களுக்காக இமாம் துஆச் செய்தார். ஒவ்வொரு ஜமாஅத் தொழுகையிலும் மய்யித் தொழுகை நடைபெறுகிறது. அனேகமாக எல்லா மக்களும் கலந்துகொள்கின்றனர்.

ஹஜ் காலங்களில் ஒவ்வொரு பர்லான தொழுகையை முடித்து வசிக்குமிடங்கள் போக ஹரமிலிருந்து சிறிது தூரம் நடந்து சென்று தான் வாகனங்களில் வசிக்குமிடம் வந்துசேர முடியும்.

ஒரு நாள் ஹரமில் மஃரிபுக்கும் இஷாவுக்கும் இடைபட்ட நேரத்தில் நான் குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தேன். என் மாமியும், என் மனைவியும் என் அருகே இருந்து குர்ஆன் ஓதியபடி இருந்தனர். நியாயமான உயரமும், சிவந்தமேனியும், தலையில் தொப்பியுடன் வயோதிக பெரியாரும் அவருடன் நடுத்தர வயதுடைய ஒருவரும் என் எதிரே அமர்ந்தனர். நான் சூரா “தாஹா” ஓதிக் கொண்டிருந்தேன். என் எதிரே வீற்றிருந்த அரபிரயான பெரியவர் நான் ஓதும் முறையை உன்னிப்போடு கவனித்து சிறிது சப்தமாக ஓத எனக்கு ஆணையிட்டு என்னோடு மெதுவாக ஓதினார். இது ஹரமில் இறை ஏற்பாட்டால் எனக்கு உஸ்தாது அனுப்பபட்டு என் ஓதும் முறையை பரிசோதிப்பதைப் போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. சூரா தாஹாவின் மொழி பெயர்ப்பை தன் அருகே இருந்த நடுத்தர வயது உடையவரிடம் சொன்னார். மஃரிபுக்கு முன் நான் குர்ஆன் ஓதுவதை நிறுத்தினேன்.

என் அருகேயிருந்த பெரியவர், அரபியில் உங்கள் நாடு எது? நான் “ஹிந்” என்று பதில் சொன்னேன் ஹிந்தில் எந்த மாநிலம் என வினா எழுப்பினார் நான் சென்னை என்றேன்.

மஃரிபு நேரம் ஹரமில் அலை மோதும் மக்கள் கூட்டம் என்னிடம் அவர் புன் முறுவலோடு சொன்னார் என்னோடு இருக்கும் இந்நபர் ஈரானிசியா பிரிவாக இருந்தார். நான் இவரை சுன்னி பிரிவுக்கு மாற்றினேன். அவருக்கு நான் நம் கொள்கையை போதிக்கும் வகை நீங்கள் ஓதிய குர்ஆனுக்குரிய விளக்கத்தை சொன்னேன் என சொன்னார். மஃரிபு தொழுகை நேரம் நெருங்க முஸா, பகா செய்தவராக “குல்லுமுஸ்லிமுன் இக்வதும்“ நாம் உலகில் எங்கு வாழ்ந்தாலும் முஸ்லிம்கள் சகோதரர்கள் என அரபியில் என்னிடம் சொல்லி ஆலிம் கனம் செய்து ஸலாமும் சொன்னார். நான் என்ஹக்கில் துஆச் செய்யுங்களென்றேன். இருவரும் ஆலிங்கினம் செய்து பிரியும் நிகழ்வு என் மனதை நெகிழ வைத்தது அல்ஹம்துலில்லாஹ்.

இது என் வாழ்வில் ஏற்பட்ட மறக்க முடியாத இறை ஏற்பாடாகும்.

ஹரமில் ஐந்து ஜூம்ஆ நிகழ்வுகள் முதலாவது வெள்ளிக்கிழமை ஜூம்ஆத் தொழுகையில்

பங்கு பெற சுமார் காலை 9.50 to 10 மணிக்குள்ளாக ஹரமிற்குச் சென்றோம். சுன்னத்தொழுகை, குர்ஆன் ஓதுதல், திகிர், பிகிர் என எல்லோரும் இறை நினைப்பில் இருப்பது அங்கு காணும் காட்சி முதல் பாங்கு கேட்ட பின் சுன்னத் தொழுத உடன் இமாம் வடியுடன் மிம்பரில் ஏறி அரபியில் குதுபா பேருரைக்காக அமருகிறார். முஅத்தீன் இரண்டாவது பாங்கு சொல்கிறார். அதன்பிறகு இமாம்குதுபா அரபியில் நம் நாட்டு உலமாக்கள் அரபியில் ஓதும் பர்ளான அரபி வார்த்தைகளை குறிப்பிடுகிறார்.

முதல் குதுபாவில் ஹஜ்ஜில் சிறப்பு பெருமானார் (ஸல்) அரபாத் பேருரையில் குறிப்பிட்ட இஸ்லாத்தில் அரபிக்கும் அஜமிக்கும் வேறுபாடில்லை தக்வாவை கொண்டு தான் மனிதனில் உயர்வு தாழ்வு போன்ற கருத்துக்களை மேற்கோள் காண்பித்து பேசினார். ஹாஜிகளுக்காகவும் உலக முஸ்லிம்களுக்காகவும் இமாம் உருக்கமாக துஆச் செய்தார்.

**இரண்டாவது ஜும்ஆ :** தொழுகை வழமை போல பாங்குகள் ஆரம்பம் சிறிது தொலைவிலிருந்ததால் இமாமின் குது உரையைக் கேட்ட போது வயதுமிகுந்த இமாமின் ஓதல் என்பதை புரிந்து கொண்டேன். நாட்டு நடப்புகள் பற்றி அரபியில் உரையாற்றி இரண்டாவது குதுபாவில் நபித்தோழர்களான ஆபூபக்ர் உமர், உதுமான் அலியிப்னு அபீதாலிப் (ரழி) போன்றோர் பெயரைக் குறிப்பிடுகிறார் ஹாஜிகளுக்காவும் உலக முஸ்லிம்களுக்காகவும் உருக்கமாக துஆச் செய்தார்.

**மூன்றாவது குதுபா பேருரை :** மினா, அரபாமுஸ்தலிபா போன்றவற்றில் நிறைவேற்றிய ஹஜ் கடமைக்குப்பின் மக்காவில் ஹரமில் மூன்றாவது குதுபா கேட்டும் பாக்கியம் கிடைத்தது. பள்ளித் தோழர்ஹாஜி வி. முகம்மது இஸ்மாயீல் மூலம் மோட்டார் கார் ஏற்பாடு செய்து மினா அரபா, முஸ்தலிபா, ஹிராகுகை தவ்ர்குகை போன்ற முக்கிய இடங்களை ஓர் மோட்டார்காரில் சுற்றிப் பார்த்தோம்.

மோட்டார் கார் ஓட்டும் அரபி சொல்கிறார் பெருமானரும் தோழர்களும் எத்தகைய வறுமை நிலையில் வாழ்ந்தார்களென்றால் ஒரு பொழுது வயிற்றுப் பசியை தாங்க வயிற்றில் கல் வைத்து கட்டி பசிக்கு நிவாரணம் கண்டனர். ஆனால் இன்றோ எங்கள் நாட்டினர் சுபுகுகூட பெரும்பான்மையோர் தொழாமல் விடிய விடிய TV பார்க்கும் அவல நிலை எங்கள் பகுதியில் ஏற்பட்டுள்ளதென வேதனைப்பட்டார்.



**மூன்றாவது ஜும்ஆ :** நாங்கள் பல்வேறு இடங்களுக்குச் சென்று வந்ததால் ஹரமிற்கு வெளியே தொழ வேண்டியது ஏற்பட்டது. இமாம் குதுபாபேருரையில் இறைவி சுவாசம் பற்றியும் முஆதிப்லு ஜபலுக்கு பெருமானார் (ஸல்) லாஇலாஹா இல்லல்லாஹ் என இதய பூர்வமாக யார் மொழிந்தார்களோ அவர்கள் ஈடேற்றம் பட்டார்கள் என உபதேசித்த உபதேசம் பற்றியும், இது சம்மந்தமாக உமர் (ரழி)யும் பெருமானாரும் கருத்து பரிமாறிய சம்பவங்களை உருக்கமாக குறிப்பிட்டார். இரண்டாவது குதுபாவில் ஹாஜிகளுக்காக உலக முஸ்லிம்களுக்காக ஹரமைனி, ஷரீபைனிக்கும் துஆச் செய்தார்.

**நான்காவது ஜும்ஆ :** கஃபாவிற்கு மிகவும் அருகே கஃபரவை பார்த்த வண்ணம் இருக்க இடம் கிடைத்தது. இமாம் குதுபாவில் ஹிஜ்ரத் நிகழ்வு பற்றியும் பெருமானார் அபூபக்கர் சித்தீக் (ரலி)யும் "தௌர்" குகையில் இருக்கும் பொழுது எதிரிகளின் அச்சம் பற்றி பெருமானாரிடம் பதட்டதோடு வினா எழுப்பியபோது அபூபக்ர் "லாதஹ்ஸன்" "இன்னல்லாஹமஅனா" நாம் இருவரல்ல நம்மோடு இறைவன் இருக்கிறாரென பெருமானார் இறையச்ச உணர்வோடு சொன்னபதிலை மய்யமாக வைத்து இமாம் கருத்துரை அரபியில் ஆற்றி, இரண்டாவது குதுபாவில் நாற்பெரும் கலீபாக்களான ஆபூபக்ர் சித்தீக், உமர், உதுமான், அலி (ரழி) போன்றோர் பெயர் குறிப்பிட்டு ஹாஜிகளுக்



vaigarai velicham official

காக உலக முஸ்லிம்களுக்காக, பாலஸ்தீன் முஸ்லிம்களுக்காகவும் உருக்கமாக துஆச் செய்தார்.

**ஐந்தாவது ஜும்ஆபேருரை :**

இஸ்லாமியர் நிலை பற்றியும், இரண்டாவது குதுபாவில் நாற்பெரும் கலீபாக்கள் பெயர் குறிப்பிட்டு இன்றைய சவூதி ஆட்சி செய்யும் ஆட்சியாளர்களுக்காகவும் துஆச் செய்தார். பல லட்சம், பல நாட்டு இஸ்லாமியர் கூடும் ஜும்ஆவில் பிற தொழுகையிலும் கலந்து கொள்வது வாழ்வில் கிடைத்தற்கரிய பேறாகும்.

மக்காவில் மேல் தளத்தில் ஹிப்ளுமத்ரஸா ஹஜ்ஜு முடிந்த பின் நடக்கிறது. ஆலிம்களில் அரபியர் கறுப்பு இன ஆலிம்களென உள்ளனர். மாணவர்களும் அவ்வாறே ஆலிம்கள் தலையில் தொப்பி போட்ட படியும் சிலபேர் தொப்பியுடன் தலைப்பாகையோடும் காணப்படுகின்றனர். வெறும் தலையான ஆலிமையும், மாணவனையும் காண முடியாது. கண்ணற்ற ஓர் முதிய ஆலிமை சுற்றி மாணவர்கள் சுற்றி ஓதுவது பார்வையில் பட்டது. நபித்தோழர் இப்னு உம்மிடக்தூம் வரலாற்று நிகழ்வு எனக்கு அந்நேரம் உண்டானது உலமாக்கள் குதுபா பேருரை அரசு ஒப்புதல் பெற்ற பிறகே அனுமதிக்கப்படுகிறது. இது இஸ்லாம் போதிக்கு நெறி முறையல்ல.

**மஸ்ஜிதே ஆயிஷா :** "தன்ஈம்" என்ற பெயருள்ள இடம் இப்பொழுது ஆயிஷாப்பள்ளி இருக்கும் இடமாகும். இங்கிருந்து ஆயிஷாநாயகியை உம்ரா உடை அணிந்து நிய்யத்து செய்ய பெருமானார் ஆணையிட்டார்கள். குறிப்பிட்ட ஏரியாவிலிருந்து வரும் ஹாஜிகள் இங்கிருந்து தான் உம்ரா செய்ய உம்ரா ஆடை அணிந்து செல்கிறார்கள். ஆயிஷாப் பள்ளி அழகிய முறையில் கட்டப்பட்டுள்ளது. பள்ளியை சுற்றி அகன்றபாதையும் பூஞ்செடிகள், ஈத்தமர செடிகள், நிழல் தரும் மரங்கள் வைக்கப்பட்டு காண்போரை கவரும் வண்ணமுள்ளது.

ஹாஜிகள் குளிக்க உலூச் செய்ய காலைக் கடன்களை நிறைவேற்றும்படியான வசதிகள் அழகிய முறையில் செய்யப்பட்டுள்ளது. நான் இரு உம்ரா இங்கிருந்து அதற்குரிய ஆடை அணிந்து ஹரமிற்குச் சென்றேன். ஹரமிலிருந்து இங்கே வர-போக எந்நேரமும் மோட்டார் வசதி உள்ளது. பெருமானார் (ஸல்) காலத்தில் ஆயிஷா நாயகிக்கு ஹஜ்ஜில் மாதாந்தருஜூ ஏற்பட சுத்தமான பின் பெருமானார் (ஸல்) ஆயிஷா 'நாயகி சகோதரர் அப்துல் ரகுமானை அழைத்து நீர் உமது சகோதரியை தன்ஈம் என்னும் இடத்தில் அழைத்து சென்று இஃறாம் உடை அணிந்து வர ஏற்பாடு செய்யும் என்றார்கள். இங்கு எந்நேரமும் பல நாட்டு ஹாஜிகள் வந்தும் போவதுமாக உள்ளனர். இப்பள்ளிக்கு ஹாஜிகள் வந்து இஃறாம் ஆடை அணிந்து நிய்யதுடன் இரு ரக்அத் தொழுது உம்ரா செய்ய ஹரமிற்கு செல்கின்றனர்.

**மத்ரஸயேஸௌலதிய்யா :** கி.பி.1857-ஆம் ஆண்டு இந்திய சுதந்திரப் போராட்டத்தில் உலமாக்கள் பங்கு சரித்திரத்தில் முத்திரைப் பதித்துள்ள நிகழ்வாகும். மௌலவி ரஹ்மத் துல்லாஹ் சாகிபை கைது செய்து தண்டிக்க ஆங்கில அரசு முயற்சித்த போது நாடு கடந்து மக்காவந்து ஹிஜ்ரி 1285-ல் மக்காவில் ஒரு சன்மார்க்க சாலையை நிறுவி இந்திய சுதந்திர போராட்ட காலத்தில் ஹிஜ்ரத் செய்து வந்தவர்களுக்கும், இளம் வயதுடையவர் கட்டும் மார்க்கபோதனை செய்து வந்தனர். இதற்கு இடம் தேவைப்பட்டு பிரச்சினை எழுந்தபோது மௌலவி சாகிப் முயற்சித்து ஹிஜ்ரி 1289-ல் இந்தியாவில் கல்கத்தாவைச் சார்ந்த பணம் படைத்த ஸௌலத்துன்னிஸாபேகம் இவர்களிடம் இது பற்றி சொல்லி அவர் கொடுத்த நிதி மூலம் இடமும், கட்டிடமும் எழுப்பப்பட்டு மத்றஸா ஆரம்பமானது. அதுதான் இன்றும் மத்றஸயே ஸௌலதிய்யா என்ற பெயரில் கல்விப்பணி ஆற்றுகிற இவ் இடம் ஹஹம்ஷரீபுக்கு பக்கத்தி லுள்ளது.

இம்மத்றஸாவில் நம் நாட்டவர் சென்று சட்ட ஞானங்களை அறிகின்றனர். பொருட்களை வைத்து திருப்பி எடுக்க நம் நாட்டவருக்கு ஓர் ஏற்பாடுள்ளது. சில நம் நாட்டவர் இங்கு உள்ஹிய்யா வகை ஏற்பாட்டை செய்கின்றனர். எங்களோடு உள்ள சில ஹாஜிகள் இங்கு சென்றதாக சொன்னார்கள். நான் போக முடியவில்லை. இது ஹரமிற்கு அருகே இருப்பது பிறகு தான் எனக்கு தெரிய வந்தது.

**ஹஜ்ருல் அஸ்வத் :** இது சுவர்க்கத்து கல் - கஃபா வாசல் அருகே உள்ளது. அக்லுல் அஸ்வது இருக்கும் பகுதி இந்திய நாடு இருக்கும் பகுதி என சொல்லப்படுகிறது. ஒரு பொழுது இப்பகுதியை பார்த்து புன் முறுவல் பூத்த பூமான் நபி (ஸல்) அவர்களிடம் தோழர்கள் காரணம் கேட்டபோது பிற்காலத்தில் இங்கே இஸ்லாம் பலகீனமாகும் அப்பொழுது இந்து தேசத்தி லிருந்து தவ்ஹீதின் தென்றல் இங்கே வீசுமென



பதில் சொன்னார்கள். ஹஜ்ஜு காலத்தில் இக்கல்லை முத்தமிடுவது மிகவும் சிரமமானது ஹஜ்ஜின் போது மிகவும் சிரமத்தோடு இக்கல்லை முத்தமிட்டேன். அல்ஹம்துஜில்லாஹ்

**கஃபாவிற்கு நான்கு மூலைகள் உண்டு**

1. ருக்னுல்யமனி : இது கஃபாவின் தென்மேற்கு மூலையிலுள்ளது. இது எமன் தேசம் இருக்கும் பகுதி.

2. ருக்னேஈராக்கிர் : இது ஈராக் தேசம் இருக்கும் பகுதி

3. ருக்னேஷாமி : இது சிரியா தேசம் இருக்கும் பகுதி

4. ஹஜ்ருல்அஸ்வத் : இப்பகுதி இந்திய பகுதி இருக்கும் பகுதி

ஹரமிற்கு வரும் வழியில் இன்றைய சவூதி மன்னர்கள் முழு உருவ பேனர்கட்அவுட் வைக்கப்பட்டுள்ளது. மதீனா பல்கலைக்கழகம் மூலம் சீர்திருத்தம் பேச உலகெங்கும் உலமாக்களை அனுப்பும் அரசு இம்மாதிரி முழு உருவம் வரையப்பட்ட பேனர்களை முக்கிய இடங்களில் தொங்க விட்டிருப்பது கண்டிக்தகுந்த செயலாகும். மேலும் ரியாத்தில் வெளிநாட்டவரை வரவேற்கும் அரசு கட்டிடங்களில் மன்னர்கள் படங்கள் காணப்படுவதும். தவிர்க்க வேண்டியதே, சவூதிரியாளில் அரசர் படம் போடப்பட்டுள்ளதும் கலீபாக்கள் முன் மாதிரியல்ல. இதுவும் இஸ்லாமிய முன்மாதிரியல்ல சீர்திருத்தம் பேசும் சவூதி இறக்குமதியாளர் இது பற்றி மௌனியாக உள்ளனர்.

**ஜன்னதுல்லாமுஅல்லா :** இங்கே ஆறாயிரம் நபித்தோழர்கள் துயில் கொள்ளுகின்றனர். பெருமானார் சிறிய தந்தை அபூதாலிப், கதீஜா பிராட்டியார் மகன் அபுல்காசிம் மற்று இறை நேசர்கள் அடங்கியுள்ளனர். இப்பகுதி ரோட்டின் மூலம் பிரிக்கப்பட்டுள்ளது. இங்கு ஹஜ்ஜுக்கு வருவோரின் மரணிப்போரையும், சுற்றுப்புறத்தில் மரிப்போரையும் அடக்குகின்றனர். காரில் இருந்தபடி பார்த்தோம்.

**ஹிராக்குகை :** நபி பெருமான் (ஸல்) நபித்துவத்திற்கு முன் இம்மலையில் சென்று இறை தியானத்திலிருப்பது வழமை. சில நேரங்களில் இம்மலையில் தனிமை தியானத்தில் இருந்த நபி பெருமானாருக்கு கதீஜா நாயகி உணவு கொண்டு வருவது வழமை. இது கரடு முரடான கற்களடங்கிய மலைப்பகுதி ஜிப்ரயீல் மூலம் இங்கு தான் "இக்ரஹ் சூரா" இறங்கியது. இக்குகை ஹிராகுகை என்றும் ஜபலேநூர் என்றும் அழைக்கப்படுகிறது.

மக்கள் ஆர்வமிகுதியால் கரடு முரடான மலை மீறு ஏறுகின்றனர். நாங்கள் மலை அடிவாரத்தில் சென்று பார்த்தோம். ஹாஜிகள் அனேகமாக வருகின்றனர் அங்கு இங்கு யாரும் வர நபிகள் நாயகம் (ஸல்) சொல்லவில்லை என்ற வார்த்தை எழுதப்பட்டுள்ளது. இது சவூதி அரசின் அதிகாரபூர்வ அறிவிப்பு.

**பெருமானார் பிறந்த வீடு :** மக்கா பேருந்து நிலையம் அருகே உள்ளது. இது இரு மாடிகளை உடையது. இங்கு படிப்பகம் செயல்படுகிறது. இப்பகுதி பெருமானார் பிறந்த இடமாகும். நாங்கள் போனபோது வீடு பூட்டு போடப்பட்டு காம்பவுண்டும்பூட்டு போடப்பட்டுள்ளது. இங்கு தான் பெருமானார் (ஸல்) பிறந்தார்கள். இங்கு யாரையும் பெருமானார் (ஸல்) வரச் சொல்ல வில்லை என்ற வாசகம் அரபியில் சவூதி அரசு பலகையில் எழுதி வைத்துள்ளது. உலகில் பெரும் பகுதி மக்களின் வாழ்க்கை நெறியை மாற்றி அமைத்த உன்னதத்தலைவரின் பிறந்த இடம் ஆரவாரமின்றி, சாதாரணமாக காணப்படுகிறது. நம் நாட்டில் உலகிலுள்ள சாதாரண மக்கள் தலைவர் பிறந்த வாழ்ந்த வீடுகளை நம் அரசும், மக்களும் வைத்துள்ள நிலையையும் எண்ணி பார்த்தால் வேதனை ஏற்படுகிறது.

**தௌர்குகை :** இம்மலைப்பகுதி மக்காவிற்கு சுமார் 31/2 மைலில் உள்ளது. ஹிஜ்ரத் சென்ற போது எதிரிகளிடமிருந்து ஒழிந்த பகுதி இது. மூன்று நாட்கள் பெருமானார் (ஸல்)



அவர்களும் அபூபக்ர் சித்தீக் (ரழி) அவர்களும் மறைந்திருந்த பகுதி இது. கரடு முரடான கற்கள் இம்மலை மீது உள்ளது. ஹாஜிகளில் முடிந்தவர் இம்மலை மீது ஏறிபார்க்கின்றனர். தௌர் குகையில் வைத்து அபூபக்ர் சித்தீக் (ரழி) எதிராளிகள் வந்து விடுவார்களோ என பயந்த போது அபூபக்கர் "லாதஃஸஹ்" "இந்நல்லாஹ மஹனா" என சித்தீகுல் அக்பருக்கு ஆறுதல் சொன்ன இடமாகும். இவ்விடம் பார்த்தபோது பெருமானார் (ஸல்) அபூபக்ர் சித்தீக் (ரழி) இருவரின் உரையாடல் நினைவுக்கு வந்தது. இப்பகுதியை மோட்டார் கார் மூலம் பார்த்தோம். இங்கு ஏராளமான ஹாஜிகள் மலைமீது ஏறியும் மலை அடிவாரத்தில் வந்தும் பார்வையிடுகின்றனர்.

**மினா:** நகாஸாவிலிருந்து பேருந்து மூலம் இரவு 1 மணி அளவில் மினா வந்தடைந்தோம். டென்ட் வழிகாட்டல் எங்கள் அமீர் மூலம் (மௌலவி அல்தாப் ஹீஸைன்) டென்ட் நம்பர் 0-8, 14-வது கூடாரம் என்பதை அறிந்து எங்களுக் குரிய இடங்களில் யாத்திரைப் பொருட்களை வைத்து சிறுநீர் கழித்து, உலூ செய்து இரு ரக்அத்சுன்னத் தொழுகையை டென்டில் தொழுதோம். ஒவ்வொருவருக்கும் நம் உடல் அளவு மெத்தை, தலையணை பொதப்பு வைக்கப்பட்டிருக்கும். இது கப்றுடைய வாழ்வை நினைவு படுத்தும்படி உள்ளது.

சிறிது நேர ஓய்வுக்குப்பின் தஹஜ்ஜத் நேரம் வந்ததும் டென்டில் பாங்கு சொல்லப்பட்டு எல்லோரும் தஹஜ்ஜத் தொழுதோம். சுபுகு பாங்கும் இமாம் ஜமாஅத்துடன் தொழுகையும் நடைபெற்றது. எங்கள் டெண்டில் மௌலவி அல்தாப் ஹீசைன்தான் அனேகமாக இமாமத் செய்தார். டென்ட-ஐ அடுத்து குளியலறை கழிவறை உலு செய்யுமிடம் பைப் இணைப்புக் களோடு உள்ளது. இங்கு அலை மோதும் மக்கள் கூட்டம் பொறுமையும் சகிப்புத்தன்மையுடன் கடைபிடிக்க வேண்டிய முக்கிய இடமாகும். சுபுகு தொழுகைக்குப்பின் ஒவ்வொருடென்டிலும் தேயிலை பெரிய கேனில் கொண்டு வைத்துள் ளார்கள். தேவைப்படி கப்பு, பாத்திரங்களில் எடுத்து பருகலாம். டென்டில் இமாமின் மார்க்கபேருரை நடை பெற்றது.

ளுஹர் தொழுகை நமீர் பள்ளியில் ஜமாஅத் துடன் தொழுதோம். உள் பள்ளியில் இடம் போதாமையால் பள்ளியைச் சுற்றியப் பகுதியில் தொழுகை நடைபெற்றது. மக்கள் பெருமளவு கூடுவதால் வெயில் ஒரு பொருட்டாக இல்லை. நமீர்ள்ளி அருகே சைத்தானுக்கு கல் எறியும் மாடி இடம் உள்ளது. இவ்விடம் அருகே தான் நாங்கள் தங்கியிருந்த டெண்ட் இருந்தது. கல் எறிந்து வரும் பொழுது சுற்றி வர வேண்டியதிருந்தது. இரவு 2.30 மணி புறப்பட்டு பேருந்து மூலம் அறபாவந்தடைந்தோம். பேருந்தினுள் பெண் பிள்ளைகள் வயோதிகர்களை ஏற்றி பேருந்தின் மேல் தளத்தில் ஆண்கள் வயோதிகர்களையும் பிரயாணம் செய்தோம். இளம் ஹாஜிகள் முதிய ஹாஜிகளை தாங்கிபிடித்து பேருந்தில் ஏற ஒத்துழைப்பும், உதவியதும் பாராட்ட வேண்டியதே.

**அரபா :** சுபுகுக்கு முன் அரபாவந்தடைந்தோம் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட கூடாரத்தைச் சுற்றி கழிப்பிட வசதி, குளியலறை, உலூச் செய்யும் பைப் இணைப்பு ஆகியவை செய்யப்பட்டி ருந்தன. காலைக்கடமைகள் முடித்து, உலூச் செய்து தொழுகைக்கு முன் சுன்னத் தொழுகை

தொழுதோம். காலைச் சுபுகு பாங்கு போடப் பட்டது. மௌலவி அல்தாப்ஹுசைன் தாவூதி இமாமாக நிற்க தொழுகை நடைபெற்றது.

அரபாவுக்கு வரும்பொழுது பேருந்தின் மேல் தளத்தில் இருந்து வந்த ஹாஜிகளுக்கு பனிமழை பொழிந்ததை உணர முடிந்தது. அரபா கூடாரத்தைச் சுற்றி மின் விளக்குகள் அலங் கரித்தது. பெருமானார் இறுதிபேருரையாற்றிய இடத்தைச் சுற்றியும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பார்ப்பதற்கு கண் பல வேண்டும். அரபா வெளி எங்கும் வேப்ப மரம் அதைச் சுற்றி கூடாரம் கூடாரத்தில் ஓர் பெட்டியில் பிஸ்கெட்டு, கேக், பழவகைகள், தண்ணீர்பாட்டில் இலவசமாக அனைத்து ஹாஜி களுக்கும் கொடுக்கப்பட்டது. கூடாரத்தைச் சுற்றி தேயிலை கேன்களில் வைக்கப்பட்டு ஹாஜிகள் தேவைப்போல அருந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மௌலவி அல் தாப் ஹுசைன் தாவூதி தலைமையில் மார்க்கப்பேருரை நடைபெற்றது. ஹஜ்ஜின் சிறப்புகள் பற்றி தலைமை உரை அமைந்தது. மௌலவி அகமது அமாணி நபி இப்ராஹீம் (அலை) தன் புதல்வர் இஸ்மாயீலை (அலை) அறுக்க துணிந்த துணிவு பற்றியும், கத்தி அறுக்க மறுக்கவும் அல்லாஹ் சொர்கத்திலிருந்து ஓர் ஆட்டினை இறக்கி பலியிடவைத்த நிகழ்வை கேட்போர் மெய் மறந்துகண் முன்னே நடந்த நிகழ்வுபோல நினைக்கும்படியாக உரை அமைந்தது. மௌலவி இப்ராஹீம் அவர்கள் அம்மார் (நபி) சுமய்யா (ரழி) யாஸிர் (நபி) போன்றோர் இஸ்லாத்தில் இணைந்ததால் அக்குடும்பம் பட்டது துயர் பற்றி உணர்வு பூர்வமாக பேசினார். என்னை எதிர்பாராமல் மௌலவி அல்தாப் ஹுசைன் பேச அழைத்தார். நான் அஜ்ருல் அஸ்வத்கல்லை முத்தமிட்ட உமர் (ரழி) நீ ஒரு கருங்கல். உன்னை நபிகள் நாயகம் முத்தமிட்டதால் நானும் முத்தமிடுகிறேன். என ஒரு பொழுது சொன்னதை அவ்வமயம் கஃபா அருகே இருந்த அலி (ரழி) இது கேட்டு மஃலன்யா! உமர். உமரே! நிதானமாகபேசுங்கள். இதனுள் ஓர் அமானிதம் உள்ளது. அது என்ன தெரியுமா? றோஸ்மீதாக்கின் போது ஆதத்திலிருந்து உலகில் பிறக்கப் போகும் அனைத்து உயிர்களையும் இறைவன் வெளியாக்கி நான் உங்கள் இறைவன் தானா? என்னை அன்றி வேறு யாரையும் இணை வைத்து வணங்கமாட்டீர்களல்லவா? போன்ற உறுதிமொழிகளை இறைவன் கேட்க ஆதத்திலிருந்து வெளியான உயிரினங்கள் நீ தான் இறைவனென்றும் அன்றி வேறு எப்பொருளையும், இணை வைத்து வணங்க மாட்டோம் என சொன்ன உறுதிமொழி வாக்குத் தத்தம் இக்கல்லினுள் பாதுகாக்கப்படுகிறது. இக்கல்லுக்கல்ல மரியாதை இக்கல்லுனுள் இருக்கும் அமானிதத்திற்குதான் மரியாதை என விளக்கமளித்தனர்.

இதுகேட்ட உமர் (ரழி) அலி (ரழி) இல்லா விடில் உமர் தீவறான எண்ணத்திலிருந் திருப்பேன் என சொன்னார்கள். இந்நிகழ்வு இப்னுமாஜா கிதாபில் பதிவு செய்யப்பட்டுள்ளது என அவையோருக்குச் சொன்னேன்.

இஸ்லாத்தில் துறவறமும் சன்னியாசமும் உண்டா? என நபித்தோழர்கள் பெருமானாரிடம் கேட்க இஸ்லாத்திலுள்ள ஹஜ்ஜும், ஜிஹாதும் துறவரமே என்றனர். இந்தஹதீஸை மேற்கோள் காண். மேலும் அரபாத் பேருரையில் இருந்து சிலவற்றைக் குறிப்பிட்டு உரையை நிறைவு செய்தேன். இவ்வுரைக்குப்பின் சக நண்பர்கள் என்னை மௌலானா என அழைத்தனர் அரபாவில் உரையாற்ற சந்தர்ப்பம் கிடைத்த மைக்கு இறைவனுக்கு நன்றி.

லுஹர் தொழுகை கூடாரங்களில் பாங்கு போடப்பட்டு ஜமாஅத்தாக நடைபெற்றது. உணவு டெண்டுகளுக்கு (கூடாரம்) கொடுப் பார்கள் என ஹாஜிகா சொன்னார்கள். கூடாரங் களும் உணவு வராததால் நானும், சில ஹாஜி களும் என்ன நடக்கிறதென பார்க்கச் சென்றோம். அங்கு சென்று பார்வையிட்டதில் பல இடங் களில் பிரியாணி தயார் செய்து ஹாஜிகளுக்கு வினியோகிக்கப்படுகிறது. நானும் என்னோடு வந்த ஹாஜியும் உணவு வாங்கி கொண்டு வந்து கூடாரத்திலிருந்த ஹாஜிகளுக்கு கொடுத்தோம். யாருமே இவ்உணவை விரும்பும் படியாக இல்லை. இறைவன் பழவகைகள், ரொட்டி வகைகள் மூலம் ஹாஜிகளின் பசியை போக்குகிறான்.

மதிய உணவுக்குப்பின் தொழுகை, துஆ திகிர் என ஆரம்பித்து அஸரிலிருந்து மஃரிபு வரும் வரை தொடர்ந்து மௌலவி அல்தாப்ஹுசைன் தாவூதி, அகமது அமானிஹஸ்ரத், இப்ராஹீட் மௌலவி ஓர் தப்லீக் அமீல் ஆகியோர் தொடர்ந்து "துஆ" செய்து கொண்டேயிருந்தனர். ஹாஜிகளுக்காக உலக முஸ்லிம்களுக்காக மனைவி மக்கள் வியாபார விருத்தி நோயற்ற வாழ்வு போன்ற பல்வேறு விசயங்களுக்காக துஆச் செய்யப்

பட்டது. இறைவனருளால் துஆவுக்குப்பின் முஸ்தலிபா புறப்பட ஆயத்தம் அரபாவில் தங்குவது தான் ஹஜ் என்ற நபி பெருமானார் (ஸல்) பொன்மொழியை வல்ல அல்லாஹ் எங்களுக்கு நிறைவேற்றி, தந்தான். அரபாவில் தாய் தந்தையர், குடும்பத்தார், உஸ்தாதுகளுக்காக ஒவ்வொரு வரும் இறைவனிடம் இறைஞ்சினோம்.

**முஸ்தலிபா :** மஃரிபுக்கு முன்புறப்பட்ட ஆயத்தமாகி பெரும் சிரமத்துடன் ஹாஜிகள் பேருந்தில் புறப்பட்டோம். முஸ்தலிபாவுக்கு நடந்து செல்ல வேண்டுமென்ற அவா இருந்தது. எங்களுடன் உள்ளவர்கள் உடன்படாததால் பேருந்தில் செல்ல வேண்டியது ஏற்பட்டது. பேருந்து பெரும் மக்கள் கூட்டத்தைச் ஊர்ந்து கடந்து சென்றது. பல மணி நேரம் பேருந்தில் செல்லும் போது மனச் சோர்வும் மன உளச்சலும் ஏற்பட்டது. பேருந்து குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தப்பட்டு இடம்பிடிக்க இளைஞர் கூட்டம் முண்டி அடித்து ஏறுகிறது. பொதுவாக உறுது பேசும் முஸ்லிம்கள் நடந்து கொள்ளும் முறை வேதனையானது. பேருந்தில் இரு பெண்களுக்கு இடம் கொடாமல் இருக்கையில் இருந்த இரு முதியவர்கள் எழுந்து இருக்கையை கொடுத்தனர். முதியவர்களின் மனித நேயம் மெச்ச வேண்டியதே.


இரவு சுமார் 2 மணிக்கு முஸ்தலிபா சென்றடைந்தோம். பேருந்தை விட்டு இறங்கி மௌலவி அல்தாப் உசைன் தலைமையில் ஒரு குழுவாக இறங்கி கழிப்பிடம், குளியலறை உலூ செய்யுமிடமாக பார்த்து வெட்ட வெளியில் பெட்சீட்டு கொண்டு சென்ற பொருட்களை வைத்துவிட்டு உலூ செய்து மைதானத்தில் பாய் விரித்து குழுவினர் மஃரிபு இஷா தொழுகைகளை இமாம்ஜா அத்தாக தொழுதோம். தொழுது துஆ இறை தியானங்களில் ஈடுபட்டோம். பிரயாண களைப்பால் இஃறாம் உடையோடு அயர்ந்து தூங்கினோம். பனிமழை பொழிய தஹஜ்ஜத் நேரம் எழுந்தோம். எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டம் முஸ்தலிபா மின்விளக்குகளால் ஜொலித்தது. பார்க்க கண் பல வேண்டும். தஹஜ்ஜத் தொழுகைக்கு பின் இறைவனிடம் ஒவ்வொருவரும் நாட்ட தேட்டங்களை வேண்டி முறையிட்டோம்.

காலை சுபுகு பாங்கு ஒவ்வொரு குழுவினரும் தங்கியுள்ள இடங்களில் போடுகின்றனர். எங்கள் குழுவிலுள்ள தம்பி முபாரக் பாங்கு போட்டார். எங்களைச் சுற்றி அரபு நாட்டைச் சார்ந்த முஸ்லிம்கள் சிற்றுந்துகளில் வந்து மேல் பகுதி கீழ்பகுதி என தூங்கியவர்கள் சுபுகுபாங்கை கேட்டு உலூச் செய்து வெறுமனே இருந்தனர். தம்பி முபாரக்இகாமத் கொடுத்ததும் எங்கள் குழுவினரை பின் தொடர்ந்து தொழுதனர். முஸ்தலிபாவில் இமாமத் செய்யும் பாக்கியம் எனக்கு கிடைத்தது.

நான் தொழுகையில் ஸப்பிஹிஸ்மா சூரா ஹல்அதாகசூரா இரு ரக்அத்துகளிலும் அதிமாக ஓதினேன். தொழுகைக்கு பின் எனக்கு அரபி முஸ்லிம்கள் கூட்டமாக வந்து “சலாம்” தந்து ஆலிங்கனம் செய்தனர். நம் பகுதி மக்களின் கிராஅத் ஓதும் முறையை உற்று நோக்கும் அரேபியர் நம்மிடம் நாடு பெயர் போன்றவற்றை விசாரிப்பதுண்டு. கஃபாவில் நாம் “துஆ”ச் செய்யும்போது நம் அருகே நிற்கும் அரபிகள் நாம் ஓதும் துஆ கஃபாவை சுற்றும்பொழுது ஓதும் ஸலாவாத்துகள் துஆக்களை உற்று நோக்கி நம்மிடம் நலம் விசாரிக்கும் நிகழ்வு பல எனக்கு ஏற்பட்டது முஸ்தலிபாவில் உலகின் பல பாகங்களிலிருந்து வரும் முஸ்லிம்கள் வெட்ட வெளியில் இஃறாம் உடையோடு படுத்து தங்குவது எங்கும் காண முடியாத ஓர் இறை ஏற்பாடாகும். மனித இனத்தின் மூலம் ஒன்று தக்வா அடிப்படையில் தான் மனிதனின் உயர்வு உள்ளது என்ற திருமறை வசனத்தை மெய்ப்பிக்கும் மறுமையை நினைவுபடுத்தும் இறை ஏற்பாடாகும்.

முஸ்தலிபாவிலிருந்து சுபுகு தொழுது உடன் எங்கள் குழுவினர் கால்நடையாக மினா வந்தடைந்தோம். ஒவ்வொரு நாட்டினருக்கும் குறிப்பிட்ட நேரத்தில் கல் எறிய ஆணை - முஸ்தலிபாவில் புறக்கிய கல் மூன்று நாளாக எறிந்தோம். அதன்பின் குர்பானி கொடுக்கப் பட்ட பின் தலைமுடி பெரும்பாலோர் இறக்கு கின்றனர்.

ஷாபி சட்டப்படி கொஞ்சம் முடி தலையில் வெட்டினால் போதுமானது. மினாடெண்டைச் சுற்றி ஹாஜிகளின் முடிக்கூட்டம் உலூச் செய்யும் இடம், கழிப்பிடமென முடி கழிவு நடந்து போக முடியாத அளவு காணப்படுகிறது. ஒட்டும் இதற்கு அரசு ஓர் ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். மக்காவில் மினாவில் இந்திய ஹாஜிகளுக்கான இருப்பிடம் பக்கம் ஆஸ்பத்திரி, ஹஜ் கமிட்டி ஆட்கள் இருப்பர். நம் நாட்டு கொடியை பார்த்ததும் நம்மை அறியாமல் ஓர் சந்தோசமான உணர்வு



தொழுகின்றனர். நம் தமிழக, கேரள, கர்நாடக, ஆந்திர பழக்க வழக்கங்கள் தனியானது வட இந்திய முஸ்லிம்கள் வயோதிகர்களாக, சுறு சுறுப்பாக இருந்தாலும் செல்லுமிடங்களில், கழிப்பிடங்களில் மோதத் துணிகின்றனர். சில நேரங்களில் நானே ஹாஜிகளை மோதாமல் பொறுமை பற்றி "அல்லாகும அஸ்ஸாபிரின்" என்ற மறை வாக்கை சொல்லி அமைதிப்படுத்திய நிகழ்வுண்டு. ஹஜ்ஜு சம்பந்தமான வகுப்பு நடத்தும்போது நல்லொழுக்கம், பொறுமை, வயதிற்கும், பெண்களுக்கும் செய்ய வேண்டிய மரியாதை பற்றிய திருமறை நபிமொழியை அதிக அளவு போதிக்க வேண்டும். ஹஜ்ஜு கமிட்டி இதில் முக்கியமாக பங்காற்ற வேண்டும்.

நம்மவருக்கு ஏற்படுகிறது.

முதல் வட்ட மேஜை மாநாட்டில் ஆங்கிலேய அரசர் ஆட்சியாளருக்கு முன்னால் இந்து முஸ்லிம் பிரச்சினைப்பற்றி இந்தியத் தலைவர்களுக்கு முன்னால் பேசிய மாபெரும் சுதந்திரப் போரட்ட தியாகி மௌலானா முகம்மதலி ஜௌஹர் நாடு என பிரச்சினை வந்தால் நான் இந்தியன் இந்தியன். இந்தியன் நான் சார்ந்து வாழ்க்கை நெறி பற்றி பிரச்சினை வந்தால் நான் முஸ்லிம் முஸ்லிம், முஸ்லிம் - இது தான் எங்களின் கொள்கை என்பதை சகோதரர்களுக்கும், எங்களை ஆளுவோருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். என சொன்ன வார்த்தை இந்தியாவில் முஸ்லிம்களின் முழக்கமாக என்றும் ஒலிக்க வேண்டும். நாட்டுப்பற்று விசுவாசத்தின் ஒரு பகுதி என பெருமானார் சொன்ன சொல் நம் நாட்டு கொடியை பார்க்கும் பொழுது நமக்கு ஏற்படும் உணர்விலிருந்து அறியலாம்.

முதல் நாள் கல் எறிந்ததும் சிற்றுந்தில் மக்கா வந்து நகாஸா போய் தங்குவிடுதியில் குளித்து உணவு உண்டு ஹரம் சென்று தவாப் செய்து, ஸயீசெய்து இரவே சிற்றுந்தில் மினா வந்து சேர்ந்தோம். மினாவில் நமீர் பள்ளியில் ஒவ்வொரு தொழுகைக்கும் பாங்கு சொல்லப் படுகிறது.

இங்கு உயிர்ப்பு சக்தி உடையது. பாங்கின் பிலால் (ரழி) எழுச்சியும் உணர்ச்சியும் காண முடிகிறது. பள்ளியில் இடம் போதாமையால் மக்கள் பள்ளியை சுற்றியும், கூடாரங்களிலும்

மினாவில் இரண்டாவது நாள், மூன்றாவது நாள்கள் சைத்தானுக்கு குழுவாக சென்று கல் எறிந்தோம். மூன்றாவது நாள் கல் எறிந்து விட்டு வரும் பொழுது எங்கள் குழுவிலுள்ளோர் பெண்கள் உள்பட நமீர் பள்ளி சென்று இருறக் அத்சுன்னத் தொழுது வந்தோம் கூடாரம் வரும் வழியில் தண்ணீர் பிஸ்கெட்டு ஆப்பிள் என உபசரிப்பு இவைகள் அந்நாட்டு வசதி படைத்தோர் ஹாஜிகளுக்கு கொடுத்து உதவுகின்றனர்.

மினாடெண்ட் வந்து (கூடாரம்) வந்து யாத்திரை சாதனங்களை நாங்கள் எடுத்து முப்பது பேருக்கு ஒரு சிற்றுந்து ஏற்பாடு செய்து நகாஸா வந்தோம். எங்கள் குழுவிற்கு மௌலவி அல்தாப்ஹுசைன் தாவூதி அமீராகவும் முபாரக் நூருல்லா பாய் ஐபருல்லா பாய் போன்றோர் பாதுகாப்பாகவும் அரணாக செயல்பட்டது மெச்ச வேண்டியதே. மினாவிலிருந்து நகாஸா வந்தடைந்த போது நகாஸா சுற்றுப்புற மஸ்ஜிதுகளில் அஸர்தொழுகைக்கு பாங்கு சொல்லப் பட்டு கொண்டிருந்த அழைப்பு ஒலி ஹஜ்ஜை முடித்துக் கொண்டு வரும் ஹாஜிகளே! வருக! வருக! என வரவேற்பதைப் போன்ற உள் உணர்வு ஏற்பட்டது. மனதிற்கு சந்தோசமும் ஏற்பட்டது. அல்ஹம்துலில்லாஹ்.



vaigarai velicham official



# தீண்டாமை ஒழிய எளிய வழிமுறை என்ன?

**இந்து** மதம் என்றால் மண்ணாங்கட்டி அல்ல. உடைத்துத் தூள் ஆக்கிவிடுவதற்கு. அது உங்கள் வாழ்நாளில் மட்டுமல்ல உங்கள் பேரன் காலத்திலும் முடியுமா என்று கருதக்கூடியதுமல்ல. அது (இந்து மதம்) உங்களுடைய சொத்துமல்ல. நீங்கள் தேவையின்றி உங்களுடையது என்று கூறிக்கொண்டு துன்பப்படுகின்றீர்கள். இந்து மதத்தில் உங்களுக்கு இடம் இல்லை. அப்படி எனில், வேறு என்ன செய்வது என்று கேட்பீர்கள். சொல்லுகின்றேன். அதற்குப் பதில் என்ன வென்றால், பாவமானாலும் இந்து மதத்தை விட்டு நீங்கள் ஒழியுங்கள் என்பதுதான்.

அப்படி ஒழித்துவிட்டால், இந்த மதம் ஒழிந்துவிடுமா? தீண்டாமை ஒழிந்துவிடுமா? என்று கேட்பீர்கள். நீங்கள் அதிலிருந்து ஒழிந்த பின்பு அது இருந்தால் என்ன? ஒழிந்தால் என்ன? அதில் தீண்டாமை இருந்தால் என்ன? தொலைந்தால் என்ன? உங்களுக்கு ஏன் அந்தக் கவலை? என்று கேட்கிறேன். இந்து மதத்தில் இருந்து விலகிவிட்டதால் தீண்டாமை போய் விடுமா? என்று கேட்பீர்கள்.

அதற்கு எனது பதில் : எந்த மதத்தில் தீண்டாமை இல்லையோ? - அந்த மதத்தில் சேர்ந்து விட்டதாகச் சொல்லுங்கள். அப்புறம் எவன் உங்களைத் தீண்டத்தகாதவன் என்று சொல்லுவான்? மதம் இல்லாதவனுக்கும் தீண்டாமை உண்டு. வேறு மதத்தில் சேர்ந்தவனுக்குத்தான் தீண்டாமை இல்லை. அவ்வளவு எளிதில் தீண்டாமை ஒழிப்பு இருக்க, தீண்டாமை ஒழிய இந்து மதத்தை ஒழிக்க வேண்டும் என்றால், யோசனை அற்றதும், இயலாத செயலுமாகும். இந்து மதம் என்று ஒன்று இல்லை. இருப்பதாகக் காட்டிக் கொள்வதை எளிதில் ஒழிக்க முடியாது.

எனவே, உங்களுக்குக் குறுக்கு வழி - இந்து மதத்தில் இருந்து நீங்கள் விலகி விடுங்கள். இதுதான் எளிதான செயல். உங்களைப் பொறுத்த வரையில், நான் இதை 20 ஆண்டுகளாகக் கூறி வருகின்றேன்.

இப்பொழுதும் ஆண்டுக்கு சுமார் 1000, 2000 பேர்களுக்கு மேலாகவே - நம் நாட்டில் கிறித்தவர்களாகவும் இசுலாமியர்களாகவும் ஆகிவருகின்றனர். கிறித்துவத்தில் சேர்ந்தவர்கள் நிலை எப்படி இருந்தாலும், இஸ்லாத்தில் சேர்ந்தவர்களுக்கு தீண்டாமையும், சூத்திரப் பட்டமும் பஞ்சாய்ப் பறந்து விட்டதை தான் பார்கின்றேன்.

நான் இவைகளை, அதாவது நீங்கள் இஸ்லாமாகக் கருதும்படி நடந்து கொள்ளுங்கள்

என்பதை - உங்கள் ஆத்மார்த்தத்திற்கோ, மோட்சத்திற்கோ சொல்ல வரவில்லை. அதற்கு இந்து மதமே போதும், எவ்வளவு பெரிய பாலமானாலும் எளிதாகத் தீர்த்துவிட இந்து மதத்தில்தான் வழி இருக்கின்றது. எனவே, பாவமன்னிப்புக்கு என நான் சொல்ல வரவில்லை. உங்கள் இழிவு நீங்கிச் சுயமரியாதை ஏற்பட்டு - மான வாழ்வு ஏற்படவும், போதுமான ஆதரவு இருந்து உங்கள் பலவீனம் எல்லாம் ஒழியவும்தான் நான் இதைச் சொல்லுகின்றேன்.

இந்து மதம் உங்கள் பணத்தைப் பெற்றுக் கொண்டு, உங்கள் மானத்தை வாங்குகின்றது. அதற்கு காந்தியார் பிரச்சாரம், பார்ப்பனர் தொண்டு, முட்டாள்களின் பணம், தமிழ் மடாதிபதிகள், தமிழ் கோடீசுவரர்கள், தமிழ் அறிஞர்கள், தமிழ்க்கலை ரசிகர்கள், நாடகக் காரர்கள், சினிமாக்காரர்கள், பாட்டு வித்வான்கள் போன்றோர்களின் நீர்ப்பாய்ச்சல் என்னும் ஆதரவும் தாராளமாய் வற்றாத கடலாய் அதற்கு இருந்து வருகின்றது.

எனவே இந்து மதத்திலிருந்து மானமுள்ள ஆதிதிராவிடனும், தமிழனும் வெறுத்து அதிலிருந்து விலக வேண்டுமே ஒழிய - அதைவிட்டு இசுலாம் மதத்தைப் பற்றியோ, வேறு மதத்தைப் பற்றியோ வெறுத்துப் பேசுவது மதியற்றதும், மான உணர்ச்சியற்றதுமாகும்.

**20.6.1943 அன்று தீண்டாமை ஒழிப்பு நாள் விழாவில் ஆற்றிய உரை.**



# மனித வாழ்வு பெற மதம் மாறுவீர்!

## டாக்டர் அண்ணல் அம்பேத்கர்

**என்னைப்** பற்றி நான் ஒரு முவுக்கு வந்துவிட்டேன். மத மாற்றம் பற்றிய என் முடிவு எவ்வளவு உறுதியானதோ - அதுபோல அது எவ்வித ஆதாயத்திற்காகவும் அல்ல என்பதும் உறுதியானதாகும். தீண்டத்தகாதவனாயிருந்தும் நான் அடைய முடியாததென்று எதுவுமே இல்லை. நான் மதம் மாறும் முடிவு என் உளப்பூர்வமான முடிவாகும்.

இந்து மதம், என் அறிவுக்கு ஏற்புடையதாக இல்லை. என் சுயமரியாதைக்கு உகந்ததாக இல்லை. எனவே, நீங்கள் மதம் மாறுவது என்பது இவ்விரண்டிற்காகவும் ஆகும்.

பொருள் கண்ணோட்டத்துடன் மதம் மாறுவதைப் பற்றி சிலர் எள்ளி நகையாடலாம். அப்படிப்பட்டவர்களை கடைந்தெடுத்த அயோக்கியர்கள் என்பேன். நீங்கள் இறந்த பிறகு - உங்கள் ‘ஆத்மாவு’க்கு என்னென்ன உண்டாகும் என்பதைக் கூறுகின்ற ஒரு மதம், பணக்காரர்களுக்கு பயனுள்ளதாக இருக்கலாம்.

‘ஆத்மா’வின் எதிர்காலத்தைப் பற்றி அவர்கள் கனவு கண்டு கொண்டிருக்கின்றனர். தம் வாழ்நாளில் அனைத்து வகை இன்பங்களையும் அனுபவித்தவர்கள், இறந்த பிறகும் அவர்களின் கேளிக்கையைப் பற்றி கூறும் மதத்தையே - உண்மையான மதம் என்று அவர்கள் கருதலாம்.

ஆனால், ஒரு குறிப்பிட்ட மதத்தில் அமிழ்ந்து


vaigarai velicham official

கிடக்கும் ஒரு சாரார். அம்மதத்திலேயே வெறும் குப்பைகளாக இழிக்கப்பட்டு - உணவு, உடை போன்ற அடிப்படை வாழ்வியல் தேவைகள்கூட புறக்கணிப்பட்டு, மனிதர்களாகக்கூட நடத்தப்படாததால் - மனித உணர்வையே முற்றிலும் இழந்துவிட்ட மக்களின் நிலை என்ன? இந்நிலையில் உள்ள மக்கள், மதத்தினைப் பொருளாதார மேம்பாட்டுக்கான நோக்கில் கூர்ந்து பார்க்க வேண்டாமா?

மனிதனுக்காகத்தான் மதமே ஒழிய - மதத்திற்காக மனிதன் என்பதல்ல. உங்களை மனிதப் பிறவிகளாகக் கூட நடத்திடாத ஒரு மதத்தில் - நீங்கள் ஏன் முடங்கிக் கிடக்க வேண்டும்? நீங்கள் ஒரு கோயிலில் நுழைவதைக்கூட தடுத்திடும் ஒரு மதத்தில் ஏன் நீங்கள் நிலைத்திருக்க வேண்டும்? பொதுக் கிணற்றில் குடிநீர் எடுக்கக்கூட உங்களைத் தடை செய்யும் ஒரு மதத்தில் ஏன் நீங்கள் நீடித்திருக்க வேண்டும்? வாழ்வின் ஒவ்வொரு படித்தளத்திலும் - உங்களை அவமானப்படுத்தும் ஒரு மதத்தில் நீங்கள் ஏன் இருக்க வேண்டும்?


எந்த ஒரு மதத்தில் மனிதப் பொதுப் பண்புகள் ஒரு தனிமனிதனுக்குத் தடை செய்யப் பட்டுள்ளதோ அது மதமாகாது. அதிகாரத்தின் மூலம் அத்துமீறிய செயலேயாகும். எந்த ஒரு மதத்தில் விலங்குகளைத் தொட அனுமதிப்பதும், மனிதனைத் தீண்டுவதற்குத் தடையும் விதிக்கப் பட்டிருக்கிறதோ - அது மதமாகாது.

மேலும், எந்த ஒரு மதம் சில இனத்தார் கல்வி கற்பதை மறுத்தும், அவர்கள் பொருள் சேர்க்கத் தடை விதித்தும், ஆயுதம் ஏந்த அனுமதிக்காமலும் செய்கிறதோ - அது மதமாகாது. படிப்பறிவில்லாத மக்களை, ஏழ்மையிலேயே உழன்று கிடக்கச் செய்வதும் மதமாகாது. மதத்தின் பேரால் சுமத்தப்பட்ட பெருந்தண்டனையாகும்.

எந்த ஒரு மனிதன், விருப்பு வெறுப்பின்றி மக்களுக்குத் தீயவை எது - நல்லவை எது என்று துணிவுடன் சொல்கிறானோ, அவனையே நான் தலைவனாகக் கருதுகிறேன். நீங்கள் விரும்பி ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், உங்களுக்கு நல்லது எது என்பதைச் சொல்வது என்னுடைய தலையாயக் கடமையாகும். நான் என் கடமையைச் செய்துள்ளேன். பொறுப்புணர்ந்து செயலாற்றுவதும் சரியான முடிவெடுப்பதும் உங்கள் கடமையாகும்.

நீங்கள் மதமாற்றத்திற்கு ஆதரவாக முடிவெடுத்து, நீங்கள் விரும்பும் மதத்தை தழுவிட முன்வந்தால் - உங்கள் மதமாற்றப் பாதையில் நான் குறுக்கிட மாட்டேன். நீங்கள் இன்று எடுக்கும் முடிவு, உங்கள் எதிர்கால சந்ததியினர் வாழ்வைச் செப்பனிடும். நீங்கள் அடிமைகளாகவே நிலைத்திருக்க முடிவு செய்தால், உங்கள் சந்ததியினரும் அடிமைகளாவர். உங்களுக்கு நீங்களே வெளிச்சமாயிருங்கள்.

**முழு மனித வாழ்வு பெற, அமைப்பு ரீதியில் ஒன்றுபட, சுயபலம் பெற்றிட, சமத்துவத்தை அடைந்திட, விடுதலையை வென்றிட, குடும்ப வாழ்க்கையில் மகிழ்வடைய வேண்டுமெனில் - மதம் மாறுங்கள்.** ■





# அம்பேத்கரை நான் தலைவராக ஏற்றுக்கொண்டேன்

**இன்று** நீங்கள் எதற்காகக் கூடியிருந்தாலும் அதாவது கூலி உயர்வுக்கோ, உத்தியோக பங்குக்கோ, நாட்டு சுதந்திரத்துக்காகவோ, பொது உடைமைக்கோ அல்லது வேறு எந்தக் காரியத்துக்காகக் கூடியிருந்தாலும் சரி, நீங்கள் உங்களைப் பற்றிய ஒரு உண்மையை மட்டும் மறந்து விடாதீர்கள்.

அதாவது, நீங்கள் 'கீழ்சாதி' என்றும் 'இழிமக்கள்' என்றும், 'அரிஜனங்கள்' என்றும் இழிவாகக் கருதப்பட்டு, அழைக்கப்பட்டு வருவது மட்டுமல்லாமல் அந்தப்படி மதம், அரசியல் ஆதாரங்களும் அதாவது சாஸ்திரம், சமயம் முதலியவைகளில் நிலைப்படுத்தியும் நடவடிக்கையில் இழிமக்களாக - நீங்கள் பெரும்பாலோர் நடத்தப்பட்டு வருவதோடு, அதன் பயனாக நீங்கள் மற்ற மக்களைக் காட்டிலும் சமுதாயம், கல்வி, பொருளாதாரம், வாழ்வு முதலியவைகளில் கடையராய் கீழ்நிலையில் இருக்கின்றீர்கள்.

இதை நீங்கள் மனத்தில் வைத்துக்கொண்டு உங்கள் மாநாட்டை நடத்துங்கள். இதற்குப் பரிகாரம் தேட கொள்கை திட்டம் வகுங்கள். நீங்கள் ஏன் பஞ்சமன், எப்படி பஞ்சமன் என்பது தெரிந்தால்தான் - நீங்கள் 4ஆவது சாதி 5ஆவது சாதி, மற்ற ஒருவர் முதலாவது சாதி, இரண்டாவது சாதி என்பது சட்டத்தில் சாஸ்திரத்தில், சாமிகளிடத்தில் இருக்கும் வரையில் பிச்சை கேட்கத்தான் முடியும்.

சாக்கடை தள்ளுவது, மலம் எடுப்பது, பிணம் சடுவது, சுடுகாடு காப்பது போன்ற ஈன வேலை என்பவைகளை எல்லாம் செய்வதில் உள்ள 100-க்கு 100 பேரும் நீங்களே! இந்தப்படி ஏன் இருக்க வேண்டும்? உங்களைத் தவிர வேறு எந்த சாதியானாவது அதாவது முதல் சாதி பிராமணனாவது அவனுக்கு அடுத்தவரானான இரண்டாவது சாதி சைவனாவது இந்த இழி வேலையை செய்கிறானா?

படிப்புக்குத் தொங்குகிறானா? உயிர்வாழ் வதற்கு மலம் எடுக்க, மூட்டைத் தூக்க வேறு நாட்டுக்கு ஓடுகிறானா? நான் சொல்வதை சிந்தியுங்கள், உங்களுக்குப் பிடித்தால் ஏற்றுக் கொள்ளுங்கள்; இல்லாவிட்டால் உடனே தள்ளிவிடுங்கள். உங்களைக் கொண்டு உங்களைக் காட்டி பதவி பெறும், வயிறு வளர்க்கும் ஆட்கள் பேச்சைக் கேட்டு என்மீது கோப்படாதீர்கள்.

தோழர்களே! உங்களுக்கு உற்ற தலைவர் அம்பேத்கர் என்றும் அவரால்தான் பஞ்சமர்கள், கடையர்கள் இழி பிறப்பு என்கின்ற கொடுமைகள் நீங்குமென்றும் நம்பினேன். அதனாலேயே உங்களுக்குத் தலைவராக ஏற்றுக்கொள்ளும்படி பிரச்சாரம் செய்தேன். நானும் தலைவர் என ஏற்றுக்கொண்டேன் ஏன்?

என்னைப் போலவே அவரும் 15 அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்பு உங்கள் நோய்க்கு மருந்து சொன்னார். என்னவென்றால் "பஞ்சமர்கள் என்பவர்கள் தங்கள் இழிவு,


vaigarai velicham official

குறைபாடு நீங்க வேண்டும் என்றால் - இந்து மதத்தை விட்டு விட்டு இஸ்லாம் (சமுதாய சமதர்ம) மருந்தைச் சார வேண்டும்" என்று பகிரங்கமாகச் சொன்னேன். அவர் 1930இல் சொன்னார்.


அதனாலயே நாங்கள் சிறந்த நண்பர்களானோம். அவரைப் பற்றி உங்களுக்கு அதிகம் பிரச்சாரம் செய்தேன். அதுமட்டுமல்ல; அவர் ராமாயணத்தைக் கொளுத்தியவர். "கீதையைக் கொளுத்த வேண்டும். இது முட்டாள்களின் பிதற்றல்" என்றுகூட, அதுவும் சென்னை மாகாணத்துக்கு வந்து சொல்லிவிட்டுப் போனவர். "இந்து மதத்தால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்விதப் பயனும் இல்லை. இனியும் இருக்காது. இந்து மதத்தை விட்டொழித்தாலொழிய இழிவு நீங்காது" என்று முழங்கினார். வெளிப்படையாக பிரகடனம் செய்தவர். இதுபற்றி பல புத்தங்களில் குறிப்பிட்டுள்ளார்.

ஆதலால் அவருடைய, அந்தக் கருத்தை நீங்கள் தழுவினாலொழிய - உங்கள் குறையும் இழிவும் நீங்காது என்று சொல்கின்றேன். இந்தச் சந்தர்ப்பத்தில் பல இடங்களில் என்னைச் சிலர் தெரிந்தோ தெரியாமலோ குறும்புக்காகவோ ஒரு கேள்வி கேட்கிறார்கள். என்னவென்றால் "இப்படிச் சொல்லும் நீங்கள் ஏன் இந்து மதத்தில் இருக்கிறீர்கள்? ஏன் இஸ்லாம் மதத்தில் சேரவில்லை?" என்கிறார்கள். பலமுறை இதற்குப் பதில் சொல்லியிருக்கிறேன்.

நான் மட்டுமல்லாமல், சூத்திரர், பஞ்சமர் என்ற வகுப்புகளில் பலர், அதாவது திராவிடர் கழகம், சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றிலுள்ள பலர் - தாங்கள் இந்துக்கள் அல்ல என்றே முடிவு செய்து கொண்டு இருக்கிறார்கள். திருவாரூரில் 1940இல் கூடிய திராவிடர் கழக மாநாட்டில், 'நாங்கள் திராவிடர்கள் என்றும் இந்துக்கள் அல்ல' என்றும் ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டுள்ளது. முடிந்தவரை இந்துக்கள் அல்லாதவர்களாகவே - திராவிடர்களாகவே இருக்கிறோம். எங்கள் மனப்பூர்வமாகவும் நான், நாங்கள் இந்துக்கள் அல்ல.

1947 சூலையில் மாயவரத்தில் நடைபெற்ற
மாபெரும் தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில்
ஆற்றிய உரை. விடுதலை 10.7.1947



# வரலாற்றை வசப்படுத்திய வாஞ்சைமிகு மாந்தர்

**வரலாற்றின்** ஏடுகளில் வாசம் வீசும் மலர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாதரசிகளில் இவர்கள் தனித்துவம் மிக்கவர்கள். வரலாறு படைத்த அந்த முதல் நிலை முஸ்லிம் பெண்களில் தனிச்சிறப்பு வாய்ந்தவர். அண்ணல் நபிகளார் (ஸல்) அவர்களின் இதயத்தில் தனிப்பெரும் மரியாதையை ஈட்டிக் கொண்ட மாதர்குல மாணிக்கம். உம்மு ரூமான் (ரழி) என்ற வாசம் மணக்கும் பெயரால் அவர்களை வரலாறு நமக்கு அறிமுகப்படுத்துகின்றது.

இவர்களிடம் நிரம்பி வழிந்த நற்குணங் களிலும் ஓம்பப்படும் உயர் பண்புகளும் இவர்களை மாதர் குலப் பேரரசியாக ஆக்கிவிட்டன.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மரியாதைக்குரிய ஹழ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரழி) அவர்களின் பாசமிகு துணைவியார். அறிவின் சிகரம் அன்னை ஆயிஷா (ரழி) அவர்களின் அன்புத் தாயார். தூய அறநெறியாம் இஸ்லாத்தை இத்தரணியில் நிலை நாட்டிட களம் பல கண்ட குதிரை வீரர் அப்துர் ரஹ்மான் பின் அபீபக்ர் (ரழி) அவர்களின் தாயார்.

மோதல்கள், கலவரங்கள், பூசல்கள், பிணக்குகள் இவற்றுக்குப் பேர் போன மக்கா நகரின் அறியாமைக் காலத்தில் ஒழுக்கத்துடனும் நாகரீகத்துடனும் வாழ்ந்த சிறந்த உத்தமியான உம்மு ரூமான் (ரழி) அவர்களை அக்காலத்தில் பிரபல்யமான ஒழுக்க சீலர்களில் ஒருவரான அல்ஹாரிஸ் பின் சஹீரா என்றொரு இளைஞர் மணமுடித்து வாழ்க்கைத் துணையாக்கி வளமான வாழ்வு வாழ்ந்தார். இருவருக்கும் துஃபைல் என்றொரு ஆண் மகவும் பிறந்தது.

வெளியூர்வாசியான அல்ஹாரிஸ் அவர்களுக்கு தம் தாய் மண்ணில் வாழ்வதை விட திரு ஆலயமாம் கஃபாவை தன்னகத்தே தாங்கி நிற்கும் மக்காவில் வாழ்வதே மனதுக்கு ஆறுதலாய் இருந்தது. அவரின் மன ஓட்டங்கள் மக்காவையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தன. தன் ஆசைப்படியே மக்காவில் வாழ்ந்திட வழிதேடி அந்த மாநகர் நோக்கி வந்தார் அல்ஹாரிஸ். தன் ஆசை மனைவி உம்மு ரூமானையும் தன் அன்புக் குழந்தை துஃபைலையும் தன்னுடன் அழைத்து வந்து விட்டார். தம் வாழ்நாள் முழுவதையும் மக்காவிலேயே கழித்திட வேண்டும் என்று அடக்கவொண்ணா ஆசையோடு.

அக்கால அரபு மக்களிடம் ஒரு பழக்கம் உண்டு. யாரேனும் ஒரு வெளியூர்வாசி மக்காவில் தங்கிட வேண்டுமானால் மக்காவாசி ஒருவர் அவருக்கு அடைக்கலமும் ஆதரவும் தந்திருக்க வேண்டும். அப்படி இல்லையெனில் அந்த வெளியூர்வாசி அங்கே வாழ்ந்திட வகை ஏதும் இருக்காது. இந்நிலையில் அல்ஹாரிஸ் அவர்களுக்கு ஆதரவளித்திட ஒருவரை அம்மண்ணில் அல்லாஹ் தராமல் இருக்க வில்லை. இனவெறியும் நிறவெறியும் பேயாட்டம் போட்டுக் கொண்டிருந்த அக்கால மக்காவில் அல்ஹாரிஸ் அவர்களுக்கு அடைக்கலம் தந்தார் ஒரு மாமனிதர். அவர்தான் அபூபக்ர் சித்தீக் (ரழி) அவர்கள். இது நடந்தது இஸ்லாம் என்ற அறநெறி அவனிக்கு வரும் முன்பு.



அல்ஹாரிஸ் அவர்களுக்கு மக்காவின் வாழ்க்கை மனதுக்கு இதமாய் இருந்தது. தம் ஆயுள்வரை அங்கேயே வாழ்ந்தார். ஒருகால கட்டத்தில் தம் உலக வாழ்க்கையை முடித்துக் கொண்டு இறப்பெய்தினார் அல்ஹாரிஸ். இவர் இறந்த பின்னரும் அவரின் குடும்பத்தை மிக்க மரியாதையோடும் கண்ணியத்தோடும் அரவணைத்துப் பாதுகாத்து வந்தார்கள் அபூபக்ர் சித்தீக் (ரழி) அவர்கள். நிர்க்கதியாய் நின்ற அல்ஹாரிசின் குடும்பத்துக்கு ஆதரவுக்கரம் நீட்டினார்கள். பின்னர் உம்மு ரூமான் (ரழி) அவர்களை தம் வாழ்க்கைத் துணையாக்கி கவுரவம் சேர்த்தார்கள் அபூபக்ர் சித்தீக் (ரழி) அவர்கள். மக்கா நகரில் மாட்சிமையும் மதிப்பும் மிக்க ஒரு மாமனிதரின் மனைவியாக ஆனதில் உம்மு ரூமான் (ரழி) அவர்களுக்கு எல்லையில்லா மகிழ்ச்சி.

அபூபக்ர் சித்தீக் (ரழி) அவர்கள் ஏற்கென கதீலா என்றொரு பெண்ணை மணமுடித்திருந் தார்கள். அவர்களுக்கு அஸ்மா என்றொரு பெண் குழந்தையும், அப்துல்லா என்றொரு ஆண் குழந்தையும் இருந்தார்கள். உம்மு ரூமான் (ரழி) அவர்கள் மூலமாக அப்துர் ரஹ்மான், ஆயிஷா ஆகிய இரு குழந்தைகள் பிறந்தனர். வற்றாத செல்வமும் வளமான வாழ்வும் அக்குடும்பத்தினருக்கு மகிழ்ச்சியை வாரி இறைத்துக் கொண்டிருந்தது.

அண்ணல் முஹம்மது (ஸல்) அவர்களை ஏக நாயன் அல்லாஹ் தன் இறுதித் திருத்தூதராக அவனியோருக்கு அருட்கொடையாக, உலகின் வழிகாட்டியாக அனுப்பி வைத்தபோது அவர்களை முதன்முதலில் ஏற்றுக்கொண்டு ஈமானின் கொடியை ஏந்திப் பிடித்தார்கள் ஹழ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரழி) அவர்கள். அதுமட்டுமல்ல அல்லாஹ்வின் பாதையில் மக்களை அழைத்திடும் தாஃவத் பணியில் இன்முகத்தோடும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்கள். இவர்களின் அழைப்பின்மூலம் இஸ்லாத்தை செவியேற்று அதனை ஆரத்தழுவிக் கொண்டோர் அனேகர் உள்ளனர்.

தன் வாழ்க்கைக்கு வெளிச்சத்தையும் அர்த்தத்தையும் வழங்கிய இஸ்லாத்தின் நல்லறப் போதனைகளை தன் அன்புத் துணைவியார் அம்மு ரூமானிடம் எடுத்துக்கூறி அல்லாஹ்வின் மார்க்கத்தை ஏற்றிட அழைத்தார்கள் அபூபக்ர் சித்தீக் (ரழி). இறை நம்பிக்கையாளர்கள் தங்களின் ஈமானை மனதுக்குள் ரகசியமாக வைத்துக் கொண்டிருந்த காலம் அது. கணவரின் அழைப்பை ஏற்று இஸ்லாத்தை தழுவி அதை அல்லாஹ்வின் நாட்டப்படி உம்மு ரூமான் (ரழி) மனதுக்குள் வைத்துக் கொண்டார்கள் உம்மு ரூமான் (ரழி). ஒழுக்கத்தின் நிறைகுடமாய் நின்றிலங்கிய இவர்களுக்கு ஈமானின் ஒளியும் சேர்ந்து பொலிவூட்டியது. அழகுக்கு அழகு சேர்த்தது. அவர்களின் நற்பண்புகளை அர்த்த முள்ளதாக்கியது. அழகைக் கூட்டி அணிசேர்த்தது.

அண்ணல் நபிகளார் (ஸல்) அவர்கள் தன் நற்றவலத் தோழர் அபூபக்ர் சித்தீக் (ரழி)யின் இல்லத்துக்கு அடிக்கடி சென்று வருவார்கள். ஒவ்வொரு முறையும் அவர்கள் அங்கு வரும் போதெல்லாம் மகிழ்ச்சியுடனும் உற்சாகத் துடனும் அவர்களை வரவேற்று கனிவாக உபசரித்து கணவரின் நண்பரை கண்ணியப்படுத் துவார்கள் உம்மு ரூமான் (ரழி) அவர்கள். இதனால் அண்ணலாரின் மனங்கவர்ந்த இல்லமாக ஹழ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரழி) அவர்கள் வீடு விளங்கியது. உம்மு ரூமானின் வாஞ்சையான வரவேற்பும் கனிவு தோய்ந்த கவனிப்பும் அண்ணல் நபி (ஸல்) மீது அவர்களுக்கு இருந்த மரியாதையை பறைசாற்றிக் கொண்டிருக்கும்.

கணவரின் கவலையைப் போக்கி ஆதரவாய்ப் பேசுவதிலும் இறுக்கம் நிறைந்த நாட்கள் தரும் துன்பங்களைத் துடைத்து துவண்டு சரியும் மன உறுதியைத் தூக்கி நிறுத்தி கணவனின் கண்ணில் நிறைந்த மனைவியாக வாழ்ந்தார்கள் உம்மு ரூமான் (ரழி). அல்லாஹ்வின் மார்க்கத்தை நிலை நாட்டிடும் அறப்பணிக்கு தம் சொத்துக்களை அபூபக்ர் சித்தீக் (ரழி) அர்ப்பணித்த போது அவர்களுக்கு உற்சாகம் தந்து ஊக்கப்படுத்தி உறுதுணையாய் நின்றார்கள்.

இஸ்லாத்தின் ஆரம்பக் காலக்கட்டங்களில் முஸ்லிம்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தபோது எதிரிகளின் தொல்லைகள் அச்சுறுத்தல்கள் அளவின்றி ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தன. அப்பொழுதெல்லாம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களுக்கு ஆற்றிய அறவுரைகள் அவர்களுக்கு ஆறுதலாகவும் தேறுதலாகவும் இருந்தன. அல்லாஹ்வுக்காக மேற்கொள்ள வேண்டிய பொறுமை பற்றி அண்ணலார் உதிர்த்த போதனைகள் உம்மு ரூமான் (ரழி) அவர்களுடைய இதயத்துக்கு உரமூட்டியது. தைரியம் தந்தது.

எல்லாம் வல்ல ஏக இறைவன் அல்லாஹ்வின் ஆணையை ஏற்று இறைத்தூதர் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத் எனும் தியாகப் பயணம் மேற்கொண்டார்கள். மதீனத் திருநகர் நோக்கி,

ஹழ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரழி) அவர்களையும் தன்னுடன் அழைத்துச் சென்றார்கள். அல்லாஹ்வின் மார்க்கத்தை நிலைநாட்டுவதற்கான தன் செல்வங்களை தன்னோடு எடுத்துச் சென்றார்கள். அபூபக்ர் சித்தீக் (ரழி) தன் மனைவி உம்மு ரூமான் (ரழி) அவர்களையும் அவர் தம் மக்களையும் மக்காவிலேயே அல்லாஹ்விடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றார்கள்.

இதனால் எதிரிகளின் அச்சுறுத்தல் ஒருபுறம், வாட்டி வதைக்கும் வறுமை மறுபுறம் என சங்கடங்களில் நெளிந்து கொண்டிருந்தாலும் அதற்காக கிஞ்சிற்றும் கவலை கொள்ளவில்லை உம்மு ரூமான் (ரழி) அவர்கள். கணவரை அல்லாஹ்வின் பாதையில் வழியனுப்பிவிட்டு தைரியமாய் எதிர்கொண்டார்கள் அதனால் வந்த சவால்களை.

குடும்பத்தலைவரை தொலை தூரத்துக்கு அனுப்பி வைத்துள்ள ஒரு குடும்பத்தை கவுரமாக நடத்த வேண்டும் என்ற நாகரீகம் அப்போது மக்காவில் இல்லை. குறிப்பாக முஸ்லிம்கள் மீது அநாகரீகங்களே ஏவி விடப்பட்டன. உம்மு ரூமான் (ரழி) அவர்களின் சொந்த ஊரான மக்கா இருந்திருந்தால் இவர்களின் ரத்த பந்தங்களாவது உதவிக்கரம் நீட்ட வருவார்கள் என நம்பலாம். அந்த நம்பிக்கையும் இவர்களுக்கு இல்லை.

எனினும் இவர்களின் கவலை எல்லாம் ஒன்றே ஒன்றின் மீதுதான். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் எதிரிகளிடம் சிக்கிவிடாமல் பத்திரமாக பாதுகாப்பாக இருக்கிறார்களா? என்பதே அவர்களின் கவலை. நிம்மதியாக நெருக்கடி ஏதுமின்றி மதீனாவைச் சென்றடைந்துவிட்டார்கள் என்ற தேனினுமினிய தகவலைச் சொல்லிட ஒருவர் வரமாட்டாரா? என்ற எதிர்பார்ப்பே அன்னை உம்மு ரூமானின் நெஞ்சத்தை நிரப்பி இருந்தது.

இறை நம்பிக்கையாளர்களின் எண்ணக் கிடக்கைகளை ஆழமாகப் புரிந்து வைத்திருக்கின்ற அண்ணலாருக்கு உம்மு ரூமான் (ரழி) அவர்களின் மன ஓட்டங்கள் இப்போது எப்படி இருக்கும் என்பதை உணர்ந்துகொள்வதில் சிரமம் ஏதும் இருக்கவில்லை. எனவே நாங்கள் மதீனா வந்தடைந்ததும் தன் குடும்பத்தவர்களையும் ஹழ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரழி) அவர்களின் குடும்பத்தினரையும் மதீனாவுக்கு அழைத்து வருவதற்குரிய ஏற்பாட்டை செய்வதில் தாமதம் ஏதும் காட்டவில்லை தாஹா நபி (ஸல்) அவர்கள். அவர்களின் திட்டப்படியே ஒவ்வொருவராக மதீனாவை வந்தடைந்து கொண்டிருந்தார்கள்.

அன்னை உம்மு ரூமான் (ரழி) அவர்களும் அவர்கள் புதல்வி ஆயிஷா (ரழி) அவர்களும் ஒரு ஒட்டகத்தில் வந்து கொண்டிருந்தார்கள். வழியில் ஒரு பெரும் பிரச்சனை. அவர்களிருவரும் ஏறி அமர்ந்து பயணம் மேற்கொண்டு வந்த ஒட்டகம் திடீரென தலைதெறிக்க தறிகெட்டு ஓட ஆரம்பித்தது. இருவருமே பதற ஆரம்பித்தனர். என் அருமை மகளே! அன்புச் செல்வமே! என அரற்றிக் கொண்டிருந்தார்கள் உம்மு ரூமான் (ரழி) அந்த ஆபத்தான நேரத்தில் கூட தன்னைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை. அந்த மாதரசி.

அன்னை ஆயிஷா (ரழி) கூறுகின்றார்கள் :

“பரபரப்பான அந்த நிமிடங்களில் எனக்கு ஒரு குரல் கேட்டது. ‘ஒட்டகத்தின் கடிவாளத்தை விட்டு விடு, அதைப்பிடித்து இழுக்காதே’ என்று. நான் உடனே அதை விட்டுவிட்டேன். ஒட்டகம் அப்போதுதான் தன் நிலைக்கு வந்தது. திடுக்கம் அடங்கியது. எஞ்சிய பயணம் இனிதாய்த் தொடர்ந்தது. எல்லாம் அல்லாஹ்வின் செயல்”

மக்காவிலிருந்து புறப்பட்ட (முஹாஜிர்கள்) தியாகப் பயணிகளின் கூட்டம் மதீனாவை வந்தடைந்தது. அன்னை உம்மு ரூமான் (ரழி) எல்லோரையும் முந்திக்கொண்டு முன்னால் வந்து சேர்ந்தார்கள். இவர்களுக்காக இவர்களின் அன்புக் கணவர் அபூபக்ர் சித்தீக் (ரழி) ஏற்பாடு செய்து வைத்திருந்த வீட்டில் வந்திறங்கினார்கள்.

மதீனா வாசிகளின் வரவேற்பும் அன்பான ஆதரவும் அன்னை உம்மு ரூமானுக்கு மகிழ்ச்சியைக் கூட்டியது. ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு ஏக நாயன் அல்லாஹ் பத்ருப் போரில் வெற்றியை உவந்தளித்தான். இது நடந்தது ரமழான் மாதத்தில். அதற்கடுத்த ஷவ்வால் மாதத்தில் ஹழ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரழி), ஹழ்ரத் உம்மு ரூமான் (ரழி) தம்பதியின் அன்புச் செல்வமான அன்னை ஆயிஷா (ரழி) அவர்களுடன் இல்லற வாழ்க்கையைத் தொடங்கினார்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள்.

பொறுமை, தன்னடக்கம் நாகரீகம் இவற்றின் கேத்திரமாய் நின்றிலங்கிய அன்னை உம்மு ரூமான் (ரழி)க்கு அண்ணல் நபியின் மாமியார் என்றொரு உயர்வான அந்தஸ்தும் சேர்ந்து பெருமை சேர்த்தது. சந்தோஷம் எங்கும் பரவி அமைதியானதோர் வாழ்க்கையை அல்லாஹ் அவர்களுக்கு வழங்கினான் மதீனாவில்.


vaigarai velicham official

இந்த அமைதியைக் கலைத்திடவும் மகிழ்ச்சியைக் கருகச் செய்திடவும் வந்தது ஒரு மாபெரும் சோதனை. அண்ணல் நபியின் அன்புத் துணைவியான அன்னை ஆயிஷா (ரழி) என்ற தம் மகள் மீது அடாத கும்பல் ஒன்று அவறுதூச் சேற்றினை அள்ளி வீசியதை தம் காதுகளால் கேட்க நேரிட்டது. இந்த நங்கை நல்லாளுக்கு அப்துல்லாஹ் பின் உபை என்ற நயவஞ்சர்களின் தலைவன் தான் முன்னெடுத்துச் சென்றான். அந்த அபாண்டத்தை. காண்போரின் காதுகளிலெல்லாம் இதை ஊதி ஊதிப் பரப்பி னான். ஆளையே சாய்க்கும் இந்த அவதூறுகள் மதீனாவையே உலுக்கிக் கொண்டிருந்தது. 'ஒழுக்கத்தை நிலை நாட்டிட வந்த இறைத் தூதரின் வீட்டின் ஒழுக்கக்கேடு' என்ற தோரணையில் பரப்பினர் சிலர் இந்த பாதகத்தை.

நெஞ்சைச் சுட்டெரிக்கும் இந்த வதந்'தீ'யின் காலங்களில் அன்னை உம்மு ரூமான் (ரழி) காட்டிய பெருந்தன்மை, மேற்கொண்ட பொறுமை வானளாவியது. ஒரு முஃமினாக இருந்து அவர்கள் காட்டிய பொறுமை அல்லாஹ்வின் தீர்ப்புகள் மீது அவர்களுக்கு இருந்த நம்பிக்கை நிறைவானது. ஒரு தாயாக இருந்து அவர்கள் மேற்கொண்ட அடக்கம், பணிவு பூரணமானது. ஏற்றம் நிறைந்தது. திருமறை வசனங்கள் வந்திறங்கி உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டும் வரை அதே பொறுமை. அதே நம்பிக்கை என வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள் என்றால் அது அசாத்தியமானதல்லவா?

தன் அன்பு மகளுக்கு அவர்கள் ஆறுதலாகக் கூறிய வார்த்தைகள் இவைதாம் : அன்பு மகளே... அல்லாஹ்வின் மீது ஆணையாக சக்களத்திகள் பலரைக் கொண்ட ஒரு பெண் தன் கணவரிடம் அன்பு மிக்கவராகவும் அழகுமிக்கராகவும் இருந்தால் அவரைப் பற்றி பிறர் பேசாமல் இருப்பதுதான் குறைவு என்றார்கள்.

தன் அருமை மகளார் ஆயிஷா (ரழி) மீது அண்ணல் நபி (ஸல்) கொண்டுள்ள பாசத்தைப் பிடிக்காத சிலரின் வதந்திகள்தான் இவை என்பதால் அதுகுறித்து அதிகம் அலட்டிக் கொள்ளாமல் அல்லாஹ்வின் மீது பொறுப்பை சுமத்திவிட்டு தைரியமாய் இருந்தார்கள் உம்மு ரூமான் (ரழி).

ஆரம்பக்க காலம்தொட்டு இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்த அபூபக்ர் (ரழி) அவர்களின் குடும்பத்தினரை இதற்குமேல் சோதிக்கஅல்லாஹ்விரும்பவில்லை. மட்டுமல்ல, தியாக தீபமாய் ஒளிர்ந்த அக்குடும்பத்தை உலகம் உள்ளளவும் கண்ணியப்படுத்திடவும் தவறவில்லை. என்றும் அழியாத திருமறை மூலமே அந்த கண்ணியத்தைத் தந்தான் பேரருளாளன் அல்லாஹ்.

அன்னை ஆயிஷா (ரழி) கூறுகின்றார்கள் :

"என் பெற்றோர் அபூபக்ர் (ரழி) உம்மு ரூமான் (ரழி) இருவரும் எனக்கு வினவத் தெரிந்த நாள்முதல் இறை வழியில் நின்றொழுகுபவர் களாகவே இருந்துள்ளனர். அல்லாஹ்வின் திருத்தூதர் (ஸல்) அவர்கள் காலையிலும் மாலையிலும் தவறாமல் எங்கள் வீட்டிற்கு வருவார்கள். ஒருநாளும் இது தவறியதில்லை"

அண்ணல் நபியின் அன்புத் தோழரான அபூபக்ர் (ரழி) அவர்களின் மனைவி ஹழ்ரத் உம்மு ரூமான் (ரழி) அவர்கள் அசைக்க முடியாத ஈமானிய உறுதி, நாகரீகம், உபசரிப்பு, நாவடக்கம் ஆகிய நற்குணங்களோடு வரலாற்றில் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அப்துர் ரஹ்மான் (ரழி) என்றொரு குதிரை வீரரையும் ஆயிஷா (ரழி) என்ற அறிவின் சிகரத்தை அவனிக்குத் தந்து அன்னை உம்மு ரூமான் (ரழி) சிறந்த முன் மாதிரித் தாயாகத் திகழ்ந்தார்கள்.

சோதனைகளின்போது கணவருக்கும் துணை நின்று முன் மாதிரி மனைவியாக உயர்ந்து நின்றார்கள். இஸ்லாத்திற்காக கஷ்டங்களை இன்முகத்தோடு ஏற்று முன்மாதிரி முஃமினாக ஏற்றம் பெற்றார்கள்.

இஸ்லாத்தை முன்னெடுத்தச் செல்வதிலும் அதைப் பரப்புவதிலும் தன் பங்கினை குறை யின்றித் தந்த அன்னை உம்மு ரூமான் (ரழி) ஹிஜ்ரி ஆறாம் ஆண்டு துல்ஹஜ் மாதத்தில் அல்லாஹ்வின் அழைப்பை ஏற்று இறுதிப் பயணம் மேற்கொண்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்,

அன்புச் சகோதரிகளே! அந்த மாதர்குல மாணிக்கத்தை வழிகாட்டியாய் ஏற்று வாழும் போது நீங்களும், சரித்திர நாயகிகளாகலாம். அல்லாஹ்வின் அழிவில்லா அன்பைப் பெறலாம். சாதனைகளைப் பதிவு செய்திட வரலாறு தயார்... சாதனை படைத்திட நீங்கள் தயாரா..?

ஆதார நூல்கள் - புகாரீ, அல் இஸாபா, அல் இஸ்தீஆப், அத்தபகாத்துல் குப்ர.



# கேள்வி பதில் டாக்டரைக் கேளுங்கள்..!

மருத்துவவம் தொடர்பான உங்கள் கேள்விகளுக்கு முதியோர் நல மருத்துவர் டாக்டர்

**வி.எஸ்.நடராஜன்**

பதில் அளிக்கிறார்.

எனக்குப் பெரிய தொந்தரவு எதுவும் இல்லை. சில மாதங்களுக்கு முன்பு இரவில் அடிக்கடி யூரின் போகிறது என்று டாக்டரிடம் சென்றேன். அவர் ஸ்கேன் மற்றும் பி.எஸ்.ஏ. பரிசோதனை செய்தார். புராஸ்டேட்டில் வீக்கம் அதிகம் இல்லை. ஆனால் பி.எஸ்.ஏ.வின் அளவு சற்று அதிகமாக இருக்கிறது. எதற்கும் ஒரு பெட் ஸ்கேன் பரிசோதனை பார்த்தால் இது சாதாரண புராஸ்டேட் வீக்கத்தினாலா அல்லது புராஸ்டேட் புற்றுநோயினாலா என்பதைத் தெரிந்துகொள்ளலாம் என்று புராஸ்டேட் வீக்கத்திற்கு மட்டும் மருந்து எழுதிக் கொடுத்தார். எனக்கு ஒரு சந்தேகம்?

பி.எஸ்.ஏ. புராஸ்டேட் புற்றுநோயைத் தவிர வேறு ஏதாவது காரணங்களினால் அதிகமாகுமா? இதை உங்களின் மூலம் அறிய ஆவலாக இருக்கிறேன்.

**– திரு. சுவாமிநாதன், வயது 77, கடலூர்.**

உங்களுடைய அறிவு சார்ந்த கேள்விக்கு எனது பாராட்டுகள்..!

புரோஸ்டேட்டிலிருந்து பி.எஸ்.ஏ. (Prostatic Specific Antigen) எனும் திரவம் கரக்கப்பட்டு அது ரத்தத்தில் கலக்கிறது. ஆரோக்கியமான ஆண்களின் பி.எஸ்.ஏ. குறைவாக இருக்கும். ஆண்களின் புராஸ்டேட் சுரப்பியின் அளவு அதிகமாகும்போது பி.எஸ்.ஏ.வும் அதிகமாகிறது. பி.எஸ்.ஏ.வின் சரியான அளவு 0-4 ng/ml (இது வயதிற்கு ஏற்றவாறு சற்று மாறுபடக்கூடும்). புராஸ்டேட்டில் புற்றுநோய் இருந்தால் பி.எஸ்.ஏ.வின் அளவு மிக அதிகமாக இருக்கும்.

**பி.எஸ்.ஏ. அதிகமாவதற்கு வேறு காரணங்கள்**

1. ஆசனவாயில் விரலை நுழைத்து புராஸ்டேட் வீக்கம் அடைந்துள்ளதா என்ற பரிசோதனைக்குப் பின்பு.

2. புராஸ்டேட்டில் நோய்த்தொற்று (Prostitis) ஏற்பட்டால்.

3. திடீரென்று சிறுநீர் அடைப்பட்டுவிட்டால்.

4. சிறுநீர்த்தாரையில் சிறுநீரை வெளியேற்றும் குழாயைப் பொறுத்துவது (Urinary Catheter)

5. சிறுநீர்த்தாரையில் நுண்கருவியைச் செலுத்தும் பரிசோதனைக்குப் பின்பு (Cystoscopy)

ரத்தத்தில் பி.எஸ்.ஏ. அதிகமாவதற்குப் பல காரணங்கள் உள்ளன. நீங்கள் முதலில் மருத்துவர் அறிவுரையின்படி பெட் ஸ்கேன் பரிசோதனை செய்து கொள்ளுங்கள். பெட் ஸ்கேனில் புராஸ்டேட் புற்றுநோய் என்று தெரிந்தால் புராஸ்டேட்டிலிருந்து சிறுகட்டியை எடுத்து பயாப்சி பரிசோதனை செய்து கொள்வது அவசியம். ஆகையால் இனியும் காலம் தாழ்த்தாமல் எனது ஆலோசனைப்படிச் செயல்படுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு ரொம்ப நாளாக ஒரு சந்தேகம். அதற்கு நீங்கள்தான் சரியான பதில் தருவீர்கள் என்ற எண்ணத்தில் இக்கடிதத்தை எழுதுகிறேன்.

எனக்கு கடந்த 10 ஆண்டுகளாக சுகர் மற்றும் பி.பி. உள்ளது. ஓரளவு கட்டுக்குள் இருக்கிறது. இருந்தாலும், இத்தொல்லை உள்ளவர்களுக்கு கிட்னி பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்று கேள்விப்பட்டேன். அது உண்மையா? கிட்னி பாதிப்பின் அறிகுறிகள் என்ன? அதைத் தெரிந்துகொள்ள என்னென்ன டெஸ்ட்டுகள் செய்துகொள்ள வேண்டும். உங்களின்



vaigarai velicham official

விவரமான பதில் எனது சந்தேகத்தைத் தீர்ப்பது மட்டுமல்லாமல் இது போன்ற தொல்லைகள் உள்ள பலருக்கும் உதவுமல்லவா?

**- திருமதி. கிரீஜா, வயது 48, புதுச்சேரி.**

உங்களின் கடிதத்தில் குறிப்பிட்டது முற்றிலும் சரியே. நீரிழிவு நோய் மற்றும் உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்கள் நோயைக் கட்டுக்குள் வைக்கவில்லை என்றால் சிறுநீரகம் மட்டுமல்லாமல் பிற உறுப்புகளான இதயம், கல்லீரல், ரத்தக்குழாய்கள் மற்றும் நரம்பு மண்டலம் போன்ற எல்லா உறுப்புகளையும் பாதிக்கும்.

சிறுநீரகச் செயலிழப்புக்கு என்று குறிப்பிடும் படியான தொல்லைகள் ஏதுமில்லை. சிறுநீரகத்தின் செயல்திறன் சுமார் 30-40% குறைந்த பின்னரே நோயின் அறிகுறிகளான சோர்வு, உடலில் நீர் கோர்த்தல், சிறுநீர் வடிவது குறைதல், பசியின்மை, விக்கல், வாந்தி மற்றும் அரிப்பு போன்ற தொல்லைகள் தோன்றலாம். ஆகவே தொல்லை ஏதுமில்லாமல் இருந்தாலும் வருடத்திற்கு ஒருமுறையாவது கீழ்க்காணும் சிறுநீரகப் பரிசோதனை செய்துகொள்வது மிகவும் அவசியம்.

**ஸ்கேன் பரிசோதனை**

வயிற்று ஸ்கேன் சிறுநீரகத்தின் அளவு 9-11 cm நீளமும், 3-5 cm அகலமும் இருத்தல் வேண்டும்.


**சிறுநீர் பரிசோதனை**

ஆல்புமின் (புரதம்) : சிறுநீரில் புரதம் +, ++, +++ என்று இருந்தால் சிறுநீரகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

எனக்குக் கடந்த சில மாதங்களாக இரண்டு காதுகளிலும் ஒரே இசைச்சலாக இருக்கிது. காதில் அழுக்கு இருக்குமென்று சொட்டு மருந்து போட்டுப் பார்தேன். அதில் காது இரைச்சல் சிறிது குறையவில்லை.

**- திரு. சந்தானம், வயது 77, தேனி.**

வெளிப்புறச் சத்தங்கள் இன்றி, காதிற்குள் ஏற்படும் ஒருவிதச் சத்தத்தைத்தான் காது இரைச்சல் என்கிறோம். இரைச்சல் தொடர்ந்து இருக்கலாம். அல்லது விட்டு விட்டும் வரலாம். காது கேளாமை, காதில் மெழுகு அடைப்பு, உட்காது பாதிப்பு, நாள்பட்ட நோய்த்தொற்று மற்றும் மருந்துகள் ஆகியவை காது இரைச்சல் வரக் காரணங்களாகும். காது இரைச்சலுக்குச் சிகிச்சை அளிப்பது மிகக் கடினமானது மட்டுமல்ல, சற்று ஏமாற்றம் அளிப்பதும்கூட. காது இரைச்சலுக்கான காரணத்தைக் கண்டறிய காது, மூக்கு, தொண்டை மருத்துவரை ஆலோசிக்கவும். சிகிச்சை முறைகளினால் தக்க பயன் அளிக்கவில்லையென்றால் காது இரைச்சலை ஒரு நண்பனாக ஏற்றுக்கொண்டு வாழ்வதே ஒரு சிறந்த வழியாகும்.


நூலைப்பெற
போன்:
7401213394
7358278146
8148129887
விலை
ரூ.50/-

முஸ்லிம்களை ஏன் கட்டுப்படுத்தாது என்றால், அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 25 முஸ்லிம்களுக்கும், சிறுபான்மையினருக்கும் மத விவகாரங்களில் முழு சுதந்திரத்தை வழங்குகின்றது. அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் ஆற்றல் மிக்கவையா? வழிகாட்டும் கொள்கைகள் ஆற்றல் மிக்கவையா என வருகின்றபோது அடிப்படை உரிமைகளே ஆற்றல் மிக்கவை. ஆகவே வழிகாட்டும் கொள்கையில் அமைந்துள்ள பிரிவு 44 நம்மை எந்த விதத்திலும் முஸ்லிம்களை கட்டுப்படுத்தாது. (ஆதாரம் *The Muslim of India. A Documentary Record by A.G.Noorani P.157-158)*

- நூலிலிருந்து




நூலைப்பெற
போன்:
7401213394
7358278146
8148129887
விலை
ரூ.25/-

இந்த சித்திரவதைக் கூடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள், தாங்கள் எங்கே அழைத்துச் செல்லப்படுகின்றோம் என்பதை அறிந்திடவே மாட்டார்கள். அவர்களின் கண்களை கட்டித்தான் அழைத்துச் செல்வார்கள். அவர்களை யாரும் சந்திக்க இயலாது. அவர்கள் தங்களை சித்திரவதைப் படுத்துபவர்களை மட்டுமே பார்த்திட இயலும். இவற்றில் முக்கிய சித்திரவதைக் கூடம் மும்பையிலுள்ளது. ஹயசநல – ஆய்ரி வசதி கூடம் என இதற்குப் பெயர். இங்கே நான்கு அறைகள் இருக்கின்றன. இங்கே வைத்துதான் 2006 மாலேகான் குண்டு வெடிப்போடு சம்மந்தப்பட்ட செய்யத் கான் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்பவர் விசாரிக்கப்பட்டார். சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்.

- நூலிலிருந்து




# தெரிந்துகொள்வோம் ரத்தச் சோகையைப் பற்றி.!

**ரத்தத்தில்** ஹீமோகுளோபின் அளவு ஆண்களுக்கு-13 g/dl, பெண்களுக்கு-12 g/dl இருக்க வேண்டும். 10 கிராமிற்கு குறைவாக இருந்தால் ரத்தச்சோகை எனப்படும்.

**ரத்தச்சோகை வரக் காரணங்கள்**

1. சத்துணவு குறைவு.

உதாரணம் - இரும்புச் சத்து, ஃபோலிக் அமிலம், வைட்டமின் பி12

2. உடலிலிரந்து ரத்தம் வெளியேறுதல்

உதாரணம் - வயிற்றுப்புண், மூலம், வயிறு, பெருங்குடலில் உள்ள கட்டி

3. மாதவிடாய் அதிகமாக இருந்தால்

4. சிறுநீரகம் மற்றும் சிறுநீரகப் பையில் புற்றுநோய்

5. குடலில் உள்ள பூச்சிகள்

உதாரணம் - கொக்கிப்புழு

6. சிவப்பு அணுக்கள் உற்பத்தியாவது குறைதல்

உதாரணம் - தொற்றுநோய், முடக்குவாதம், புற்றுநோய், தைராய்டு தொல்லை, சிறுநீரகச் செயலிழப்பு.

**அறிகுறிகள்**

1. சோர்வு, 2. பசியின்மை
3. முச்சு வாங்குதல், 4. படபடப்பு
5. நாடித்துடிப்பு, 6. கால்களில் வீக்கம்

**சிகிச்சை முறைகள்**

ரத்தச்சோகை ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. முழு உடல் மற்றும் ரத்தப் பரிசோதனைகளைச் செய்த பின்னர், ரத்தச்சோகைக்கான காரணத்தைக் கண்டறிந்து அதற்குத் தக்க சிகிச்சை அளித்தால் பூரணகுணம் அடையலாம்.

உதாரணம்

1. வயிற்றுப் புண் - ஆண்டாசிட் மாத்திரை

2. மூலம் - அறுவை சிகிச்சை

3. தைராய்டு தொல்லை - தைராய்டு தொல்லைக்கு மாத்திரை

4. புற்றுநோய் - அந்நோய்க்கான சிகிச்சை

5. மாத்திரை - இரும்புச்சத்து, ஃபோலிக் அமிலம் மற்றும் வைட்டமின் பி12 கலந்த மாத்திரை

இரும்புச்சத்து மாத்திரையைச் சாப்பிடும் பொழுது, காபி, டீ போன்றவற்றைத் தவிர்க்கலாம். காலையில் காபி, டீ அருந்துவதால் இரவில் இரும்புச்சத்து மாத்திரையை உணவிற்குப் பின்னர் எடுத்துக்கொள்ளலாம்.

இரும்புச் சத்து மாத்திரையைச் சாப்பிடும் பொழுது கால்சியம் மாத்திரையைத் தவிர்ப்பது நல்லது.

இரும்புச் சத்து அடங்கிய மாத்திரையை எடுத்துக்கொள்ளும்போது, வைட்டமின் சி நிறைந்த உணவுகளையும் சேர்த்து எடுத்துக் கொண்டால் உடலில் இரும்புச் சத்து நன்கு உறிஞ்சப்படுகிறது. எனவே ரத்தச்சோகை உள்ளவர்கள் வைட்டமின் சி அதிகமுள்ள உணவு வகைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

உதாரணம் - ஆரஞ்சு, எலுமிச்சை, நெல்லிக்காய், கொய்யா மற்றும் பச்சைக் காய்கறிகள்.

**இரும்புச் சத்து அதிகமுள்ள உணவுகள்**

கீரை வகைகள், கறிவேப்பிலை, புதினா, கொத்தமல்லி, பீட்ரூட், சுண்டைக்காய், கத்திரிக் காய், உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ், காலிஃப்ளவர் இலை, பச்சைப் பட்டாணி, வாழைப்பூ, சிகப்பு அரிசி, உளுத்தம் பருப்பு, அவல், கோதுமை மாவு, வெல்லம், தேன், பேரீச்சம்பழம், மாதுளை, நாவல் பழம், உலர்ந்த திராட்சை, ராகி, ஈரல், கோழி, இறைச்சி.


vaigarai velicham official



# நோன்பு ஏன் கடமையாக்கப்பட்டது.!

'ரமலான் மாதம் வந்துவிட்டால் சுவனத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன. நரகத்தின் வாசல்கள் அடைக்கப்படுகின்றன. ஷைத் தான்கள் விலங்கிடப்படுகின்றனர்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் அபூஹூரைரா (ரழி),
நூல் புகாரீ-1899

இஸ்லாமியர்களுடைய வாழ்வில் ஈகைத் திருநாள் மிகவும் சிறப்பு வாய்ந்ததொரு திருநாளாகும். இஸ்லாத்தை கடைப்பிடிக்கும் ஒவ்வொருவருக்கும் ரமலான் நோன்பு என்பது மிகவும் முக்கியத்துவம் உடையது. ரமலான் என்பது 12 மாத இஸ்லாமிய நாள் காட்டியின் ஒன்பதாவது மாதமாகும். இது சந்திரனின் கட்டங்களை அடிப்படையாகக் கொண்ட சந்திரநாள் காட்டி ஆகும். சந்திர நாள்காட்டி சூரிய நாள் நாட்டியை விட 11 நாள்கள் குறைவாக உள்ளது. இதன் விளைவாக ரமலான் ஒவ்வொரு ஆண்டும் ஒரே தேதியில் தொடங்காது. அதற்கு பதிலாக காலப்போக்கில் அனைத்து பருவங்களையும் கடந்து செல்கிறது.

ரமலான் என்கிற சொல் 'சுட்டெரிக்கும் வெப்பம்' அல்லது 'வறட்சி' என பொருள்படும் 'ரமிதா' எனும் அரபு மூல சொல்லில் இருந்து பெறப்பட்டது.

ரமலான் மாதம் முழுவதும் பகலில் உண்ணாமலும், நீர் அருந்தாமலும், எச்சில்கூட விழுங்காது நோன்பு இருப்பது வாழ்க்கையின் நோக்கத்தைப் பற்றி சிந்திக்கவும், எல்லா இருப்புகளையும் படைத்த இறைவனுடன் நெருக்கமாக வளரவும், பச்சாதாப உணர்வு வளரவும் உதவுகிறது. அதிகளவிலான பிரார்த் தனை மற்றும் ஆன்மிகப் பிரதிபலிப்புக்கான நேரமாக கருதப்படுகிறது.

இக்கால கட்டத்தில் பிறருக்கு தர்மம் செய்வதே பிரதானமானதாக காணப்படுகிறது. மேலும் எவ்வித எதிர்பார்ப்புமின்றி ஏழை எளியவர்களுக்கு உதவுகின்ற நிலையினையும் எடுத்தியம்பக்கூடியதொரு திருநாளாக இது அமைந்துள்ளது.

தான் உண்பதையே பிறரும் உண்ணச் செய்ய வேண்டும். தான் உடுத்துவதையே பிறரையும் உடுத்தச் செய்ய வேண்டும். இரப்போர்க்கு தன்னிடம் உள்ளத்தில் நல்லவற்றையே ஈதல் வேண்டும் என்பது நபிகளார் வாக்கு.

**வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து (திருக்குறள் 221)**

ரமலான் நோப்பின் நிறைவாக ஈதுல் பித்ர் எனப்படும் ரமலான் பண்டிகை ஆண்டுதோறும் ஷவ்வால் முதல் பிறை தினத்தன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

'ஒவ்வொரு நன்மையான காரியத்திற்கும் பத்து முதல் எழுநூறு மடங்கு வரை கூலி வழங்கப்படுகிறது. ஆனால் நோன்பு எனக்கே உரியது. எனவே, அதற்கு நானே கூலி வழங்கு வேன்' என்று அல்லாஹ் கூறுவதால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

அறிவிப்பாளர் அபூஹூரைரா (ரழி),
நூல் முஸ்லிம்-2119

நோன்பாளிக்கு இரண்டு மகிழ்ச்சிகள் உள்ளன. ஒன்று நோன்பு துறக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சி

யாகும். மற்றொன்று தனது இறைவனைச் சந்திக்கும்போது கிடைக்கும் மகிழ்ச்சியாகும்' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் அபூஹூரைரா (ரழி),
நூல் புகாரீ-1904

ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பது இஸ்லாத்தின் ஐந்து தூண்களில் ஒன்றாகும். ஐந்து தூண்கள் என்பது ஒவ்வொரு இஸ்லாமியரின் வாழ்க்கைக்கும் ஒரு கட்டமைப்பை வழங்கும் மார்க்கக் கடமைகள்.

எல்லா நேரத்திலும் அல்லாஹ் நம்மை பார்க்கிறான் என்ற உணர்வை நம் மனத்தில் பதிய வைத்து அல்லாஹ் விரும்புகின்ற காரியங்களை செய்யக்கூடியவர்களாகவும் வெறுக்கின்ற காரியங்களை விடக்கூடியவர்களாகவும் நாம் மாற வேண்டும். இதற்காகவே அல்லாஹ் நோன்பை கடமையாக்கியுள்ளான்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும் முஹம்மது நபி (ஸல்) அல்லாஹ்வின் இறுதி தூதர் என்றும் உறுதியாக நம்புதல், தொழுகையை நிலை நிறுத்துதல், நோன்பு நோற்றல், ஜகாத் வழங்குதல், ஹஜ் செய்தல் ஆகிய ஐந்து காரியங்கள் மீது இஸ்லாம் நிறுவப்பட்டுள்ளது.

அறிவிப்பாளர், இப்னு உமர் (ரழி),
நூல் புகாரீ-8

ரமலான் மாதம் என்பது நோன்பு நோற்பதுடன், வழக்கத்தை விட அதிகநேரம் பிரார்த்தனை செய்வதுமாகும். இது தராவீஹ் தொழுகை என்று அழைக்கப்படும்.

தனியாகத் தொழுவதைவிட ஜமாஅத்தாக தொழுவதன் அதிக நன்மையைப் பற்றி அல்லாஹ் வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

தனியாகத் தொழுவைதைவிட ஜமாஅத்தாக தொழுவது இருபத்தேழு மடங்கு சிறந்ததாகும்.

மனிதன் இந்த உலகத்தில் சராசரியாக 60 வருடம் வாழ்கிறான். அதாவது 720 மாதங்கள் வாழ்கிறான். உலகில் வாழ்நாள் முழுவதும் இறைவனை வணங்கினால் 720 மாதங்கள் மட்டுமே அவனால் வணங்க முடியும். ஆனால் ரமலானில் லைலத்துல் கத்ர் என்ற ஒரு இரவில் ஒருவர் வணங்கிவிட்டால் ஆயிரம் மாதங்கள் நின்று வணங்கினால் கிடைக்கும் நன்மையைக் காட்டிலும் கூடுதலான நன்மையை அந்த ஒரு இரவில் நின்று வணங்கி ஒருவர் அடைந்து விடலாம்.

அல்லாஹ்வின் பாவமன்னிப்பை நாம் பெறுவதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு இந்த ரமலானில் பிரத்யோகமாக ஒரு பிரார்த்தனை கற்றுத் தந்துள்ளார்கள். சிறிய பிரார்த்தனையாக இருந்தாலும் நிறைவான பொருள்கொண்ட அல்லாஹ்விடம் அதிக பெறுமதியான இந்தப் பிரார்த்தனையை நாம் அனைவரும் மனனமிட்டு அதிகமாக பிரார்த்திக்க வேண்டும்.

அல்லாஹ்வின் தூதரே! லைலத்துல் கத்ர் எந்த இரவு என என்று அறிய நேர்ந்தால் அந்த இரவில் என்ன சொல்ல வேண்டும் என்று நான் கேட்டேன். அதற்கு அவர்கள் பின்வருமாறு கற்றுத் தந்தார்கள்.

**அல்லாஹூம்ம இன்னக்க அஃபுவ்வுன் துஹிப்புல் அஃப்வ ஃபஅஃபு அன்னீ**

பொருள் - யா அல்லாஹ்! நீ மன்னிக்கக் கூடியவன். மன்னிப்பை விரும்புபவன். என்னை மன்னித்து விடு.

அறிவிப்பாளர். ஆயிஷா (ரழி),
நூல், திர்மிதீ-3435

ஒருவரின் நம்பிக்கை மற்றும் ஒழுக்கத்தை மேம்படுத்துவது, வாழ்க்கை முறையை ஆய்வு செய்வது, முன்னுரிமையை புரிந்துகொண்டு அதனை பரிசீலித்து மறுவரிசை படுத்துவதும் ரமலான் நோன்பின் முக்கிய குறிக்கோள்களாகும்.

இந்த ரமலான் நோன்பு ஒருவர் தான் செய்த சரியான மற்றும் தவறான செயல்களையும், முடிவுகளையும் ஆராய்ந்து தங்களது தவறான செயல்களை மாற்ற ஒரு பொன்னான வாய்ப்பை வழங்குகிறது.

ரமலான் மாதம் கருணை மற்றும் பச்சா தாபத்தை பிரதிபலிக்கும் நேரம். தேவைப் படுபவர்களுக்கும், வறுமையில் இருப்பவர் களுக்கும் ஜகாத் வழங்கி தங்கள் ஈகை குணத்தை வெளிப்படுத்தும் நேரம்.

ஈகைத் திருநாள் வாழ்த்துகள்...

**மகாலெட்சுமி ரமேஷ்பாபு...**

- துணைத் தலைவர்,
ஆஸ்டின் தமிழ்ச் சங்கம் டெக்ஸஸ், அமெரிக்கா.

நன்றி- தினமணி ஈகைப் பெருநாள் மலர்-2024



# நோன்பெனப் படுவது...

ஞாலத்து மகிழ்வீர்காள்
நாமும் நம் ரமலான் நோன்பிற்கு
செய்யும் முறைகளைக்
கேளீரோ

கடந்த கால பாவங்கள்
நீங்குவதற்காக
ஆயிரம் மாதங்களில்
சிறந்த மாதமான
இம்மாதத்தில்
நாங்கள் எபபோதும்
நோன்பிருக்கிறோம்.

வானத்தின் வாசல்
திறக்கப்படும் இம்மாதத்தில்
அதிகாலை உணவுண்டபின் தொழுது
நிய்யத் செய்துவிடுவோம்.

நோன்பினை நோற்று
இசைகேளோம்
உணவுண்ணோம்
பொய்பேசோம்
தீச்செயல்களைச் செய்யோம்.

தொழும் நேரம் வந்தால்
ரயில்வே ஸ்டேஷனோ
மருத்துவமனையோ
பள்ளிக்கூடமோ
கல்லூரியோயென
எங்கிருந்தாலும்
நாளுக்கு ஐந்து முறை
மண்டியிட்டுத்
தொழுதுவிடுகிறோம்.
அடிக்கடி
குர்ஆன் ஓதுகிறோம்
கத்ர் இரவில்
வணக்கம் செலுத்துகிறோம்.

ஒவ்வொரு நாளும்
தேடித் தேடி
ஏழைகளுக்கெல்லாம்
மறவாமல்
ஜகாத் என்னும்
அறவரி கொடுத்து விடுகிறோம்.

கதிரவன் மறைந்து
மேற் திசையில்
செம்மையாகிற போது

நோன்பு துறக்கலாமென
பள்ளிவாசலில்
துணிக்கடைகளில்
நகைக்கடைகளில்
தொழிற்சாலைகளில்
இன்னும்
ஆங்காங்கே
அறிவிப்பு செய்கிறார்கள்.


அறிவிப்பு கேட்டதும்
நான்
அவசர அவசரமாக
சொமோட்டாவில் ஆர்டர் செய்த
நோன்புக் கஞ்சியை
ஆபீஸிலிருந்து
சாப்பிடத் தொடங்குகிறேன்
அல்லாஹ்வின் நாமத்தைச் சொல்லி
நோன்பெனப்படுவது
சொர்க்கத்தின் என்ட்ரி டிக்கட்.

**- மழயிசை**
உதவிப் பேராசிரியர்,
கலசலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம், திருவில்லிபுத்தூர்.

நன்றி- தினமணி ஈகைப் பெருநாள் மலர்-2024

ஆங்கிலம் : JOHN FEFFER

தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்




*ஜான் பெஃபர் கூறுகின்றார்*

**முஸ்லிம்** சமுதாயத்திடையே உழைப்பவர்கள் பலர். இவர்கள் அரசியல் இஸ்லாத்தையும், போராளிகளின் இஸ்லாத்தையும் புரிந்தே வைத்திருக்கின்றார்கள். இரண்டும் வேறு வேறு என்பதையும் தெரிந்து வைத்திருக்கின்றார்கள்.

இதில் ஓர் எடுத்துக்காட்டை சொல்லிட வேண்டும், என்றால் ஆங்கில அதிகாரிகளின் செயல் ஒன்றைக் குறிப்பிடலாம். வரலாற்றின் ஒரு காலக்கட்டத்தில் ஆங்கில அதிகாரிகள் முஸ்லிம்களால் நடத்தப்பட்ட ஓர் அமைப்பாகிய பிரிட்டன் முஸ்லிம் கழகம் Muslim Association of Britan. என்ற அமைப்போடு இணைந்து செயல்பட்டார்கள். இது முஸ்லிம் சகோதரத்துவம் என்ற Muslim Brotherhood என்ற இயக்கத்தில் ஆங்கில நாட்டுப்பிரிவு. இவர்களை அண்டி அன்பு செலுத்தி வந்தார்கள். (ஆங்கில நாட்டு) பிரிட்டீஸ் நாட்டு அதிகாரிகள்.

இந்த அன்பைப் பயன்படுத்தி பின்ஸ்புரி பார்க் மஸ்ஜித் என்ற மஸ்ஜிதை அபூ ஹம்ஸாவைப் பின்பற்றியவர்களிடமிருந்து கைப்பற்றினோம். அபூஹம்ஸா என்பவர் எகிப்த்தை சார்ந்த ஓர் மார்க்க அறிஞர். அவர் மிகவும் தீவிரமான சிந்தனையுடையவராக இருந்தார். அந்த மஸ்ஜித்-இல் அதாவது பின்ஸ்புரி-இல் மக்கள், குறிப்பாக இளைஞர்கள் அவரை வந்து சூழ்ந்தார். அவர் ஒரு பெரிய இயக்கமாகவே வளர்ந்தார். அதனால் அந்த மஸ்ஜித்-ஐ அவருடைய கைகளிலிருந்து பிடுங்கிட திட்டமிட்டோம். நாங்கள் நேரடியாக தலையிட்டால் அவர் அதைப் பயன்படுத்திக்கொண்டு வேகமாக வளருவார். அதனால் முஸ்லிம் அசோசியேசன்-ஐ பயன்படுத்தினோம்.

Robert Lamber - ராபர்ட் லேம்பர்ட் என்பவர் தான், முஸ்லிம்களின் நடவடிக்கைகளைக் கவனிப்பவராக இருந்தார். இவரைக் கொண்டு தான் முஸ்லிம் அசோசியஷன் வழி அந்த மஸ்ஜித்-ஐ கைப்பற்றினோம்.

அல்கொய்தா போன்ற அமைப்புகளை எதிர்கொள்வதற்கு ஜிஹாத்-ஐ புறக்கணிக்க வேண்டும் என ஓயாமல் பிரச்சாரம் செய்யும் சாலபிகள் இவர்களைக் கொண்டே சமாளிக்க இயலும் என பிரிட்டன் நம்புகின்றது.

அதேபோல் இஸ்லாத்தை இலட்சியமாகக் கொண்டு இயங்கும் எந்த அமைப்பையும், எதிர்கொள்ள சாலபி போன்ற அமைப்புகளையே பயன்படுத்துகின்றோம்.




இஸ்லாத்தை மீண்டும் அதன் பழைய பெருமையான நிலைநாட்டிடும் நிலைக்குக் கொண்டு சென்றிட வேண்டும் என விரும்பு பவர்கள் அரசியல் இஸ்லாத்தைப் பேசி சீர் செய்து விடலாம்.

நாம் அவர்களைத் தொடர்ந்து பின்பற்றி புனரமைத்தால் அவர்கள் இஸ்லாத்தின் அடிப்படைகளையே அசைக்கும் நிலைக்குப் போய்விடும்.

நமது வார்ப்பில் வளைந்த சிலரைக்கூட நாம் இங்கே குறிப்பிட இயலும். தாகா ஹூஸைன், அமின் அல்ஹூலுக்கி, அஹ்மத் கலாஃபுல்லாஹ் இவர்கள் மெத்தப் படித்த மேதாவிகள் என அறியப்படுபவர்கள். இவர்கள் அல்குர்ஆன். இது அருளப்பட்ட அதே வடிவில் இருக்கின்றது என எடுத்துக்கொள்ள இயலாது என்ற கருத்தைப் பரப்பி வருகின்றார்கள். குர்ஆனை அப்படியே எப்படி ஏற்றுக்கொள்ள இயலும்? என்ற வினாவை எழுப்பி வருகின்றார்கள்.

அதேபோல் இஸ்லாத்தில் ஈடுபாடு கொண்ட பெண்களை - பெண்ணியம் பற்றி பேச வைத்தோம். அவர்கள் இஸ்லாத்திற்குள் பெண்ணியத்தைப் புகுத்த முனைந்து எல்லோரையும் குழப்பி வருகின்றார்கள். எடுத்துக்காட்டாக ஜெய்னப் அன்வர் மலேசியாவில் இருக்கும் மலேசியன். இஸ்லாமிய சகோதரிகளின் குழுமம், அதில் அங்கம் வசிக்கும் பெண்கள் ஆகியவர்களைக் குறிப்பிடலாம்.

ஜான்எக்ஸ்போசிட்டோஎன்பவர், 1962க்கும்-1965க்குமிடையே கத்தோலிக்க கிருஸ்தவ மதத்தில் நடந்த மாற்றங்களைப்போல் - இஸ்லாத்தைப் பின்பற்றுபவர்களிடையும் நடந்துள்ளது என்கின்றார். ஜான் எக்ஸ்போசிட்டோவின் கணிப்பின்படி முஸ்லிம் உலகில் வளர்ந்து வரும் மக்கள் குழுமம் ஒன்றிருக்கின்றது. அவர்கள் குறிப்பிடத்தக்க ஒரு குழுமம். ஆனால், இஸ்லாத்தில் பல புனரமைப்புகளைக் கொண்டு வந்திட வேண்டும் என ஆசைப்படுபவர்கள். அதற்காக உழைப்பவர்கள் இவர்கள் வயதான வர்கள் என்றில்லை. ஏராளமான இளைஞர்களும் இருக்கின்றார்கள். இந்த இளைஞர்கள் தங்கள் நாட்டிலும், தங்கள் நாட்டுக்கு வெளியேயும், கல்வி கற்றவர்கள். மேலை நாடுகளிலும் கல்வி கற்றவர்கள். மேலை நாடுகளில் Religious Pluralism மக்களின் பன்முகத்தன்மை அதிகமாகப் பேசப்பட்டு வருகின்றன. அதன் தாக்கம், இந்த இளைஞர்களிடம் தாராளமாகவே இருக்கின்றன.

இன்ஷா அல்லாஹ் தொடரும்.

# இணைந்து இருங்கள்... பிரிந்து விடாதீர்கள்...

"நிச்சயமாக முஃமீன்கள் (யாவரும்) சகோதரர்களே. ஆகவே, உங்கள் இரு சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானம் உண்டாக்குங்கள். இன்னும் உங்கள் மீது கிருபை செய்யப்படும் பொருட்டு, நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள்" *(அல்ஹிஜிராத்-10)*

இன்றைய உலகில் முஸ்லிம்கள் எல்லா விதத்திலும் வலிமையுடையவராக இருந்தும் நம் கண் முன்னே நம்முடைய இஸ்லாமிய சமூகத்திற்கு ஏற்படும் இழப்புகளை சரி செய்ய முடியாமல் இருப்பதற்கு மிக முக்கியக் காரணம் நாம் பிரிந்து இருப்பதுதான்.

முஸ்லிம்களிடையே பிரிவினை என்பது எந்தளவிற்கு ஆகிவிட்டது என்றால் சமூக வாழ்விலும் சரி, இயக்க ரீதியாகவும் குடும்ப ரீதியாகவும் இன்னும் தனிப்பட்ட வாழ்விலும், ஒருவருக்கொருவர் ஏதாவதொரு குற்றம் சுமத்தி பிரிந்து வாழ்கிறோம்.

ஆனால், நம்மைப் படைத்த இறைவன் நம்மைப் பார்த்துக் கூறுகிறான் :

"அல்லாஹ்வின் கயிற்றைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். பிரிந்து விடாதீர்கள் என்கிறான். இன்னும் குர்ஆனில் பல இடங்களில் முஃமின்கள் சக முஃமின்களோடு எப்படி இருக்க வேண்டும், எப்படி இருக்கக் கூடாது. நாம் இணக்கமாக இருக்க என்ன செய்ய வேண்டும் என்பதை தெளிவாக அல்லாஹ்வும், அவனுடைய தூதர் முஹம்மது (ஸல்) அவர்களும் நமக்கு கூறுகிறார்கள்.

### ஒருவருக்கொருவர் பரிகாசம் செய்ய வேண்டாம்....

"முஃமின்களே ஒரு சமூகத்தார் பிறிதொரு சமூகத்தாரை பரிகாசம் செய்ய வேண்டாம். ஏனெனில் (பரிகசிக் கப்படுவோர்) அவர்களைவிட மேலானவர்களாக இருக்கலாம். (அவ்வாறே) எந்தப் பெண்களும், மற்றெந்தப் பெண்களையும் (பரிகாசம் செய்ய வேண்டாம்) ஏனெனில் இவர்கள் அவர்களைவிட மேலானவர்களாக இருக்கலாம். இன்னும் உங்களில் ஒருவருக்கொருவர் பழித்துக் கொள்ளாதீர்கள். இன்னும் (உங்களில் ஒருவரையொருவர் (தீய) பட்டப் பெயர்களால் அழைக்காதீர்கள். ஈமான் கொண்டபின் (அவ்வாறு தீய) பட்டப் பெயர் சூட்டுவது மிகக் கெட்டதாகும். எவர்கள் (இவற்றிலிருந்து) மீளவில்லையோ அத்தகையவர்கள் அநியாக்காரரர்கள் ஆவார்கள்" *(அல்ஹிஜிராத்-11)*

### பிறர் குறைகளை ஆராயாதீர்கள்

"முஃமின்களே (சந்தேகமான) பல எண்ணங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில் நிச்சயமாக எண்ணங்களில் சில பாவங்களாக இருக்கும். (பிறர் குறைகளை) நீங்கள் துருவித் துருவி ஆராய்ந்துக் கொண்டிராதீர்கள். அன்றியும் உங்களில் சிலர் சிலரைப் பற்றிப் புறம் பேச வேண்டாம். உங்களில் எவராவது தம்முடைய இறந்த சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவாரா? (இல்லை) அதனை நீங்கள் வெறுப்பீர்கள். இன்னும் நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள். நிச்சயமாக பாவத்திலிருந்து மீள்வதை அல்லாஹ் ஏற்றுக்கொள்பவன். மிக்க கிருபை செய்பவன்"

*(அல்ஹிஜிராத்-12)*

### தீயவனின் செய்தியை நம்பாதீர்கள்...

"முஃமின்களே ஃபாஸிக் (தீயவன்) எவனும் உங்களிடம் ஒரு செய்தியைக் கொண்டு வந்தால் அதைத் தீர விசாரித்துக் கொள்ளுங்கள். (இல்லையேல்)


vaigarai velicham official

அறியாமையினால் (குற்றமற்ற) ஒரு சமூகத் தாருக்கு நீங்கள் தீங்கு செய்துவிடலாம். பின்னர் நீங்கள் செய்தவை பற்றி நீங்களே கைசேதப் படுபவர்களாக (கவலைப்படுபவர்களாக) ஆவீர்கள்." (அல்ஹுஜிராத்-6)

**முஸ்லிம்களுக்கு கெடுதல் செய்பவன் சாபத்திற்குரியவன்...**

"ஒரு முஸ்லிம் சகோதரனுக்கு கெடுதல் செய்பவனும் அவருக்கு எதிராக சதி செய்பவனும் சாபத்திற்குரியவர்கள்." (திர்மிதி)

**முஸ்லிமை கேவலமாக கருதக்கூடாது...**

"ஒரு முஸ்லிம் (மற்ற முஸ்லிமுக்கு) சகோதரராகும். அந்த சகோதரரை மோசடி, பொய் மூலம் ஏமாற்றாதீர்கள். அவருடைய மானத்தைக் கெடுத்து பொருளை அபகரித்துக் கொலை செய்வது தடுக்கப்பட்டதாகும். அவரை கேவலமாக மதிப்பது கெட்ட செயலாகும். (திர்மிதி)

**முஸ்லிம்களைத் திட்டாதே...**

முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள் :

எவரேனும் உன்னிடமுள்ள குறைகளைச் சொல்லி உன்னைத் திட்டினால் நீ அவனுடைய குறைகளைச் சொல்லி திட்டாதே. காரணம் அந்த பாவம் அவனையே சாரும். (அபுதாவூத்)

**மூன்று நாட்களுக்கு மேல் பேசாமல் இருக்கக்கூடாது...**

"அல்லாஹ்வின் அடியார்களே (அன்பு காட்டுவதில்) சகோதரர்களாய் இருங்கள். ஒரு முஸ்லிம் நம் சகோதரருடன் (மனஸ்தாபம் கொண்டு) மூன்று நாட்களுக்குமேல் பேசாமல் இருப்பது அனுமதிக்கப்பட்டதன்று" என்று முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரீ)

"தனது முஸ்லிம் சகோதரனுடன் மூன்று இரவு (பகலுக்கு மேல்) வெறுத்திருப்பது கூடாத செயலாகும். எனவே மூன்று இரவு (பகலுக்கு மேல்) வெறுத்திருக்கும் நிலையில் மரணிப்பவன் நரகம் நுழைவான்." (அபுதாவூத்)

இதுபோன்ற ஏராளமான குர்ஆன் வசனங்களும், ஹதீஸ்களும் முஸ்லிம்களை ஒற்றுமையாய் இரக்க வலியுறுத்துகிறது. அல்லாஹ் குர்ஆனில் சூரா ஹாமீம் ஸஜ்தாவின் 34ஆவது வசனத்தில் "நன்மையும் தீமையும் சமமாக மாட்டா நீங்கள் (தீமையை) நன்மையைக் கொண்டே தடுத்துக் கொள்வீராக. அப்பொழுது யாருக்கும். உமக்கிடையே பகைமை இருந்ததோ அவர் உற்ற நண்பரைப் போல ஆகிவிடுவார்"

அல்லாஹ் கூறுவதைப்போல்
நாம் நன்மையைக் கொண்டு
பகைமையை களைவோம்.
ஒற்றுமையெனும் கயிற்றை
வழுவாக பிடிப்போம்.
பலமான சமுதாயமாக மாறுவோம்.

இன்ஷாஅல்லாஹ்.



நோய் தீர்க்கும் காய்கறிகள்...

# காலிஃப்ளவர்!

காலிஃப்ளவர், குளிர்ப் பிரதேசக் காய்கறி, குளிர்காலத்தில் இது அதிகமாகக் கிடைக்கிறது. இத்தாலியில் அதிகமாக விளைவிக்கப்பட்டது. ஆனாலும், காலிஃப்ளவர் முதன்முதலில் ஆசியாவில்தான் பயிரிடப்பட்டது.

எண்ணற்ற மருத்துவக்குணங்கள் அடங்கியது காலிஃப்ளவர். இந்தப் பூக்களில் பொட்டாசியம், சோடியம், இரும்பு, பாஸ்பரஸ், மக்னீசியம், வைட்டமின் ஏ, சி, மாவுச்சத்து, புரதம், சிறிதளவு கால்சியம், சோடியம், கொழுப்பு ஆகியவை இருக்கின்றன. கண் பார்வைக்குத் தேவையான கேரோட்டின் சத்து, நார்ச்சத்து ஆகியவை இந்தப் பூவில் அதிகம்.

இதை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொண்டால் உடல் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். இதைச் சாப்பிட்டால் மலச்சிக்கல் வராது. உடல் மெலியும்.

இது உஷ்ணத்தைத் தணிக்கும். இதைச் சாப்பிட்டால் சளி குறையும். உடல் வறட்சியைப் போக்கும். இருமல் குறையும். வாய் துர்நாற்றம் நீங்கும். உடல் இளைப்புநீங்கும்.



காலிஃப்ளவர் மேனியை மினுமினுப்பாக்கும். தண்ணீரில் இந்தப் பூவை வேகவைப்பதைவிட நீராவியிலோ மைக்ரோவேவ் அவனிலோ வேகவைக்கலாம். அப்படி செய்தால் வைட்டமின் சி சத்து அதிகரிக்கும்.

மேலும், காலிஃப்ளவர் கொழுப்புச் சத்து இல்லாத காய்கறி, குறைந்த கலோரி கொடுக்கும். அதனால், இதய நோய்க்கு இதமான பூ இது. யாருக்கு நல்லது? புற்றுநோயால் அவதிப்படுபவர்களுக்கு எதிர்ப்பு சக்தியைத் தரும். புற்றுநோய் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும்.

**– நன்றி : முதுமை எனும் பூங்காற்று**


இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு....!




வேர்கள் வெளியீட்டகம்

மட்காவ்ன் (கோவா) குண்டு வெடிப்பு (2009):

2009ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் தேதி தீபாவளிக்கு ஒரு நாள் முன்பு மட்கால்ன் நகரைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இந்துக்கள் ஒன்று கூடும் இடத்தை வெடிகுண்டு வைப்பதற்கென தேர்வு செய்திருந்தார்கள், சம்பவ இடத்தில் ஒரு கைப்பையை வைத்து விட்ட்டிருந்தார்கள். அதில் கான் மார்கெட் என அச்சிடப்பட்டிருந்தது.

அந்தப் பையில் முஸ்லிம்கள் பயன்படுத்தும் அத்தர் நறுமணக் குப்பிகள் இருந்தன.

அதாவது திட்டமிட்டப்படி இந்தக் குண்டு வெடித்திருந்தால் நூற்றுக்கணக்கான அப்பாவி இந்துக்கள் மாண்டிருப்பார்கள். காவல்துறையின் சந்தேகம் உடனடியாக முஸ்லிம்கள் மீது தான் விழும். முஸ்லிம்கள் பலர் சிறைப்பட்டிருப்பார்கள். அவர்களுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகள் புனையப்பட்டு படுபயங்கரமான விஷயங்கள் ஊடகங்களில் பரப்பப்பட்டிருக்கும். அவையாவும் குற்றப்பத்திரிகையாக தாக்கல் செய்யப்படும். அவையும் ஊதி ஊதி பெருக்கப்படும். பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இவையாவும் பொய்யானவை, உமையான குற்றவாளிகளை காவல்துறை கைது செய்யவில்லை என்று நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்யும்.......

– இந்த நூலிலிருந்து

படியுங்கள்! நாடு எங்கே போய்க் கொண்டிருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்!

பாசிசத்தை மாய்க்கவும் – பாரதத்தை பாதுகாக்கவும் முன் வாருங்கள்

விலை ரூ.30/–

போன் : 7401213394 / 7358278146 / 8148129887

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்



# வேர்கள்

## பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | **சிறையில் எனது நாட்கள்**<br>ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் | - ரூ.350.00 |
| 2. | **ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு**<br>மு. குலாம் முஹம்மது | - ரூ.140.00 |
| 3. | **சாதி ஒழிந்தது** - டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 4. | **End of Casteism** T.M. Mani | - ரூ.50.00 |
| 5. | **அஹமதாபாத் குண்டுவெடிப்புகள்**, மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 6. | **டெல்லி குண்டுவெடிப்புகள்**, மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 7. | **நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் விரிவாக்கப்பட்ட பதிப்பு** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 8. | **மால்கம்**-X, மு.குலாம் முஹம்மது | - ரூ.120.00 |
| 9. | **தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம்** டி.எம்.மணி | - ரூ.20.00 |
| 10. | **செந்தமிழ்நாட்டுச் சேரிகள்**, டி.எம்.மணி | - ரூ.40.00 |
| 11. | **கர்கரேயை கொலை செய்தது யார்?** | - ரூ.250.00 |
| 12. | **சிந்திப்பீர் செயல்படுவீர்**, நா.கோதண்டபாணி | - ரூ.15.00 |
| 13. | **ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்**, ப.கோபால கிருஷ்ணன் | - ரூ.40.00 |
| 14. | **சாதி ஒழிந்தது** (ஹிந்தி) டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 15. | **நாம் பிரிந்து விடவேண்டாம்**, பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.175.00 |
| 16. | **தாலிபானின் பிடியில்**, மு. குலாம் முஹம்மத் | - ரூ.150.00 |
| 17. | **தீண்டாமைக்குத் தீர்வு** | - ரூ.30.00 |
| 18. | **பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு**<br>மு. குலாம் முஹம்மத் | - ரூ.110.00 |
| 19. | **பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள்**, மு. குலாம் மஹம்மத், | - ரூ.90.00 |
| 20. | **இஸ்லாமிய நாகரிகம்**,<br>முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.130.00 |
| 21. | **கஷ்மீரின் பாதி விதவைகள்**, மு. குலாம் முஹம்மத், | - ரூ.70.00 |

| | | |
|---|---|---|
| 22. | **எது முதலில்?**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.450.00 |
| 23. | **சாதி ஒழிந்தது** (கன்னடம்) | - ரூ.50.00 |
| 24. | **அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன?**<br>டி.எம். உமர் ஃபாரூக் | - ரூ.20.00 |
| 25. | **கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்?** மு. குலாம் முஹம்மத் | - ரூ.30.00 |
| 26. | **முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம்**<br>செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.15.00 |
| 27. | **இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும்** | - ரூ.50.00 |
| 28. | **இஸ்லாம் வழங்கும் தண்டனைகள்** | - ரூ.40.00 |
| 29. | **இஸ்லாமும் விஞ்ஞானமும்** | - ரூ.30.00 |
| 30. | **இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா?** | - ரூ.50.00 |
| 31. | **இஸ்லாமும் பெண்களும்** | - ரூ.60.00 |
| 32. | **இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா?** | - ரூ.70.00 |
| 33. | **தேசப்பிரிவினைக்கு யார் காரணம்?**<br>விரிவாக்கப்பட்ட பதிப்பு, மு. குலாம் முஹம்மத் | - ரூ.100.00 |
| 34. | **திருக்குர்ஆன் கூறும் பொறுமை**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.80.00 |
| 35. | 26/11- **விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்?** | - ரூ.220.00 |
| 36. | **ஒரு தலித் போராளியின் வாழ்வும்,**<br>**அவர் காட்டிய வழியும்** - அ.மார்க்ஸ் | - ரூ.20.00 |
| 37. | **முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்**<br>வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.10.00 |
| 38. | **நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்?**<br>தி.லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் | - ரூ.10.00 |
| 39. | **குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்?**<br>சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் | - ரூ.25.00 |
| 40. | **இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன்**<br>**லேப்டாப்பில் இருந்ததென்ன?** | - ரூ.20.00 |
| 41. | **கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான்**<br>கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் | - ரூ.25.00 |
| 42. | **கூரியூர் ஜின்னா ஷஹீத்** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 43. | **முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும்** | - ரூ.20.00 |
| 44. | **இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு,** எஸ்.எம். முஷ்ரிப், | - ரூ.30.00 |
| 45. | **சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம்,**<br>**காந்திஜி கொலை ஏன்? எப்படி?** | - ரூ.30.00 |


vaigarai velicham official

| | | |
|---|---|---|
| 46. | **பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்**<br>எஸ்.எம். முஷ்ரிப், IPS, தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.400.00 |
| 47. | **குஜராத் : 2002 பெண்கள் குழந்தைகளுக்கெதிரான கொடூரங்கள்,** தமிழில்: வளர்மதி | - ரூ.150.00 |
| 48. | **இஸ்லாம் ஒன்றே வழி!**<br>அனிசுத்தீன் அஹமத், தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.120.00 |
| 49. | **இஸ்லாம் உங்கள் பார்வைக்கு**<br>ஹமுத அப்த் அல் அத்தி, தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.400.00 |
| 50. | **முஸ்லிம்கள் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?**<br>ஹள்ரத் அபுல்ஹஸன் நத்வி (ரஹ்), தமிழில் : மௌலவி அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ | - ரூ.300.00 |
| 51. | **சீனாவின் பிடியில் உய்கூர் முஸ்லிம்கள்** | - ரூ.20.00 |
| 52. | **இஸ்லாம் நாங்கள் தேர்தெடுத்த மார்க்கம்** | - ரூ.100.00 |
| 53. | **முஹம்மது (ஸல்) நமது காலத்திற்கு அனுப்பப்பட்ட நபி**<br>கரன் ஆம்ஸ்ட்ராங் | - ரூ.20.00 |
| 54. | **நானொரு RSS முழுநேர ஊழியன் எனது வாழ்க்கைப் பயணம்** | - ரூ.50.00 |
| 55. | **பொதுசிவில் சட்டம் முழு வரலாற்று பின்னணி** | - ரூ.50.00 |
| 56. | **அலாவுத்தீன் கில்ஜியும் பத்மாவதியும்** | - ரூ.40.00 |
| 57. | **எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர்** | - ரூ.60.00 |
| 58. | **சிக்கல் நாயக்கன்பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை** | - ரூ.60.00 |
| 59. | **பா.ரஞ்சித் அவர்களின் உரையும் ஜி.வி.உமர் ஃபாரூக் அவர்களின் கவலையும்** | - ரூ.25.00 |
| 60. | **முஸ்லிம்களை வகுப்புவாதத்தின் பக்கம் இழுத்துக் கொண்டிருப்பது யார்** | - ரூ.20.00 |
| 61. | **அயா சோபியா உருவான வரலாறு** | - ரூ.50.00 |

## எமது விற்பனையில்...

| | | |
|---|---|---|
| 01. | **கோவை கலவரத்தில் எனது சாட்சியம்**<br>A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் | - ரூ.100.00 |
| 02. | **மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்**<br>ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு | - ரூ.100.00 |
| 03. | **குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள்**<br>ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, | - ரூ.170.00 |
| 04. | **நாடார்கள் வரலாறு கருப்பா? காவியா?**<br>தி.லஜபதி ராய், மூத்த வழக்கறிஞர் | - ரூ.140.00 |
| 05. | **பலி கடாக்கள்** | - ரூ.300.00 |

## BOOKS IN ENGLISH

| | | |
|---|---|---|
| 1. | **END OF CASTEISM** - T.M. Umar Farooq,<br>English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam | **- Rs.50.00** |
| 2. | **THE GREAT BETRAYAL** - Elyass Davidson, By Pharos Media | **- Rs.695.00** |
| 3. | **MUHAMMED THE PROPHET FOR OUR TIME**<br>Karen Armstrong | **- Rs.325.00** |
| 4. | **KAFKA LAND - PREJUDICE<br>LAW AND COUNTER TERRORISM** - Manisha Sethi | **- Rs.350.00** |
| 5. | **WHO KILLED KARKARE**<br>The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, | **- Rs.300.00** |
| 6. | **26/11 PROBE WAY JUDICIARY ALSO FAILED** - S.M. Mushrif | **- Rs.275.00** |
| 7. | **ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION**<br>Kamaluddin Ahamed | **- Rs.60.00** |
| 8. | **MUSLIMS AGAINST PARTITION OF INDIA**<br>Shamsul Islam, Pharos Media | **- Rs.280.00** |
| 9. | **PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN**<br>(EPITOMS OF HINDU MUSLIM UNITY) - Syed Naseer Ahamed | **- Rs.25.00** |
| 10. | **IMAGE AND SUBSTANCE-MODI'S FIRST YEAR OF OFFICE**<br>Nilofar Suhrawardy | **- Rs.150.00** |
| 11. | **Innocent Prisoners** | **- Rs.495.00** |
| 12. | **Brahminists Bombed Muslims Hanged** | **- Rs.350.00** |
| 13. | **Kodikkal- TheLiving Witness of Social Justice** | **- Rs.300.00** |

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது**

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

| | | |
|---|---|---|
| 01. | **ஜாதி ஒழிந்தது** - டி.எம். உமர் பாரூக் | - ரூ.60.00 |
| 02. | **நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி**<br>கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ் | - ரூ.30.00 |

# வேர்கள் பதிப்பகம்

52/1, கோனிக்கா பில்டிங், மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

GPay **8148129887** Vaigarai Velicham Official

தொடர்புக்கு : **8148129887, 7401213394**

வழியாக புத்தகம் ஆர்டர் செய்ய **9786214186**

**Vaigarai Velicham Official** **vaigarai velicham official**

**darultrust@yahoo.com** **Website : Darulislam.in**



Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002